# நாடகமும் அரங்கியலும்

## ஆசிரியர் வழிகாட்டி

## தரம் 9

**(2018ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்பெறுவதற்கானது)**

அழகியற்கல்வித் துறை
மொழிகள், மானுடவியல் சமூகவிஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்
மஹரகம.
www.nie.lk
info@nie.lk

நாடகமும் அரங்கியலும்,
ஆசிரியர் வழிகாட்டி.
தரம் - 9.
பாடத்திட்டம் - 2018

© தேசிய கல்வி நிறுவகம், மஹரகம.

ISBN

முதலாம் பதிப்பு : 2018
தேசிய கல்வி நிறுவகம்.

அழகியற்கல்வித் துறை,
மொழிகள், மானுடவியல், சமூகவிஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.
மஹரகம

இணையத்தளம் **: www.nie.lk**
மின்னஞ்சல் **: info@nie.lk**

பதிப்பு :

# பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, ஆரம்ப, இடைநிலைக் கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதற்பாகத்தினைத் தேசிய கல்வி நிறுவகம் அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பெற்ற தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளையும் விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக்களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவுவாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம் பாகம் 2015ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பெற்று வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடைநிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பெற்ற முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கி நடைமுறைப்படுத்தப்பெறும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களுக்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடுகளையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டும் புதிய ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஒருவராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினைப் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக்கப்பெற்ற பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரியர் வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பெற்ற பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரியர் வழிகாட்டி நூல்கள், மற்றும் புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரியர் மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக் கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழிற் சந்தைகளுக்குத் தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர்களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர,
பணிப்பாளர் நாயகம்,
தேசிய கல்வி நிறுவகம்,
மஹரகம,
இலங்கை.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும் நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கும் கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக் கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்பெறும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்த தன்மையைத் தேசிய மட்டத்திற் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள்,தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற் காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டி, ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூட பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

பாடநிறைவில் அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப் பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றி வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். இவ்வாசிரியர் வழிகாட்டி, மகிழ்வளிக்கத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

**பிரதிப் பணிப்பாளர் நாயகம்,**
மொழிகள், மானுடவியல், சமூக விஞ்ஞான பீடம்,
தேசிய கல்வி நிறுவகம்.

**கலைத்திட்டக்குழு**

**ஆலோசனையும் வழிகாட்டலும்:** **கல்விசார் அலுவல்கள் சபை.**
தேசிய கல்வி நிறுவகம்.

**பாட நிபுணத்துவ ஆலோசனை:** **கலாநிதி சி. மௌனகுரு,**
தகைசார் ஓய்வுநிலைப் பேராசிரியர்,
கிழக்குப் பல்கலைக்கழகம்.

**பாட இணைப்பாக்கம்:**
- **திரு. கே.ஜி. அஜித் ரூபசேன**
  செயற்றிட்டத் தலைவர், அழகியற்கல்வித் துறை.

**எழுத்தாளர் குழு:**

**(வெளிவாரி)**
- **திரு. செ. செல்வகுமார்,**
  ஆசிரியர் சேவை, யா/விக்ரோரியாக் கல்லூரி.
- **திரு. க. திலகநாதன்,**
  விரிவுரையாளர்,
  தேசிய கல்வியியற் கல்லூரி, யாழ்ப்பாணம்.
- **திருமதி. செ. எ. வைதேகி,**
  ஆசிரியர் சேவை, கிளி / பளை மத்திய கல்லூரி.
- **திருமதி. கே. ஜீவாஜினி,**
  ஆசிரியர் சேவை, யா/ கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி.
- **திருமதி. ச. ஜெயந்தி,**
  ஆசிரியர் சேவை,
  யா/ கைதடி நாவற்குழி அ.த.க. பாடசாலை.
- **திரு. பி. ரவீந்திரன்,**
  ஆசிரியர் சேவை, மட் / செட்டிபாளையம் ம.வி.
- **திரு. இ. ஜெகநாதன்,**
  ஆசிரியர் சேவை, மட்/ கோட்டைக்கல்லாறு ம.வி.
- **திரு. யோ. யோண்சன் ராஜ்குமார்,**
  ஆசிரியர் சேவை,
  யா/ திருக்குடும்பக் கன்னியர் மடம்.

**செவ்விதாக்கம்:**
- **திரு. செ. செல்வகுமார்,**
  விரிவுரையாளர், அழகியற்கல்வித் துறை.

**கணினிப் பதிப்பு:**
- **திரு. இராயப்பு,**
  **யாழ்ப்பாணம்.**

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள்

21 ஆம் நூற்றாண்டு என்பது அறிவுப் பொருளாதார யுகத்தைக் குறித்து நிற்பதாகும். உலகம் கிராமமாகச் சுருங்கியதைப் போலவே, அறிவுத் திரட்டையும் மிகமிகச் சுருக்கமான தாக்கித் தருவது இந்த நூற்றாண்டின் சவால் மிக்க பணியாகும். உலகளாவிய கல்விச் செயற்பாடுகள் அதனை நோக்கியே குவிக்கப் பெற்றுள்ளன. தொழிற்றுறை மனிதன் இயந்திரமல்லன். அவனை மனிதனாகவே வைத்திருக்கக் கலைகளே பயனுறு பங்காற்று கின்றன. ஆதலால் அன்பு, கருணை, ஒற்றுமை, நல்லிணக்கம், பிணைப்பு, பற்றுதி, படைப்பாற்றல் போன்றவற்றை மனிதர்களிடத்திற் பிரவாகிக்கச் செய்வதற்கு அழகியற் பாடங்கள் துணை செய்கின்றன.

நாடகம் மனிதரைப் பற்றிப் பேசுகிறது. அவர்கள் தமக்குட் கொள்ளும் உறவை இரத்தமும் சதையுமாக வெளிப்படுத்துகிறது. அறிவுப் பொருளாதார யுகத்தில் மனிதருக்கு மிக வேண்டப்பெறுகின்ற தொடர்பாடற் திறன், ஆளுமைத் திறன், கூட்டுணர்வு சார் நடத்தைகள், துல்லியமான, தெளிவான பேச்சு போன்றவற்றை விருத்தியுறச் செய்வதற்கு நாடகம் மிகவும் தாக்கவன்மையான சாதனமாகும். ஆகவேதான் இலங்கையின் பொதுக் கல்வித் துறையில் தரம் 6 முதல் தரம் 13 வரை நாடகமும் அரங்கியலும் ஒரு விளைதிறன் மிக்க பாடமாக முன்னிறுத்தப் பெற்றுள்ளது.

குறிப்பாகத் தரம் இல் செய்முறை சார்ந்த கற்றலுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப் பெற்றுள்ளது. கதை சொல்லுதல், போலச் செய்தல், புதிதளித்தல், வகிபாகம் ஏற்று நடித்தல், வேடப் புனைவு, காட்சி விதானிப்புச் செய்தல், நாடக எழுத்துரு எழுதுதல், அதனை நாடகவாக்கம் செய்தல், கணினியின் பிரயோகம் என மாணவரின் படைப்பாற்றல் மற்றும் கற்பனை விருத்தியுடன் தொடர்புடைய விடயங்கள் பாடத்திற் சேர்க்கப் பெற்றுள்ளன. அதேவேளை வகுப்பறைக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகள் தொடர்பிற் திட்டமிடுவதற்கு ஆசிரியருக்கு அதிக சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதை இந்த ஆசிரியர் வழிகாட்டி சுட்டிக் காட்டுகின்றது. ஒவ்வொரு பாடவிடய உள்ளடக்கம் தொடர்பிலும், கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கு இங்கு முன்வைக்கப் பெற்றுள்ளது. அவற்றை மாணவர்களுடன் தொடர்புறுத்து வதற்கான முறையியல் தொடர்பில், சில முன்மாதிரியான உதாரணங்கள் தரப்பெற்றுள்ளன. ஆசிரியர்கள் பாடவிடயம், வகுப்பறைச் சூழல், மாணவரின் நிலை, பாடவேளை போன்ற அம்சங்களைக் கருத்திற் கொண்டு பொருத்தமான முறையியலை வகுத்துக் கொள்ள முடியும். எவ்வாறெனினும், அவை மாணவரைச் செயற்படுபவராகவும் ஆசிரியரை வசதி செய்யும் வகிபாகத்தைக் கொண்டிருப்பவராகவும் கொள்ளும் வகையில் அமைதல் வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.

2015 முதல் கற்றற் பேறுகளை அடிப்படையாகக் கொண்ட தேர்ச்சி மையக் கலைத் திட்டம் நடைமுறைக்கு வருகிறது. ஆசிரியர் கைந்நூலிற் சில அடிப்படையான கற்றற் பேறுகள் முன்வைக்கப் பெற்றுள்ளன. ஆசிரியர்கள் ஒவ்வொரு பாடவேளையையும் திட்டமிடும்போது, அக் கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவர்கள் எத்தகைய அடைவைக் காட்டுவார்கள் என்பதை எதிர்நோக்கி மேலதிக கற்றற் பேறுகளைகளைத் தாமாகவே தயாரித்துக் கொள்ள வேண்டும். கற்றல் - கற்பித்தற் செயன்முறையின் போது கணிப்பீடு மதிப்பீடுகளைச் செய்வதன் வழியாக எதிர்பார்க்கப் பெற்ற கற்றற் பேறுகளை மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பதை அவதானித்து, பரிகாரச் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

ஆசிரியர்களின் தேடலுக்கும், படைப்பூக்கத்திற்கும் வழிசமைக்கும் வகையிற் போதிய வாய்ப்புக்கள் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. குறித்த தரத்திற் கற்கும் மாணவர்களின் வயது மற்றும் ஆளுமைப் பண்புகளுக்கு ஏற்ப, அமைக்கப் பெற்றுள்ள விடய உள்ளடக்கத்தினை எந்தளவிற்குக் கற்பிப்பது என்பதற்கான குறிப்புக்களாகப் பாடத் திட்டமிடலுக்கான அறிவுறுத்தல்கள் அமைந்துள்ளன. புதிதாக அறிமுகஞ் செய்யப் பெற்றுள்ள மற்றும் தேடிப் பெறக் கடினமான உள்ளடக்கங்கள் தொடர்பில் மாத்திரம் சற்று விரிவான குறிப்புக்கள் தரப்பட்டுள்ளன. அவ்வகையிற் செய்முறை சார்ந்த கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கைக் கட்டியெழுப்புவதற்கு இவ் வழிகாட்டி ஆசிரியர்களுக்குப் பயனுறுதி வாய்ந்ததாய் அமையும் என்று நம்புகின்றோம்.

**செயற்றிட்டக் குழு**

## உள்ளுறையாக


- பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி iii
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iv
- கலைத்திட்டக் குழு v
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான அறிவுறுத்தல்கள் vi
- விரிவான பாடத்திட்டம்
  - அறிமுகம் viii-ix
  - தேசிய இலக்குகள் x
  - அடிப்படைத்தேர்ச்சிகள் xi - xii
  - பாடக்குறிக்கோள்கள் xiii
  - பாடத்திட்டம் xiv - xxvii
  - தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு xxviii
- கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள் 1-112

# விரிவான பாடத்திட்டம்

# அறிமுகம்

இலங்கையின் கல்வி மறுசீரமைப்புக்கான செல்நெறி தொடர்பில் 2007 குறிப்பிடத்தக்கதொரு ஆண்டாகும். உலகப் பரப்பில் நிகழ்ந்து வருகின்ற உலகமயமாதற் போக்குகளுக்கேற்ப மேற்கிளம்பிய, புதிய மாதிரியிலான சவால்களுக்கு முகங்கொடுக்கும் வகையில் ஒரு பண்பு மாற்றம் அந்த வருடத்தில் தான் தொடங்கியது. புதிய சகாப்தத்திற்கான கல்வி மறுசீரமைப்பு எனத் தெரியவந்த தேர்ச்சி மையக் கலைத்திட்ட நோக்கே அது. இதுவரை காலக் கல்விப் போக்கில் அறிதல் ஆட்சிக்கு மாத்திரமே வழங்கப்பெற்றிருந்த முக்கியத்துவத்திற்கு அது முடிவுகட்ட முனைந்தது.

ஒன்றிணைந்த ஆளுமைப் பண்புகளான சிந்தனைத் திறன்கள், சமூகத் திறன்கள், சுயதிறன்கள் என்பவற்றை விருத்தி செய்யும் வகையிலான சிறந்த பொதுக் கல்வியை வழங்குவது முதலாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் முக்கிய நோக்கமாக அமைந்திருந்தது.

2015 முதல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள, புதிய சகாப்தத்தின் இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பானது, தேர்ச்சியை அடிப்படையாகக் கொண்ட மாணவர் மையக் கலைத்திட்டத்தை இன்னொரு தளத்திற்கு எடுத்துச் செல்லும் பயனுறுதி வாய்ந்த நடவடிக்கை ஆகும். ஏனெனில், அது அடுத்துவரும் இருபது ஆண்டுகளில் தேசிய, சர்வதேசிய ரீதியில் சந்திக்க நேரிடும் நோக்குகள், போக்குகள், மாறுதல்கள், சவால்கள் என்பவற்றிற்கான வருமுன் காக்கும் நடவடிக்கையாகும்.

உலகளாவிய விஞ்ஞான, தொழில்நுட்ப இலத்திரனியல் விருத்தி காரணமாக எமது அறிவுத் திரட்டில் பாரிய மாற்றம் ஏற்பட்டு வருகிறது. பழைய அறிவின் இடத்தில் புதிய அறிவு தோன்றியுள்ளது. இந்த அறிவுப் பிரவாகம் காரணமாக, கைத்தொழில் யுகத்திலிருந்து அறிவுப் பொருளாதார யுகத்திற்கான மாறுதல் ஒன்று நடைபெற்று வருகிறது. உலக மனிதன் என்கிற கருத்தாக்கம் விருத்தியுற்று வருகிறது. எனவே, எமது மாணவர் சமூகம் படைப்பாற்றலற்ற மனன கலாசாரத்திற்குள் இருக்க முடியாது. இந்த நிலைமைகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வல்லமையுடைய தலைமுறையை உருவாக்குவது என்பது நமது பொதுக் கல்வித்துறைக்கு விடப்பட்ட சவாலாகும். எனவே,

1. தாமாக முன்வந்து தொடங்கும் மனப்பாங்குள்ள
2. தீர்மானங்களை எடுக்கும் திறனுடைய
3. பிரச்சினை தீர்க்கும் வல்லமையுடைய
4. முரண்பாடுகளை முகாமை செய்யும் ஆற்றலுள்ள
5. மற்றவர்களுடன் தாக்கவன்மையான தொடர்பாடலை மேற்கொள்ளத்தக்க

6. குழுவாகப் பணியாற்றும் இயலுமையும், மனமும் உள்ள
7. தலைமைதாங்கும் பண்புடைய
8. மொழியறிவுடைய

புதிய பரம்பரையொன்றை எழுச்சிபெறச் செய்யும் தேவை பொதுக் கல்வித் துறைக்கு ஏற்பட்டிருக்கிறது.

இவ்வாறான, நிலைமைகள் சிந்தனைகளைக் கருத்துடன் உள்வாங்கிக் கொண்டுதான் நாடகமும் அரங்கியலும் புதிய பாடத்திட்டம் ஆக்கப் பெற்றுள்ளது. நாடகம் மனிதர்களுடன் இரத்தமும் சதையுமான தொடர்பைக் கொண்டிருக்கின்ற ஒரு அவைக்காற்றுக் கலை ஆகும். எனவே, நாடகம் மனிதரின் உணர்ச்சிகள், எண்ணங்கள், அபிலாஷைகள், விழுமியங்கள், திறன்கள் மற்றும் பண்பாடு என்பவற்றுடன் ஊடாடுகின்ற கலை வடிவம் ஆகின்றது. இதன் மூலமாக நல்லிணக்கம், ஒற்றுமை, பிணைப்பு, பற்றுறுதி போன்ற பண்புகளுடன் கூடிய ஒன்றிணைந்த ஆளுமைத் திறன்களை விருத்தி செய்ய முடியும். ஆகவே, நாடகமும் அரங்கியலும் தேசிய இலக்குகளை அடைவதற்கான மிகநெருக்கமான பாடமாகவும் உள்ளது.

புதிய சகாப்தத்திற்கான இரண்டாவது கலைத்திட்ட மறுசீரமைப்பின் போது, கலைத்திட்டச் சட்டகத்தில் குறிப்பிடத்தக்க கட்டமைப்பு மாற்றங்கள் எவையும் செய்யப்பெறவில்லை. அதேவேளை, பாடத்திட்டத்தில் கற்றற் பேறுகள் என்கிற விடயம் இணைக்கப்பட்டுள்ளது. கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் நிறைவில் மாணவரிடம் எதிர்பார்க்கப்பெறுகின்ற அடைவைச் சுட்டுவனவாக கற்றற் பேறுகள் அமைகின்றன. கணிப்பீடு மதிப்பீடுகள் மூலம் கற்றற் பேறுகளை அடையாளம் கண்டுகொள்ள முடியும். இந்த அடித்தளத்தில் நின்றே நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டம் வகுக்கப்பட்டுள்ளது.

பொதுக் கல்வியானது மாணவர்களை வேலையுலகிற்குத் தயார்ப்படுத்துவதற்கான அடித்தளத்தை இடவேண்டும் என்கிற வகையில் நாடகமும் அரங்கியலும் பாடத்திட்டமானது எழுத்துருவாக்கம், ஒப்பனை, ஆடை வடிவமைப்பு, ஒலி விதானிப்பு, ஒளி விதானிப்பு, காட்சி விதானிப்பு போன்ற கலை நுட்ப விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருக்கின்றது, இதன் ஊடாகத் தொழிற் தேர்ச்சியும், படைப்பாக்க ஆளுமையும் உடையவர்களாக மாணவர்கள் உருவாக முடியும். அதனுடன் கூடவே நாடகக் கலைஞர்களாக , மானுட நேயமிக்கவர்களாக, அழகியல் நயப்புணர்வுடையவர்களாக அவர்கள் மிளிர முடியும் என்பது எமது நம்பிக்கையாகும்.

தவிர, பிரதான பாடங்களை இலகுவாகக் கற்பிப்பதற்கான முறையாகவும், அவதானம், கருத்தூன்றல், தர்க்க சிந்தனை என்பவற்றிற்கான அடிப்படைத் திறன்களை விருத்தி செய்யக் கூடிய துறையாகவும் நாடகம் வளர்ந்து வரும் பின்னணியில் நாடகமும் அரங்கியலும் பாடப் பயில்வு வழியாக மற்றப் பாடங்களையும் வினைத்திறனுடன் கற்க வசதி செய்ய முடியும் எனவும் எதிர்பார்க்கப் பெறுகின்றது.

அழகியற்கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்.

# தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசியப் பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டி எழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.

2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதி சிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.

3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கட்டுப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு, என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும் ஜனநாயக வாழ்க்கைமுறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.

4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.

5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்க சிந்தனை, தற்றுணிபு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல் மற்றும் உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.

6. தனிநபரதும் தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தைப் போஷிக்கக் கூடியதும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக் கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கு கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.

7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும் தயார்ப்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும், எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.

8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமுதாயத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக் கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

*(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)*

# அடிப்படைப் பொதுத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

## I. தொடர்பாடற் தேர்ச்சிகள்

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவற் தொழினுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும், செம்மையாகவும் எழுதுதல், பயன்தரு வகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப்பயன்படுத்தல், எண்ணுதல், கணித்தல், ஒழுங்கு முறையாக அளத்தல்.

சித்திர அறிவு: கோடு, உருவம் என்பவற்றின் கருமத்தை அறிதல், விவரங்கள், அறிவுறுத்தல்கள்,எண்ணங்கள் ஆகியவற்றைக் கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவற் தொழினுட்பத் தகைமை: கணினி அறிவு, கற்றலில், தொழிலில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவற் தொடர்பாடற் தொழினுட்பங்களைப் (ICT) பயன்படுத்தல்.

## II. ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வுச் சிந்தனை, அணியினராகப் பணி செய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டு பிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத்தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்
- மன எழுச்சி, நுண்ணறிவு.

## III. சூழல் தொடர்பான தேர்ச்சிகள்

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதிகம்

சமூகச் சூழல்: தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையிற் தொடர்புறும் நுண்ணுணர்வும் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

உயிரியற் சூழல்: வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழற்றொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரின தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

பௌதிகச் சூழல்: இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருள்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருள்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வும், நுண்ணுணர்வுத் திறன்களும். கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழினுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**IV. வேலை உலகத்திற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்**

- அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
- பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
- அவர்களது தொழில் விருப்புக்களையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
- அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
- பயனளிக்கக் கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடுதல்.



**V. சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்**

அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும் விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும் உள்வாங்கலும்.

**VI. ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தல், விளையாட்டு பற்றிய தேர்ச்சிகள்**

அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுநர் போட்டிகள், ஓய்வு நேரப் பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மனவெழுச்சிகள் இவை போன்ற மனித அனுபவங்கள்.

**VII. "கற்றலுக்குக் கற்றல்" தொடர்பான தேர்ச்சிகள்**

விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்திற்கேற்ப இயங்கவும் அதனை முகாமை செய்யவும் வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தலும்.

**(தேசிய கல்வி ஆணைக்குழு அறிக்கை, 2003)**

## பாடக் குறிக்கோள்கள்

- அரங்கக் கலைஞராக மிளிர்வதற்கான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ளுதல்.
- படைப்பாக்கத் திறனைப் பெறுதல்.
- அழகியல் நயப்புடையவராதல்.
- கலைஞர்களை மதிக்கும் உளப்பாங்கைக் கொண்டிருத்தல்.
- பண்பாட்டின் பாற் பற்றுறுதியும் மரபைக் கையேற்கும் மனப்பாங்கும் உள்ளவராதல்.
- தன்னாற்றலை இனங்கண்டு, செயல்முனைப்புடன் செயலாற்றுதல்.
- சமநிலை ஆளுமையை விருத்தி செய்து கொள்ளுதல்.
- தலைமைத்துவப் பண்பை உடையவராதல்.
- தன்னைச் சூழவுள்ள உலகைப் புரிந்துகொண்டு, சமூகமயமாகும் பண்பைக் கொண்டிருத்தல்.
- முரண்பாடுகளை முகாமை செய்தல்.
- மனித சுபாவங்களைப் புரிந்துகொள்வதன் மூலம் மானுடப் பண்புகளைப் பெறுதல்.
- தாம் எதிர்கொள்ளும் சவால்களுக்கு வெற்றிகரமாக முகம் கொடுக்கும் திறன் பெறுதல்.
- நேர்மனப்பாங்கினை விருத்தி செய்தல்.
- சிறந்த தொடர்பாடற் திறனை கொண்டவராதல்.
- தாமாக முன்வந்து செயலாற்றும் திறன் பெறுதல்.
- இயற்கையோடு இசைந்து வாழப் பழகுதல்.
- வளர்ந்துவரும் விஞ்ஞான தொழினுட்ப சாதனங்களை அரங்கிற் கையாளும் ஆற்றலைப் பெறுதல்.
- வாழ்தொழிலுக்கான அடிப்படைப் பயிற்சிகளைப் பெற்றுக்கொள்ளல்.
- உள ஆற்றுப்படுத்தலுக்கான அணுகுமுறையாக அமைதல்.
- ஏனைய பாடங்களை இலகுவாகக் கற்பதற்கான முறைமையாக அமைதல்.
- நுட்பங்களைக் கையாண்டு கைவினைக் கலைகளை ஆக்குதல்.
- பன்மைக் கலாசார சமூகத்துடன் சிறந்த ஆளிடைத் தொடர்பைப் பேணுதல்.

## நாடகமும் அரங்கியலும் – விரிவான பாடத்திட்டம்

## தரம்– 9

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 1.0 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார். | 1.1 நாடக வகைக்கேற்ப வேறுபடும் எழுத்துரு மூலக்கூறுகளின் பண்புகளைக் கற்றுக் கொண்டவர் ஆவார். | 1.1 நாடக வகை சார்ந்து எழுத் துருவின் மூலக்கூறுகளை நோக்குதல். | • நாடக வகைகளை முன்வைப்பார்.<br>• நாடக மூலக்கூறுகளின் உள்ளடக்கம் நாடக வகை சார்ந்து வேறுபடுவதை உணர்ந்திருப்பார். | 02 |
| | 1.2 நாடக வகைக்கேற்ப துணைக்கலை அம்சங்கள் பயன்படுத்தப்பெறும் விதம் பற்றிக் கலந்துரையாடுவார். | 1.2 நாடக வகை சார்ந்து துணைக்கலை அம்சங்களை நோக்குதல். | • நாடக வகைக்கேற்பத் துணைக்கலை அம்சங்களின் தன்மையைப் பட்டியற் படுத்துவார்.<br>• அவற்றை ஒப்பிட்டு வேறுபாடுகளைக் கண்டறிந்து கூறுவார்.<br>• நாடக வகை வேறுபாட்டுக்கேற்பத் துணைக் கலை அம்சங்களின் தன்மை வேறுபடும் என்பதை விளங்கியிருப்பார். | 02 |
| | 1.3 நாடக மோதுகை என்பதை இனங்காண்பார். | 1.3 நாடக மோதுகை. | • மோதுகை என்பதற்கு விளக்கமளிப்பார்.<br>• வெவ்வேறு மோதுகை நிலைகளை முன்வைப்பார்.<br>• நாடகம் மனிதனை மோதுகை நிலையில் சித்திரிப்பது என்பதை உணர்ந்திருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 1.4 பாத்திரப் பண்புருவாக்கம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார். | 1.4 பாத்திரப் பண்புருவாக்கம். (Simulation) | • பாத்திரப் பண்புருவாக்கம் என்பதற்கு விளக்கமளிப்பார்.<br>• பாத்திரப் பண்புருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை முன்வைப்பார்.<br>• நாளாந்த வாழ்வில் பல்வேறு பாத்திரங் களையும் அவதானிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பார். | 02 |
| | 1.5 நாடக மோடிகளை இனங்காண்பார். | 1.5 யதார்த்த, யதார்த்த மல்லாத மோடிகள். | • நாடக மோடி என்ற எண்ணக்கருவை விளக்குவார்.<br>• பிரதான நாடக மோடிகளை எடுத்துரைப் பார்.<br>• நாடக மோடிகளின் பண்புகளை முன்னளிக்கை செய்வார்.<br>• நாடக மோடிகளுக்கிடையிலான வேறுபாடு களை விளங்கியிருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 2.0 கற்பனையை நெறிப்படுத்தி, சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார். | 2.1 பாத்திரக் குணாதிசயங்களைக் கற்று, சித்திரிப்புத் தொடர்பில் விளக்கத்தைப் பெற்றவர் ஆவார். | 2.1 பாத்திரக் குணாதிசயங்கள். | • பாத்திரம் என்பதற்கு விளக்கம் அளிப்பார்.<br>• ஒவ்வொரு பாத்திரமும் தனித்துவமான குணாதிசயங்களைக் கொண்டிருக்கின்றது என்பதை அறிந்திருப்பார்.<br>• சித்திரிப்பில் பாத்திரங்களின் குணாதிசயங்கள் செல்வாக்குச் செலுத்துவதைக் கண்டுணர்ந் திருப்பார். | 02 |
| | 2.2 பாத்திர வகிபாகம் பற்றிக் கற்றுக் கொள்வார். | 2.2 பாத்திரம் பற்றிய கற்கை. | • ஒரு பாத்திரத்திற்குப் பல்வகை வகிபாகங்கள் உள்ளன என்பதை அறிந்திருப்பார்.<br>• ஒரு பாத்திரத்தின் பல்வேறு வகிபாகங்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• ஒவ்வொரு வகிபாகத்திற்கும் தனித்துவமான இயல்புகள் இருப்பதை விளங்கிக் கூறுவார்.<br>• தம்மைப் பற்றிய சுய விளக்கத்தைப் பெற்றிருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 2.3 வழங்கப்பெற்ற ஈழத்து வரலாற்றுக் கதைக்கு அமைவாக ஆக்கம் புரிவார். | 2.3 நாடக எழுத்துரு ஆக்கம் | • நாடகமாக்கக்கூடிய ஈழத்து வரலாற்றுக் கதை ஒன்றைத் தெரிந்தெடுத்திருப்பார்.<br>• எழுத்துருவிற்குரிய மூலக்கூறுகளைப் பயன் படுத்தி, வரலாறு சார் நாடகத்தினை எழுதுவார். | 03 |
| | 2.4 நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங் களைத் திட்டமிட்டு வடிவமைப்பார். | 2.4.1 காட்சிவிதானிப்பு மாதிரியை உருவாக்குதல். | • காட்சியமைப்பினை உருவாக்கும் திறன் பெற்றிருப்பார்.<br>• எழுத்துருவிற்கு அமைவாகக் காட்சியமைப் புக்களைத் திட்டமிடுவார். | 03 |
| | | 2.4.2 கைப்பொருள்களை வரைந்து வர்ணம் தீட்டுதல். | • கைப்பொருள்களைப் பட்டியலிடுவார்.<br>• தம் சுயவிளக்கத்திற்கேற்பக் கைப்பொருள் களை வரைவார்.<br>• கைப்பொருளுக்குப் பொருத்தமான வர்ணங் களைப் பிரயோகிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 2.4.3 மேடைப்பொருள் மாதிரியை உருவாக்குதல். | • மேடைப்பொருள்களை வகைப்படுத்துவார்.<br>• மேடைப்பொருள் தயாரிப்பிற்காகக் சூழலில் கிடைக்கக்கூடிய வளங்களைச் சேகரிப்பார்.<br>• மேடைப்பொருள்களை உருவாக்குவார். | 02 |
| | | 2.4.4 வேட உடை மாதிரியை வடிவமைத்தல். (துணிகளைப் பயன்படுத்தி) | • வேட உடை மாதிரிக்குப் பொருத்தமான துணிகளைச் சேகரித்துக் கொண்டு வருவார்.<br>• வேட உடையைப் பொருத்தமான முறையில் வடிவமைப்பார். | 02 |
| | | 2.4.5 அணிகலன்களை வடிவமைத்தல். | • அணிகலன்களைப் பட்டியற்படுத்துவார்.<br>• அணிகலத் தயாரிப்பிற்குச் சூழலில் கிடைக்கும் பொருள்களைச் சேகரிப்பார்.<br>• கலைத்துவமான முறையில் அணிகலன் களைத் தயாரிப்பார். | 02 |
| | | 2.4.6 சூழலில் கிடைக்கத்தக்க ஒளி முதல்களைக் கண்டறி தலும் பயன்படுத்தலும். | • சூழலில் கிடைக்கக்கூடிய தீப்பந்தம், விளக்கு போன்றவற்றைச் சேகரிப்பார்.<br>• அவற்றை ஒளிவிதானிப்பிற்கேற்பப் பயன் படுத்துவார்.<br>• சூழலில் கிடைக்கும் ஒளிமுதல்களை நாடகத்தில் பயன்படுத்தலாம் என்பதை உணர்ந்திருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 3.0 நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார். | 3.1 மாணவர்களால் பாத்திரப் பண்புருவாக்கம் செய்யப்பெற்ற பாத்திரங்களை நால்வகைச் சித்திரிப்புக்களைக் கையாண்டு சித்திரிக்கக் கூடியவர் ஆவார். | 3.1.1 பாத்திர ஒன்றிப்பு. | • பாத்திர இயல்புகளை விளங்கிக் கூறுவார்.<br>• சித்திரிப்பிற்குத் தம்மைத் தயார்ப்படுத்துவார். | 02 |
| | | 3.1.2 பாத்திரச் சித்திரிப்பு | • பாத்திரச் சித்திரிப்புக்கு நால்வகைச் சித்திரிப்பு அவசியம் என்பதை விளங்கியிருப்பார்.<br>• நால்வகைச் சித்திரிப்புக்களையும் வெளிப்படுத்தும் திறனைப் பெற்றிருப்பார். | 02 |
| | 3.2 தாம் கற்றுக்கொண்ட பாத்திர வகிபாகங் களை ஆக்கபூர்வமாகச் சித்திரித்துக் காட்டுவார். | 3.2 வகிபாகச் சித்திரிப்பு | • தாம் கற்றுக்கொண்ட பாத்திரக் குணாம்சங்களை விளங்கியிருப்பார்.<br>• பாத்திர வகிபாகங்களை ஆக்கபூர்வமாகச் சித்திரித்துக் காட்டுவார். | 03 |
| | 3.3 மாணவர்களால் ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருவின் மோடிக்கு அமைவாகத் துணைக்கலைகளைப் பிரயோகிப்பார். | 3.3 மோடிக்கு அமைவான துணைக்கலைகளின் பிரயோகம். | • நாடக எழுத்துருவின் மோடியை விளங்கியிருப்பார்.<br>• மோடிக்கேற்பத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுவார்.<br>• மோடிக்கமைவாகத் துணைக்கலைகளைப் பிரயோகிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.4 கூட்டாக அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார். | 3.4 அரங்க விளையாட்டுக்கள். | • அரங்க விளையாட்டுக்களை விளையாடும் முறையை அறிந்து கூறுவார்.<br>• கூட்டாக விளையாடும் பண்பை வெளிப் படுத்துவார்.<br>• கூட்டாக விளையாடுவதன் அனுகூலம், பிரதிகூலம் பற்றிக் கலந்துரையாடுவார். | 02 |
| | 3.5 நால்வகைச் சித்திரிப்புக் களுக்கான அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடு வார். | 3.5.1 பாத்திர மெய்நிலைகளைப் படைத்தல். | • உடலைத் தளர்நிலையில் வைத்திருப்பார்.<br>• வெவ்வேறு மெய்நிலைகளைப் படைப்பதற் கான நுட்பத்தினைப் பெற்றிருப்பார்.<br>• மெய்நிலைகள் குறிமுறையாக ஒரு செய்தியை வெளிப்படுத்தும் என்பதை விளங்கியிருப்பார்.<br>• பொருத்தமான மெய்நிலைகளைப் படைப் பதற்கு உடலைக் கையாளப் பழகிக் கொண்டிருப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 3.5.2 பாத்திர வகிபாகத்திற்குரிய பாவங்களைச் சித்திரித்தல். | • பாவ வெளிப்பாட்டுக்கு முகம் பிரதானம் என்பதை விளங்கியிருப்பார்.<br>• முகத்தின் தசைநார்களை உணர்ச்சி பாவத் திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெற்றிருப்பார். | 02 |
| | | 3.5.3 சித்திரிப்பின் போது கண் தொடர்பைப் பேணுதல். | • முகத்திலுள்ள உறுப்புக்களில் உணர்ச்சிச் செறிவான உறுப்புக்கள் கண்களே என்பதை விளங்கியிருப்பார்.<br>• கண்கள் வழியாக வேறுபட்ட உணர்வு நிலைகளைப் பரிமாற்றுவார். | 02 |
| | | 3.5.4 நாடக மோடிக்கு அமை வான சொல்லாடல்கள். | • குரல்வழியான சித்திரிப்பு நுட்பங்களை அறிந்திருப்பார்.<br>• சொல்லாடல்களின் போது அவற்றைப் பிரயோகிப்பார்.<br>• குரல்வழியான சித்திரிப்பு நுட்பங்களை அறிந்திருப்பார்.<br>• நாடகத்தின் தாக்கவன்மைக்குச் சொல்லாட லின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 3.6 மரபுவழிக் கூத்து ஒன்றின் பாத்திர வரவைப் பயில்வார். | 3.5.5 கைப்பொருள் பயன் பாட்டை முனைப்புறுத்தல். | • கைப்பொருள்களின் பயன்பாட்டை அறிந் திருப்பார்.<br>• கைப்பொருள்களைக் கருத்து வெளிப் பாட்டுடன் பிரயோகிப்பார். | 02 |
| | 3.7 மாணவர்களால் ஆக்கப்பெற்ற எழுத்துருவின் ஒரு பகுதியைப் புதிதளிப்பார். | 3.6 மரபுவழிக் கூத்தின் பாத்திர வரவு. | • வரவுப் பாடலைப் பாடுவார்.<br>• வரவு ஆட்டத்தை ஆடுவார்.<br>• ஆடல், பாடலுக்கூடாகப் பாத்திரத்தை நிலை நிறுத்துவார். | 02 |
| | | 3.7 எழுத்துருவைப் புதிதளித்தல். | • எழுத்துருவை வாசித்திருப்பார்.<br>• பாத்திரத் தெரிவை மேற்கொள்வார்.<br>• துணைக்கலை அம்சங்களைப் பயன் படுத்துவார்.<br>• புதிதளிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 4.0 இலங்கையில், நாடக அரங்கக் கலைகளின் சமூக, பண்பாட்டு, வரலாற்றுப் பின்னணியை விளக்குவார். | 4.1 சுதேச நாடகக்கலை வரலாற்றுடன் தொடர்புடைய அரும்பு நிலை களைப் பயின்று அவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளை இனங்காணக்கூடியவர் ஆவார். | 4.1 சுதேச வாழ்வியற் சடங்கு களின் ஆற்றுகைப் பண்புகள்.<br>• திருமணச் சடங்கு.<br>• மரணச் சடங்கு. | • வெவ்வேறு வாழ்வியற் சடங்குகளைப் பட்டியற்படுத்துவார்.<br>• திருமணச் சடங்கு, மரணச் சடங்கு போன்றவை நிகழ்த்தும் முறையை விவரிப்பார்.<br>• திருமணச் சடங்கு, மரணச் சடங்கு நிகழ்த்தும் முறை பிரதேசத்திற்குப் பிரதேசம் பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும் என்பதை விளங்கியிருப்பார்.<br>• திருமணச் சடங்கு, மரணச் சடங்கு போன்ற வற்றில் காணப்படும் நாடக அம்சங்களை எடுத்துரைப்பார். | 02 |
| | 4.2 இலங்கையின் பாரம் பரியக் கூத்துக்கள் பற்றி அறிந்து கொள்வார். | 4.2.1 பாரம்பரியக் கூத்துக்கள் அறிமுகம். | • கூத்து என்பதற்கு விளக்கம் அளிப்பார்.<br>• பிரதேசத்திற்குப் பிரதேசம் கூத்துக்கள் வேறுபடும் என்பதை அறிந்திருப்பார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | | 4.2.2 பாரம்பரியக் கூத்துக்களின் அடிப்படையான அம்சங்கள். | • பாரம்பரியக் கூத்துக்களில் காணப்படும் பொதுவான பண்புகளைப் பட்டியற் படுத்துவார்.<br>• பாரம்பரியக் கூத்துக்களுக்குப் பிரதேச அடிப்படையில் சில தனித்துவங்கள் உள்ளன என்பதை விளங்கியிருப்பார். | |
| | 4.3 கூத்துக்கள் ஊடாக வெளிப்படும் சமூகப் பண்பாட்டுப் பெறுமானங் களை அறிவார். | 4.3 கூத்தின் சமூகப் பண்பாட்டுப் பெறுமானங்கள். | • கூத்துக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை விளங்கிக் கொள்வார்.<br>• சமூகத்தை இணைப்பதற்கான ஏற்பாடுகள் கூத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதை இனங் காண்பார்.<br>• கூத்தில் இடம்பெற்றுள்ள சமூக பண்பாட்டுப் பெறுமானங்களைப் பட்டியற்படுத்துவார். | 02 |
| | 4.4 இலங்கையில் கூத்தரங்கின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த நாடகங்கள் பற்றிப் பயில்வார். | 4.4 கூத்துக் கலைஞர்கள் பற்றிப் பயிலுதல்.<br>• பூந்தான் யோசேப்பு.<br>• நாகமணிப் போடி.<br>• முருகவேள்.<br>• குழந்தை. செபமாலை. | • கூத்துக் கலைஞர்களைப் பட்டியற்படுத்து வார்<br>• கூத்துக் கலைஞர்களின் பின்னணியை முன்வைப்பார்.<br>• கூத்தரங்கின் வளர்ச்சிக்குக் கூத்துக் கலைஞர்களின் பங்களிப்பு பற்றிக் கூறுவார். | 03 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 4.5 சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைவடிவங்களைப் பயில்வார். | 4.5 வசந்தன் கூத்து. | • வசந்தன் கூத்து ஆடப்பெறும் பிரதேசங் களைக் கூறுவார்.<br>• வசந்தன் கூத்து நிகழ்த்தப்படுவதற்கான பின்னணியை எடுத்துரைப்பார்.<br>• வசந்தன் கூத்தின் ஆடல், பாடலைப் பயின்றிருப்பார்.<br>• வசந்தன் கூத்தினைக் கூட்டாக ஆற்றுகை செய்திருப்பார். | 05 |
| | 4.6 இலங்கையில் பிரதேச ரீதியான நவீன நாடக வளர்ச்சி பற்றிக் கற்பார். | 4.6 பிரதேச ரீதியான நவீன தமிழ் நாடக வளர்ச்சி.<br>• கொழும்பு.<br>• யாழ்ப்பாணம்.<br>• மட்டக்களப்பு.<br>• மலையகம். | • ஈழத்தில் நவீன தமிழ் நாடகம் தோன்றிய முறையை எடுத்துரைப்பார்.<br>• நாடக வளர்ச்சியானது பிரதேச ரீதியாக முனைப்பு பெற்று வளர்ந்ததைக் கூறுவார்.<br>• கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களின் நாடக வளர்ச்சியைச் சுருக்கமாக முன்வைப்பார். | 05 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| 5.0 நாடகத் தோற்றப் பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானிட நேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார். | 5.1 விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நயப்பார். | 5.1 நாடக நயப்பும் - கருத் துரைப்பும்.<br>- பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் ‘சங்கிலி’.<br>• கரு.<br>• விடயப்பொருள்.<br>• சொல்லாடற் பாணி.<br>• பாத்திரங்கள்.<br>• மோதுகை. | • எழுத்துருவை வாசிப்பார்.<br>• பாத்திர இயல்புகளை முன்வைப்பார்.<br>• நாடகக் கதையை வாழ்வுடன் தொடர்பு படுத்திக் கருத்துரைப்பார்.<br>• அது வெளிப்படுத்தும் செய்தியை விளங்கி யிருப்பார்.<br>• சொல்லாடல் வழியாக மேற்கிளம்பும் நாடக மோடிகள், பாத்திரங்கள் குறித்துக் கருத் துரைப்பார். | 09 |
| | 5.2 விதந்துரைக்கப்பெற்ற எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பார். | 5.2. ஆற்றுகைநிலை நயப்பின் போதான கவனக்குவிப்பு<br>• அரங்க மோடி.<br>• பாத்திரச் சித்திரிப்பு. | • ஆற்றுகையைப் பார்த்துத் தம்மைக் கவர்ந்த விடயங்களை எடுத்துரைப்பார்.<br>• தமது நயப்பிற்குரிய காரணங்களை எடுத்துரைப்பார்.<br>• தம்மைக் கவர்ந்த பாத்திரம். எதிர்நிலைப் பாத்திரம் பற்றிக் கருத்துரைப்பார்.<br>• ஆற்றுகை வெளிப்படுத்தும் முறைக்கூடாக மோடி பற்றிய விளக்கத்தைப் பெற்றிருப்பார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றற் பேறுகள் | பாடவேளைகள் |
|---|---|---|---|---|
| | 5.3 நாடகப் படைப்பை நயத்தல் நிலையில் நின்று விமர்சிப்பார். | 5.3 நாடக விமர்சனம்<br>- கணபதிப்பிள்ளையின் ‘சங்கிலி’ | • நாடகம் தொடர்பில் நடுநிலையில் நின்று கருத்தை வெளிப்படுத்துவார்.<br>• விமர்சன ஆற்றலை வெளிப்படுத்துவார்.<br>• நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்யும் திறனைப் பெற்றிருப்பார்.<br>• நாடகத்தினைப் பார்க்கும் ஆர்வத்தினைப் பெற்றிருப்பார். | 02 |

## தவணை நிலைப்பட்ட பாடவிரிப்பு - தரம் 9

| தேர்ச்சி | தவணை 1 | பாடவேளைகள் | தவணை 2 | பாடவேளைகள் | தவணை 3 | பாடவேளைகள் | மொத்தப் பாடவேளைகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1.0 | 1.4 | 02 | 1.1<br>1.2<br>1.3 | 02<br>02<br>02 | 1.5 | 02 | 10 |
| 2.0 | 2.1<br>2.2 | 02<br>02 | 2.3<br>2.4 | 03<br>13 | - | - | 20 |
| 3.0 | 3.1<br>3.2<br>3.4<br>3.5 | 04<br>03<br>02<br>10 | 3.3<br>3.7 | 02<br>02 | 3.6 | 02 | 25 |
| 4.0 | 4.1 | 02 | - | - | 4.2<br>4.3<br>4.4<br>4.5<br>4.6 | 03<br>02<br>03<br>05<br>05 | 20 |
| 5.0 | - | - | 5.1 | 09 | 5.2<br>5.3 | 04<br>02 | 15 |
| | மொத்தம் | 27 | | 35 | | 28 | 90 |

# கற்றல் - கற்பித்தற் செயலொழுங்கிற்கான ஆலோசனைகள்

**தேர்ச்சி** 1.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.1 : நாடக வகைக்கேற்ப வேறுபடும் எழுத்துரு மூலக்கூறுகளின் பண்புகளைக் கற்றுக் கொண்டவர் ஆவார்.

**செயற்பாடு** 1.2 : "நாடக வகை சார்ந்து எழுத்துருவின் மூலக்கூறுகளை நோக்குவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பல்வேறு நாடக வகைகளையும் பட்டியலிட்டுக் காட்டியிருப்பார்.
- நாடக மூலக்கூறுகளை எடுத்துக் கூறியிருப்பார்.
- ஒவ்வொரு நாடக வகைக்கும் ஏற்ப எழுத்துரு மூலக்கூறுகளின் உள்ளடக்கம் அமைந்திருப்பதைக் கண்டிருப்பார்.
- எழுத்துரு மூலக்கூறுகளின் உள்ளடக்கத்தை நாடக வகைக்கேற்ப வேறுபடுத்தக் கூடியவராய் இருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

- நாடகங்களைப் பலவிதமாக வகைப்படுத்திப் பார்க்க முடியும். அவ்வாறான வகைப்பாட்டிற்கு நாடக எழுத்துரு மூலக்கூறுகளின் உள்ளடக்க வேறுபாடே காரணமாகும் என்பது பற்றி மேலோட்டமாக மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் கற்றல் கற்பித்தற் செயலொழுங்கு திட்டமிடப் பெறுதல் வேண்டும்.
- மாணவர்களை நான்கு குழுக்களாக்குவோம்.
- சமய நாடகம், சமூக நாடகம், சிறுவர் நாடகம், வரலாற்று நாடகம் என நான்கு வகையான எழுத்துருக்களை ஆயத்தம் செய்து வைத்திருப்போம்.
- அவற்றைக் குழுவிற்கு ஒன்றாக வழங்குவோம். வேகமான வாசிப்பில் ஈடுபடுத்துவோம்.
- அவ்வெழுத்துருக்களின் வகையைக் காட்டும் சுவரொட்டியை வகுப்பின் வெவ்வேறு இடங்களில் ஒட்டுவோம்.
- எழுத்துருவை வாசித்து முடித்த குழு ஓடிச்சென்று தமது எழுத்துரு வகையைத் தெரிவு செய்து அப்பெயர் எழுதப்பட்டுள்ள சுவரொட்டிக்கு அருகில் நிற்க வேண்டும்.
- வேகமாகவும் சரியாகவும் செயற்பட்ட குழுவைப் பாராட்டுவோம்.
- மாணவர்கள் தமது நாடகங்களைத் தெரிவு செய்ததற்கான காரணங்களை வினவுவோம்.
- மீண்டும் அந்நாடக எழுத்துருக்களைச் சற்று ஆழமாக வாசிக்கச் செய்வோம்.
- கீழ்வரும் அட்டவணை கொண்ட பத்திரத்தைக் குழுவிற்கு ஒன்றாக வழங்கிப் பூர்த்தி செய்ய வழிப்படுத்துவோம்.

| | |
|---|---|
| நாடகத்தின் பெயர் | |
| நாடக வகை | |
| கரு | |
| விடயப் பொருள் | |
| கதைப்பின்னல் | |
| பாத்திரங்கள் | |
| சொல்லாடலின் தன்மை | |
| மோதுகை | |
| மோடி | |
| மேடைக் குறிப்புகளின் தன்மை | |

* வெவ்வேறு நாடக வகைகளின் பட்டியலொன்றைத் தயாரித்து, டிமைன் தாளில் எழுதித் தயாராய் வைத்திருங்கள். அதனைக் காட்சிப்படுத்தி, நாடக வகைகள் பல்வேறு வகைப்படுத்தப் பெறலாம் என்பதை விளக்குங்கள்.
    - சமய நாடகங்கள்.
    - சமூக நாடகங்கள்.
    - வரலாற்று நாடகங்கள்.
    - இலக்கிய நாடகங்கள்.

## முதன்மைப் பதங்கள் :

- நாடக வகை
- எழுத்துரு மூலக்கூறு.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- டிமைன் தாள்.
- வெவ்வேறு நாடக வகை சார்ந்த எழுத்துருக்கள்.
- செயற்பாட்டுப் பத்திரம்.

## உசாத்துணை :

அரங்கியல் - சி. மௌனகுரு

**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.2 :** நாடக வகைக்கேற்பத் துணைக்கலை அம்சங்கள் பயன்படுத்தப் பெறும் விதம் பற்றிக் கலந்துரையாடுவார்

**செயற்பாடு 1.2 :** "நாடக வகைக்கு அமையத் துணைக்கலைகளும் அமைந் திருக்கும் என்பதைக் கற்றுக்கொள்வோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

* நாடகத்திற்கான துணைக்கலை அம்சங்களை நினைவுபடுத்திக் கூறுவார்.
* சமய நாடகம், சமூக நாடகம், சிறுவர் நாடகம், வரலாற்று நாடகம் என்பவற்றில் இடம் பெறும் துணைக்கலைகளின் தன்மைகளை முன்வைத்திருப்பார்.
* வழங்கப் பெற்ற நாடகப் பாத்திரங்களுக்கு ஏற்பத் துணைக்கலை அம்சங்கள் அமைந்துள்ள விதங்களைப் பட்டியலிட்டு வைத்திருப்பார்.
* நாடக வகை ஒவ்வொன்றுக்குமான துணைக்கலை அம்சங்கள் தனித்தன்மையானவை என்பதை ஏற்றுக் கொண்டிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

* நாடகங்கள் பல வகையானவை. அவற்றின் எழுத்துரு மூலக்கூறுகள் வேறுபட்டதைப் போன்றே நிகழ்த்து முறைகளும் வேறுபட்டவை. நாடகமொன்றை நிகழ்த்துவதற்குத் துணைக்கலைகள் இன்றியமையாதவை. அவை நாடக வகைக்கு ஏற்பவே அமைந்திருக்கும் என்பதைக் கற்றறிந்திருக்க வேண்டும் என்று இங்கு எதிர்பார்க்கப் பெறுகின்றது.
* செயற்பாடு 1.1 இல் கற்றுக் கொண்ட நாடக வகைகள் யாவை என்பது பற்றி ஒரு நினைவூட்டலுக்காகக் கேட்டுக் கொள்ளுங்கள்.
* முன்னைய வகுப்புக்களில் கற்றறிந்திருந்த நாடகத்தின் துணைக்கலைகள் பற்றி வினவி, அவற்றின் விவரத்தை வெண்பலகையிலோ, கரும்பலகையிலோ வந்து எழுத மாணவர்களை அழையுங்கள்.
    * வேட உடை.
    * ஒப்பனை.
    * அணிகலன்கள்.
    * கைப்பொருள்கள்.
    * மேடைப்பொருள்கள்.
    * தட்டுமுட்டுக்கள்.
    * இசையும் சத்தங்களும்.

- நடனம்.
- ஒளி.
- காட்சி விதானிப்பு.

* இந்தப் பட்டியலில் வரும் அணிகலன்கள் என்பது ஒப்பனையின் ஓரம்சமே என்ற போதிலும் கற்றல் கற்பித்தல் வசதிக்காகவும் முக்கியத்துவம் கருதியும் தனித்துப் பார்க்கப் பெறவேண்டியது என்பதை எடுத்துக் கூறுங்கள்.
* இந்த அலகில் துணைக்கலைகளில் வேட உடை, ஓப்பனை, அணிகலன்கள், கைப்பொருள்கள், மேடைப்பொருள்கள், தட்டுமுட்டுக்கள் என்பவற்றை மாத்திரம் தெரிந்தெடுங்கள்.
* மேற்படி துணைக்கலைகளைக் காட்டும் படங்களைக் கழித்தொதுக்கப்பெற்ற பத்திரிகைகள், நூல்கள், சஞ்சிகைகளில் இருந்து வெட்டியெடுத்து வருமாறும் வெளிக்களக் கொப்பி ஒன்றைக் கொண்டு வருமாறும் முன்னைய வகுப்பிலேயே அறிவுறுத்தல் வழங்குங்கள்.
* ஆசிரியரும் இதுபோன்ற படங்களை ஒழுங்கு செய்து வருவது நல்லது. மாணவர்களால் கொண்டுவரப்பெற்ற படங்கள் போதுமானதும், பொருத்தமானதுமாக இல்லாத சந்தர்ப்பத்தில் உங்களுடைய படங்கள் பெரிதும் துணை செய்யும்.
* செயற்பாடு 1.1 இல் பிரிக்கப் பெற்ற நான்கு குழுக்களையும் மீண்டும் குழு நிலையில் கூடுமாறு கேட்டுக் கொள்ளுங்கள். அவர்கள் முன்னிலையில் துணைக்கலைகளின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
* ஒவ்வொரு குழுவில் இருந்தும் ஒவ்வொருவரை அழைத்து, தத்தம் நாடக வகைக்குப் பொருத்தமான படங்களைத் தெரிந்தெடுக்குமாறு அறிவுறுத்துங்கள்.
* தாம் தெரிவுசெய்து கொண்ட படங்களைக் கீழ்க்காணும் அட்டவணையில் முன்மொழியப் பெற்றுள்ள விடயங்களுக்கு அமைவாகப் பாத்திரம் மற்றும் களம் என்பவற்றைக் கருத்திற் கொண்டு ஒட்டிவரச் செய்யுங்கள்.

| **துணைக்கலைகள்** | **சமய நாடகம்** | **சமூக நாடகம்** | **சிறுவர் நாடகம்** | **வரலாற்று நாடகம்** |
|---|---|---|---|---|
| வேட உடை | கடவுள் | மீனவன் | நரி | அரசன்/அரசி |
| ஓப்பனை | கடவுள் | மீனவன் | நரி | அரசன்/அரசி |
| அணிகலன்கள் | கடவுள் | மீனவன் | நரி | அரசன்/அரசி |
| கைப்பொருள்கள் | கடவுள் | மீனவன் | நரி | அரசன்/அரசி |
| தட்டுமுட்டுக்கள் | கோயில் | வீட்டுமுற்றம் | காடு | அரண்மனை |
| மேடைப்பொருள்கள் | கோயில் | வீட்டுமுற்றம் | காடு | அரண்மனை |

* மாணவர் தயாரித்தவற்றை முன்னளிக்கை செய்யச் சந்தர்ப்பம் அளியுங்கள். அவற்றினூடாகப் பின்வரும் விவரங்களைத் துணைக்கலைகள் சார்ந்து விளக்குங்கள்.
* துணைக்கலைகள் என்பவை நடிகன் தனது பாத்திரப் பண்பை வெளிப்படுத்தத் துணைசெய்வனவாகும். அவை நடிகனின் புறவாரியான நடிப்பிற்கு அழுத்தம் கொடுப்பவை.

* நடிகனைக் குறித்ததொரு கால, இட, சூழமைவில் வைத்துப் பார்ப்பதற்குத் துணைக் கலைகள் வசதி செய்கின்றன.
* நாடக வகைகள் மாறும் போது பாத்திரப் பண்பும் மாற்றமடையும். உதாரணமாக, சமய நாடகத்தில் வருகின்ற கடவுளும் வரலாற்று நாடகத்தில் வருகின்ற அரசனும் வேறுவேறான இயல்புடைய பாத்திரங்களாகும். எனவே அவற்றிற்கான வேட உடை, ஒப்பனை, அணிகலன்கள் என்பவற்றில் சில ஒத்ததன்மைகளும் வேறுபட்ட தன்மைகளும் காணப்பெறலாம்.
* இவ்வாறு நாடக வகைக்கும் துணைக்கலைகளின் பயன்பாட்டிற்கும் இடையிலான தொடர்புகளைச் சுருக்கமாகக் கூறுங்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- வெவ்வேறு துணைக்கலைகளின் படங்கள்
- டிமைன் தாள்.
- ஒட்டுப் பசை.
- மாக்கர்.

## முதன்மைப் பதங்கள் :

- துணைக்கலை.
- பாத்திரப் பண்பு.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடகத்திற்கான துணைக்கலை அம்சங்களைப் பட்டியலிடுவார்.
- ஒவ்வொரு நாடக வகையின் கீழும் இடம் பெறக்கூடிய துணைக்கலை அம்சங்களின் தன்மையைக் கூறுவார்.
- வழங்கப் பெற்ற பாத்திரங்களின் பெயர், களம் என்பவற்றிற்கு அமைவாகத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுவார்.
- நாடக வகைக்கும் துணைக்கலை அம்சங்களுக்கும் இடையிலான தொடர்பை முன்வைப்பார்.
- துணைக்கலைகள் இன்றியும் நாடகம் செய்யலாம் என்பதற்கான சான்றுகளை முன்வைப்பார்.

**தேர்ச்சி 1.0 :** நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.3 :** நாடக மோதுகை என்பதை இனங்காண்பார்.

**செயற்பாடு 1.3 :** "நாடக மோதுகை பற்றிக் கற்றுக் கொள்வோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

* மோதுகை என்பதற்கு விளக்கமளித்திருப்பார்.
* வெவ்வேறு மோதுகை நிலைகளை முன்வைத்திருப்பார்.
* நாடகம் மனிதனை மோதுகை நிலையில் சித்திரிப்பது என்பதை உணர்ந்திருப்பார்.
* மோதுகை நிலையைச் சித்திரித்துக் காட்டியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

* மாணவர்கள் தமது வாழ்க்கையில் எதிர்நோக்கிய, பார்த்து அறிந்த முரண்நிலைகளை எடுத்துக் கூறுமாறு கேட்டுக் கொண்டு, அது பற்றிக் கலந்துரையாடுங்கள். பின்னர் மாணவர்களை இருவர் இருவராகச் சேர்ந்து நிற்பதற்கு வழிப்படுத்துங்கள்.
* தமக்கிடையிலான மோதுகை ஒன்றைச் சித்திரித்துக் காட்டுமாறு கேளுங்கள்.
* யாதாயினும் ஒரு விடயம் தொடர்பில் ஏற்படுகின்ற எதிர்ரெதிர் நிலைகள், ஒன்றுக் கொன்று முரணான நிலைப்பாடுகளே மோதுகை என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* பாடசாலையில் எழக்கூடிய பல்வேறு மோதுகை நிலைச் சந்தர்ப்பங்கள் பற்றி வினவிக் கலந்துரையாடலில் ஈடுபடுங்கள்.
* மனித வாழ்க்கையில் பல்வேறு மோதுகைச் சந்தர்ப்பங்கள் எழுகின்றன என்பதனையும் கூறுங்கள்.
    - உடல் சார்ந்த மோதுகை.
    - உளம் சார்ந்த மோதுகை.
    - மனிதனுக்கும் சமூகத்துக்குமான மோதுகை.
    - மனிதனுக்கும் கடவுளுக்குமான மோதுகை.
    - மனிதனுக்கும் பிரபஞ்சத்துக்குமான மோதுகை.
    - மனிதனுக்கும் இயற்கைக்குமான மோதுகை.
* மேற்குறிப்பிட்ட மோதுகை நிலைச் சந்தர்ப்பங்கள் மனித வாழ்க்கையில் குடும்பம், பாடசாலை, ஆலயம், சந்தை, வகுப்பறை, விளையாட்டு மைதானம் போன்ற இன்னோரன்ன இடங்களில் ஏற்படலாம் என்பதை உணர்த்துங்கள்.
* மனித வாழ்க்கையினையே நாடகம் சித்திரிப்பதனால் நாடகத்தில் மோதுகை இடம் பெறும் விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள். இதனாலே தான் நாடகம் என்பது மனிதனை அவனது மோதுகை நிலையில் சித்திரிப்பதும் நாடகம் முரண்பாடுகளின் கதை எனவும் கூறப்படுகின்றது என்பதனையும் விளங்கிக் கொள்ளச் செய்யுங்கள்.

* நாடகத்தின் கூறுகளில் ஒன்றாக மோதுகை விளங்குவதை எடுத்துக் காட்டுங்கள். இதுபோன்று நாடகத்தில் மோதுகையின் அவசியத்தை எடுத்துக் கூறுங்கள். உதாரணமாக,
    - நாடகத்தின் கருப்பொருளை விளங்கிக் கொள்ள.
    - பாத்திரப் பண்பை அறிந்து கொள்ள.
    - பாத்திரச் செயல்நிலைகளைக் கண்டு கொள்ள.
    - பார்ப்போரது ரசனையைத் தூண்டிவிட.
    - கதையை வேகமாக நகர்த்த.
* மாணவர்கள் மேற்குறிப்பிட்ட பயன்பாடுகளை அறிந்து கொள்வதற்காகக் காணொளி வழியாகக் காட்சிகளைப் பார்க்க வழிப்படுத்துவதுடன் தெரிவுசெய்யப் பெற்ற நாடக எழுத்துருக்கள் சிலவற்றையும் வாசிக்க வழிப்படுத்திக் கலந்துரையாடல்களைக் கட்டியெழுப்பலாம் (பாடவேளையைக் கருத்தில் கொண்டு).

## முதன்மைப் பதங்கள் :

- மோதுகை.
- முரண்.
- சித்திரிப்பு.

## தரவிருத்தி உள்ளீடு :

- காணொளிப் பேழை.
- இறுவட்டு.
- அட்டைப் படங்கள்.
- தெரிவுசெய்யப் பெற்ற எழுத்துருப் பிரதிகள்.
- கணினி.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- மோதுகை என்பதற்கு விளக்கமளிப்பார்.
- மோதுகை நிலைச் சந்தர்ப்பங்களைப் பட்டியற்படுத்துவார்.
- நாடகத்தில் மோதுகையின் பயன்பாட்டை இனம் காண்பார்.
- பல்வேறு மோதுகை நிலைச் சந்தர்ப்பங்களைச் சித்திரித்துக் காட்டுவார்.
- மோதுகை வாழ்க்கையின் இன்றியமையா நிலை என்பதை உணர்ந்து குறிப்பிடுவார்.

## உசாத்துணைகள் :


1. அரங்கு - திரு. க. திலகநாதன்.
2. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு திரு. க. திலகநாதன்.
3. அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.

**தேர்ச்சி 1.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 1.4** : பாத்திரப் பண்புருவாக்கம் பற்றிய விளக்கத்தைப் பெற்றுக் கொள்வார்.

**செயற்பாடு 1.4** : "பாத்திரப் பண்புருவாக்கத்தில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* பாத்திரப் பண்புருவாக்கம் என்பதற்கு விளக்கமளிப்பார்.
* பாத்திரப் பண்புருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளை முன் வைத்திருப்பார்.
* நாளாந்த வாழ்வில் பல்வேறு பாத்திரங்களையும் அவதானிக்கும் பழக்கத்தைக் கொண்டிருப்பார்.
* பல்வேறு பாத்திரங்களையும் அவதானித்து அவற்றைப் பண்புருவாக்கம் செய்யும் எண்ணத்தை வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.

* காணொளியில் அன்றேல் தரப்படும் படத்தில் உள்ள பல பாத்திரங்களையும் அவதானிக்குமாறு கூறிவிட்டுப் பாடத்தைத் தொடங்குங்கள்.
* பாத்திரத்தில் காணப்பெறும் அனைத்து விடயங்களும் பாத்திரப் பண்புருவாக்கம் எனப்படும்.
* நடிகர் ஒருவர் பாத்திரம் ஒன்றைப் பண்புருவாக்கம் செய்யும் போது உடல், குரல், உளம், சமூக இயல்பு என்கிற அனைத்து விடயங்களையும் தன்னகத்தே கொண்டிருத்தல் வேண்டும்.
* பாத்திரப் பண்புருவாக்கத்தில் பின்வரும் காரணிகள் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாத்திரத்தின்;
    - உடலியற் பண்புகள்.
    - குரலியற் பண்புகள்.
    - உளவியற் பண்புகள்.
    - சமூகவியற் பண்புகள்.

**உடலியற் பண்புகள் :**

**பௌதிகத் தோற்றம்;**

- உயரம் - கட்டை, மெலிந்த, தடித்த உருவம்.
- நிறம் - சிவந்த, பொது, கறுத்த.

- வயது - குழந்தை, சிறுவர், வாலிபர், இளையோர், திருமணம் முடித்தோர், முதியோர்.
- அங்கத்தில் இழப்பு - கை, கால் இழந்தவர்கள், கண் தெரியாதவர்கள். (உ+ம்- ஈடிப்பஸ் நாடகத்தில் ஈடிப்பஸ்ஸின் ஒரு கால் கட்டை, மற்றும் ஞானசௌந்தரி, அலங்காரரூபன், திருதராட்டினன்)
- கையாளும் பொருள்கள் அன்றேல் சிறப்பாக அணிபவை, சிறப்பாகக் கொண்டிருப்பவை.

  உ+ம் : சங்கிலியன் - முடி, வாள், குதிரை.

  பாரதியார் - தலைப்பாகை.

  காந்தியடிகள் - கைத்தடி, கண்ணாடி.

  இராமன் - வில், அம்பு.

  வீமன் - கதாயுதம்.

**குரலியற் பண்புகள் :**

**பாத்திரத்திற்கேற்ற குரல்;**

- அரசன், மந்திரி, சேவகன், ஒற்றன் போன்ற அரச பாத்திரங்களுக்குள் குரல் வீச்சும் புறத்தெறிகையும் வேறுபடும்.
- எம்மோடு வாழ்ந்தவர்கள் மற்றும் வரலாற்று ரீதியாகச் சில பாத்திரங்களுக்குரிய குரல்கள் தொனியில் வேறுபடும்.

  உ+ம் : பாரதியார் - கணீரென்ற குரல்.

  கிருபானந்த வாரியார் - உரத்த, கணீரென்ற குரல்.

  சமயவாதிகள் - ஆறுதிருமுருகன், சுகி சிவம், சற்குருஜி.

  பட்டிமன்றப் பேச்சாளர்கள் - சாலமன் பாப்பையா, திண்டுக்கல் லியோனி, கம்பன் கழக ஜெயராஜ்.

  அரசியல்வாதிகள் - கலைஞர் கருணாநிதி, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, விமல் வீரவன்ச, மனோ கணேசன், சீமான், வை.கோபால்சாமி. அதிகாரிகள் போன்றோரின் குரல்களில் வேறுபாடுகள் காணப்பெறும்.

  கற்பனைப் பாத்திரங்கள் - தேவதைகள், பூதகணங்கள், பேய்கள்.

  மிருகங்கள், பறவைகள் - அவற்றின் ஒலிகள்.

**உளவியற் பண்புகள் :**

பாத்திரம் ஒன்றின் உளவியல் சார்ந்த அதன் நடத்தைகள் விருப்பு வெறுப்புக்கள், பழக்க வழக்கங்கள், செய்கைகள் எல்லாம் இவற்றுள் அடங்கும். பொதுவாக உளவியற் பண்பை வைத்துக் கொண்டே ஒருவரின் நடத்தை பற்றிக் குறிப்பிடுகிறோம். குடிகாரன், பேராசைக்காரன், துர்நடத்தைக்காரர், நல்லவன், கெட்டவன், புத்திசாலி, ஏமாளி, நயவஞ்சகன், கோபக்காரன் என்பதெல்லாம் அவ்வாறே. அதாவது உணர்ச்சி சார்ந்த விடயங்கள் இதற்குள் அடங்கும். உளவியற் பண்புகளாகவே ஆடைகள், அணிவா். இன்னொருவரைப் போலச் செய்வர். முன்மாதிரியாக நடந்து கொள்வது எல்லாம், வாலிபர்

அணியும் ஆடைகள், அணிகள், தலைமுடியை அழகுபடுத்தும் விதம் அனைத்தும்.

## சமூகவியற் பண்புகள் :

இங்கு பாத்திரம் ஒன்றின் சாதி, சமயம், அந்தஸ்து, தொழில் என்பவை அறியப்படும். உதாரணமாக, "எந்தையும் தாயும் நாடகத்தில் திருநெல்வேலி வடக்கைச் சேர்ந்த ஓய்வு பெற்ற மலாயன் பென்சனியர் சங்கரப்பிள்ளை காலமானார்" என்பதன் ஊடாக அவரது தொழில், அந்தஸ்து, கௌரவம், சமயம் என்பன தெரியவருகின்றன. சமூகக் குணாம்சங்கள் என்பன சமூகப் பின்புலம் சார்ந்து காணப்பெறுபவை. ஏழை, பணக்காரன், படித்தவன், பாமரன் என்பதெல்லாம் சமூகக் குணம் சார்ந்ததே.

## செயலொழுங்கு :

* வகுப்பிலுள்ள மாணவர்களை 5 குழுக்களாக்குங்கள். மாணவர்கள் ஏற்கெனவே காணொளியில் பார்த்த பாத்திரங்களையும் தாம் வாழ்வில் அவதானித்த பல்வேறு பாத்திரங்களையும் பற்றிக் கலந்துரையாட அனுமதியுங்கள்.
* பாத்திரங்களின் உடல், குரல், சமூகவியல் சார்ந்த விடயங்களை மனதிற் கொண்டு அவ்வப் பாத்திரங்களின் இயல்பு பற்றிக் குழுக்களாகக் கலந்துரையாட விடுங்கள்.
* ஒவ்வொரு குழுவிற்கும் பின்வரும் பாத்திரங்களில் ஒன்றை வழங்குங்கள் (அதிபர், வங்கி அதிகாரி, வைத்தியர், தாதி, வீதியோரப் பாடகர்).
* கலந்துரையாடிய விடயங்களை ஒவ்வொரு குழுவும் அறிக்கைப்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
* அறிக்கைப்படுத்தியவற்றை ஏனைய குழுக்களின் முன்னிலையில் முன்வைக்க இடமளியுங்கள்.
* ஏனைய குழுக்களின் கருத்துக்களை வெளியிடவும் செவிமடுக்கவும் சந்தர்ப்பமளியுங்கள்.
* எந்தவொரு பாத்திரத்தின் முழுமை பண்புருவாக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதைக் கலந்துரையாடுங்கள்.
* மேற்குறிப்பிட்ட விடயங்கள் (முன்னர் கலந்துரையாடிய) யாவும் பாத்திரங்களில் காணப்பட்டவையா? என்பதையும் கலந்துரையாடுங்கள்.

## முதன்மைப் பதங்கள் :

- பாத்திரப் பண்புருவாக்கம்.
- உளவியற் பண்புகள்.
- சமூகவியற் பண்புகள்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- பல்வேறு பாத்திரங்கள் கொண்ட காணொளிகள்.
- பல்வேறு பாத்திரங்களின் படங்கள்.
- A4 தாள்கள், எழுதுகருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாத்திரப் பண்புருவாக்கம் என்றால் என்ன என்பதை விளக்குவார்.
- பாத்திரப் பண்புருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகளைப் பட்டியற் படுத்துவார்.
- பல்வேறு பாத்திரங்களின் பண்புகளை உருவாக்கம் செய்வார்.
- நாளாந்த வாழ்வில் அவதானித்த பல்வேறு பாத்திரங்களின் இயல்புகளை
- விளக்குவார்.
- பாத்திரப் பண்புகளை நயப்பார்.

**உசாத்துணைகள் :**

1. நாடகக்கலை - (பிறெக்ட்) மு. ராமசாமி
2. நடிப்புக்கலை - மு. மகேந்திரன்

**தேர்ச்சி** 1.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறிகளை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** 1.5 : யதார்த்த மோடிகளை இனங்காண்பார்.

**செயற்பாடு** 1.5 : "யதார்த்த, யதார்த்தமல்லாத மோடிகளை இனங்கண்டு கொள்வோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* நாடகமோடி என்ற எண்ணக்கருவை விளங்கியிருப்பார்.
* பிரதான நாடகமோடிகளை எடுத்துரைப்பார்.
* நாடகமோடிகளின் பண்புகளை முன்னளிக்கை செய்வார்.
* நாடகமோடிகளுக்கிடையிலான வேறுபாடுகளை விளக்கியிருப்பார்.
* மோடிகளுக்கேற்ப நாடகங்களை வகைப்படுத்தியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

* பின்வரும் விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடுங்கள்.

  நாடகமோடி (Style) என்பது நாடகம் நிகழ்த்தப்படும் முறையைக் கொண்டு வகுக்கப்படுவதாகும். சிலர் மோடியைப் பாணி எனவும் குறிப்பிடுவார். தொல்காப்பியர் நாடக வழக்கு, உலகியல் வழக்கு என்பார். பரத முனிவர் லோகதர்மி, நாட்டிய தர்மி என்பார். ஆகவே இவையாவும் மோடிகள் பற்றிய பிரிப்புக்கள் ஆகும்.
* ஒவ்வொரு நாடக மோடியையும் புலப்படுத்தும் காட்சித் துண்டங்களைக் காட்சிப் படுத்துங்கள் (C.D,Video மூலம்).
* நவீன நாடக வரலாற்றில் பிரதானமாகப் பேசப்பெறும் இரண்டு மோடிகள் பற்றிப் பேசுவர்.
  - யதார்த்த மோடி.
  - யதார்த்தமல்லாத மோடிகள்.
* யதார்த்த மோடி என்பது வாழ்க்கையில் உள்ள விடயங்களைத் தெரிந்தெடுத்து உள்ளவாறே அவற்றைத் தொகுத்தெடுத்துக் கலாபூர்வமாக அரங்கியற் பண்புகளுடன் அளிக்கை செய்வதாகும்.
* அளிக்கையின் போது வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு, உடல், குரல் வெளிப்பாடுகள், உணர்வுசார் செயற்பாடுகள், அசைவுகள் யாவுமே வாழ்க்கையில் உள்ளதை ஒத்ததாகக் காணப்பெறும்.
* யதார்த்த மோடிக்கு வலுச் சேர்ப்பதாக ஒளி விதானிப்பு, இசை என்பன பயன்படுத்தப் பெறும்.

* யதார்த்தமல்லாத மோடிகள் பலவுள்ளன. அவை யாவும் யதார்த்தத்திலிருந்து வேறுபடுவன. கற்பித வாதம் (Romantic), மிகைப்பாட்டு வாதம் (Melo dramatic) என்பன யதார்த்த மோடிக்கு முன்னர் தோன்றியனவாகும்.
* காவிய பாணி, அபத்தம், அகயதார்த்தம் போன்றன யதார்த்தத்திற்குப் பின்பு தோன்றியன. அதன் காரணமாக யதார்த்த விரோத மோடிகள் (Anti - Renstic Style) என அழைக்கப்பட்டன.
* கூத்து, இசை நாடகம் என்பன யதார்த்தமல்லாத மோடிகள் ஆகும். ஏனெனில் யதார்த்தத்தில் உள்ள அம்சங்களிற்குப் புறம்பான ஆடல், பாடல்கள் அவற்றில் காணப்படுகின்றன.
* யதார்த்தமல்லாத மோடிகளில் ஆடல், பாடல் மிகைநடிப்பு, பாடகா் குழு, வேடமுக பாவனை எனப்பல அம்சங்கள் அடங்கியிருக்கும்.
* வேட உடை, ஒப்பனை, காட்சி விதானிப்பு போன்ற விடயங்களில் குறியீட்டுத்தன்மை காணப்பெறும். உ+ம் அனைத்து நடிகரும் ஒரே மாதிரியான வேட உடை அணிதல்.
* ஒளி விதானிப்பு, இசைவிதானிப்பு என்பவற்றிலும் அவ்வாறு குறியீட்டுத்தன்மை காணப்பெறும்.
* யதார்த்த மோடியில் கதை ஒன்று தொடர்ச்சியாகக் காணப்பெறும். தனிக்குடும்பம் அன்றேல் அண்டிய குடும்பங்கள் காணப்பெறும். உ+ம் எந்தையும் தாயும்.
* யதார்த்தமல்லாத மோடியில் பல்வேறு கதைகளின் தொடர்ச்சிகள், இணைவுகள் காணப்பெறும். உ+ம் விழிப்பு.
* பின்வரும் நாடகங்களைக் கொண்ட அட்டவணையைக் கவனிக்க.

| **யதார்த்த மோடி நாடகங்கள்** | **யதார்த்த விரோத நாடகங்கள்** |
|---|---|
| எந்தையும் தாயும் | கண்டறியாத கதை |
| பொருளோ பொருள் | அரசனின் புத்தாடை |
| உறவுகள் | விழிப்பு |
| ஒரு பாவையின் வீடு | மழை |
| செரிப்பழத் தோட்டம் | இராவணேசன் |
| தலைமைக் கட்டிடக்காரன் | அன்ரிகனி |
| பொருளோ பொருள் | புதியதொரு வீடு |
| நாட்டவன் நகர வாழ்க்கை | வெண்கட்டி வட்டம் |

## தரவிருத்தி உள்ளீடுகள்

- பல்வேறு மோடிமைகளில் அமைந்த நாடகங்களின் காணொளிப் பேழைகள்.
- பல்வேறு நாடக எழுத்துருக்கள்.
- A4 தாள்கள்.

## முதன்மைப் பதங்கள்

- யதார்த்த மோடிகள்.
- யதார்த்தமல்லாத மோடிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும்

- நாடக மோடி என்ற எண்ணக்கருவை விளங்கிக் கூறுவார்.
- பிரதான நாடக மோடிகளை எடுத்துரைப்பார்.
- நாடக மோடிகளின் பண்புகளை முன்னளிக்கை செய்வார்.
- நாடக மோடிகளிற்கிடையிலான வேறுபாடுகளைப் பட்டியற்படுத்துவார்.
- மோடிகளிற்கேற்ப நாடகங்களை வகைப்படுத்துவார்.

## உசாத்துணைகள் :

1. அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.
2. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு திரு. க. திலகநாதன்.
3. நாடக வழக்கு - ம. சண்முகலிங்கம், தொகுப்பு க. ஸ்ரீகணேசன்.

**தேர்ச்சி** **2.0** : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.1** : பாத்திரக் குணாதிசயங்களைக் கற்று, சித்திரிப்புத் தொடர்பில் விளக்கத்தைப் பெற்றவர் ஆவார்.

**செயற்பாடு** **2.1** : "பாத்திரம் பற்றிக் கற்போம்"

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பாத்திரம் என்பதற்கு விளக்கம் அளித்திருப்பார்.
- ஒவ்வொரு பாத்திரமும் தனித்தன்மையுடையது என்பதனை ஏற்றுக் கொண்டிருப்பார்.
- பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபட்ட குணாதிசயங்களைக் கொண்டிருப்பதனைச் செய்து காட்டியிருப்பார்.
- பாத்திரக் குணாதிசயங்கள் சித்திரிப்பில் செல்வாக்குச் செலுத்துவதைக் கண்டுணர்ந் திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

- 'பாத்திரம்' என்பதனாற் கருதப்பெறுவது யாதென விளங்கிக் கொள்வதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- பத்திரிகையில் வெளிவந்த, பிரமுகர்கள் சிலரின் படங்களை வெட்டியெடுங்கள். உதாரணமாக; ஜனாதிபதி, பிரதமர், அரசியல்வாதி, விளையாட்டு வீரர் மற்றும் பிறர். அப்படத்தில் காணப்பெறுபவர் யாரென வினவுங்கள்.
- அந்தப்படத்தில் உள்ளவரைப் போன்று செய்து காட்ட முன்வருமாறு மாணவர்கள் ஓரிருவரை அழையுங்கள். அவ்வாறு மாணவரால் சித்திரிக்கப் பெற்றவர் எவ்வாறு அழைக்கப்பெறுவார் என்பதனைக் கேட்டறியுங்கள்.
- இந்த இடத்தில் 'பாத்திரம்' என்பதனை அறிமுகம் செய்யுங்கள். வழங்கப்பெற்ற படத்தில் உள்ளவர் அவருக்குரிய பெயராலோ அன்றேல் பதவிப் பெயராலோ அழைக்கப் பெறுவார். அவரைப் போலச் செய்யும் போது மாணவர் தமக்குரிய பண்பை விட்டு இன்னொருவருக்குரிய பண்பை ஏற்கிறார். ஆகவே பாத்திரம் என்பது "தாங்கி நிற்றல்" என்ற பொருள்பட வரும் என்பதை விளக்குங்கள். அதாவது இன்னொன்றைத் தனக்குள் தாங்கி நிற்பது 'பாத்திரம்' ஆகும். நாடகம் ஒன்றில் பாத்திரத்தைத் தாங்குபவர் நடிகர் எனப்பெறுகிறார்.
- போலச் செய்தலில் ஈடுபட்ட மாணவர்களிடம் அவர்கள் எவ்வாறு அந்தப் பாத்திரத்தைச் சித்திரித்தனர் என வினவுங்கள். அவற்றை டிமைன் தாளிலோ வெண்பலகையிலோ எழுதச் செய்யுங்கள்.
- சமயற் பாத்திரம் எவ்வாறு தன்னுள் உணவைத் தாங்கி நிற்கிறதோ அவ்வாறே நாடகப் பாத்திரமானது பாத்திர வகிபாகங்களுக்குரிய குணாதிசயங்களைத் தாங்கி நிற்கிறது என்பதை அறியச் செய்யுங்கள்.

* போலச் செய்த மாணவரை ஏனையோருக்கு முன்னால் நிறுத்துங்கள். இயல்பில் இவர் யார் என்பதை வினவி, அம் மாணவரின் உண்மையான பெயரைக் கூறச் செய்யுங்கள். அந்த மாணவரது குணாதிசயங்கள் பற்றி வினவி, பலகையில் குறியுங்கள்.
* இப்போது அந்த மாணவரது தோளில் சால்வையொன்றைப் போட்டு, அவரை அரசியல் வாதியாகப் பாவனை செய்மாறு கேளுங்கள். இப்போது இவர் யார் எனக் கேட்டு ‘‘அரசியல்வாதி’’ என்ற பதிலைப் பெறுங்கள். அவர் வெளிப்படுத்திய அரசியல்வாதி எப்படிப்பட்டவர்? அவரது குணாதிசயங்கள் யாவை? என வினவி அவற்றை மாணவரது குணாதிசயங்கள் எழுதப்பெற்ற பட்டியலுக்கு எதிரே குறிக்கச் செய்யுங்கள்.
* அந்த இரு குணாதிசயங்களையும் ஒப்பிட்டு, இரண்டும் ஒரே தன்மையானவையா என்று வினவுங்கள். அந்த வேறுபாட்டிற்குக் காரணம் யாது என்பதைக் கேளுங்கள்.
* அந்த மாணவன் தனது பண்புகளை விட்டுப் பாத்திரத்தின் பண்புகளை ஏற்றிருப்பதைத் தெளிவுபடுத்துங்கள். இவ்வாறு தனது பண்புகளை விடுத்து வேறொருவரின் பண்புகளைத் தாங்கி நிற்பதே பாத்திரம் என்பதை அறியச் செய்யுங்கள்.
* போலச் செய்தலில் ஈடுபட்ட நான்கு மாணவர்களை அழைத்து, அவர்கள் ஏற்ற பாத்திரத்தை மீண்டும் சித்திரிக்குமாறு கேளுங்கள். அவ்வாறு சித்திரிக்கப் பெறுபவை வேறுவேறு பாத்திரங்களாக இருப்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். இப்போது பாத்திரங்கள் அனைத்தும் ஒரே பண்பானவையா என்பதை வினவுங்கள். வேறுபட்டதற்கான காரணத்தை முன்வைக்கக் கேளுங்கள்.
* ஒவ்வொரு பாத்திரமும் தனித்தன்மையுள்ளவை என்பதையும் பாத்திரக் குணாதிசயங்கள் பாத்திரத்திற்குப் பாத்திரம் வேறுபட்டவை என்பதையும் கலந்துரையாடல் மூலம் புலப்படுத்துங்கள்.
* மனிதர், விலங்குகள், மரம், செடி, கொடி போன்ற அ·றிணைகள், தேவதைகள் போன்ற கற்பிதங்கள், பாவைகள் என யாவுமே இன்னொருவராற் சித்திரிக்கப் பெறும் போது அவை பாத்திரங்களே என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* கீழ்க் குறிப்பிட்டது போன்று பாத்திரங்களைத் தயாரித்து மாணவர்களுக்கு வழங்குங்கள்.

  - மரம்
  - கடல்
  - நரி
  - தாதி
  - அறிவிப்பாளர்
  - மீன்
  - மண்வெட்டி
  - பாம்பாட்டி
  - நடத்துநர்
  - விளம்பர நடிகர்

* தாம் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களைச் சித்திரித்துக் காட்டுமாறு அனைத்து மாணவர்களையும் அழையுங்கள்.
* ஒவ்வொருவரும் தத்தம் பாத்திரப் பண்புகளை வெளிப்படுத்திய விதம் பற்றிக் கலந்துரையாடுங்கள். பாத்திரப் பண்பானது பாத்திரச் செயல்கள் வழியாகவும் பாத்திரச் சொல்லாடல்கள் வழியாகவும் வெளிப்பட்டமை பற்றி எடுத்துக் காட்டுங்கள். பாத்திரமொன்றின் சொல்லாடற் பாங்கு, சொல்லப் பெறும் விடயம், அசைவியக்கப் பாணி போன்றவற்றுக்குப் பின்னால் பாத்திரக் குணாதிசயங்கள் அன்றேல் பண்புகளே காணப்பெறுகின்றன. அப் பண்புகளே அப் பாத்திரம் எதை எதைச் செய்ய வேண்டும், எதை எதைப் பேச வேண்டும் என்பதைத் தீர்மானிக்கிறது. ஒவ்வொரு பாத்திரத்திற்குள்ளும் அவையவற்றிற்கே உரித்தான சிந்தனைப் போக்கு, உணர்ச்சி, செயல்கள், பழக்கவழக்கங்கள், பாவனைகள், நடை உடைத் தன்மைகள் போன்றவை உள்ளடங்கியிருக்கும். எனவே தான் ஒரு பாத்திரத்தைப் போன்று மற்றொன்று இருப்பதில்லை.

* நீங்கள் ஒவ்வொருவரும் ஒரே மாதிரியானவரா என வினவுங்கள். நீங்கள் வேறுபட்டிருப்பதற்குக் காரணம் யாது என்று கேளுங்கள். அதே போன்றே பாத்திரங்களும் வேறுபட்டவை என்பதை விளக்குங்கள்.

## முதன்மைப் பதங்கள் :

- பாத்திரப் பண்பு.
- குணாதிசயம்.
- தாங்கி நிற்றல்.
- செயலாக்கங்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- பாத்திரமேற்றலுக்கு உதவக்கூடிய பொருள்கள்.
- டிமைன் தாள்.
- மாக்கர்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாத்திரம் என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறுவார்.
- பாத்திரமொன்றின் பண்புகளைச் சித்திரித்துக் காட்டுவார்.
- பாத்திரச் சித்திரிப்பின் ஊடாக, பாத்திர வேறுபாட்டை உணர்ந்துரைப்பார்.
- ஒருவர் இன்னொரு ஆளாகும் போது ஏற்க வேண்டிய விடயங்களைப் பட்டியலிடுவார்.
- பாத்திரப் பண்பைச் செயல்கள், சொல்லாடல் வழி மதிப்பிடுவார்.

## உசாத்துணைகள் :


1. பரதநாட்டிய சாஸ்திரம் - ஸ்ரீராம தேசிகர்.
2. அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.

**தேர்ச்சி 2.0** : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.2** : பாத்திர வகிபாகம் பற்றிக் கற்றுக் கொள்வார்.

**செயற்பாடு 2.2** : "பாத்திரத்தின் பல்வேறு வகிபாகங்களை அறிந்து கொள்வோம்"

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* பாத்திரமொன்றிற்குப் பல முகங்கள் இருப்பதை ஏற்றுக் கொண்டிருப்பார்.
* ஒவ்வொரு பாத்திரமும் பல வகிபங்குகளைக் கொண்டிருக்கின்றன என்பதை அறிந்திருப்பார்.
* பாத்திர வகிபாகங்களைப் பட்டியலிட்டுக் காட்டுவார்.
* வகிபாகங்களுக்கெனப் பொதுவானதும் தனித்துவமானதுமான பண்புகள் இருப்பதைக் கண்டு கொண்டிருப்பார்.
* தம்மைப் பற்றிய சுயவிளக்கத்தைப் பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**


* எந்தவொரு பாத்திரத்திற்கும் பல வகிபாகங்கள் உள்ளன என்பதையும் அவ் வகிபாகங்களுக்கேயுரிய சுயாதீனமான பண்புகளும் பாத்திரத்திற்கான அடிப்படைப் பண்புகளும் காணப்பெறுகின்றன என்பதையும் மாணவர்கள் கற்றறிந்திருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப் பெறுகின்றது.
* வகுப்பிலுள்ள மாணவர் எண்ணிக்கையைப் பொறுத்து ஒவ்வொரு மாணவரையும் அன்றேல் எழுமாறாகச் சில மாணவரைத் தம்மைப் பற்றிக் கூறுமாறு கேளுங்கள். அந்த விளக்கத்தில் பின்வரும் விவரங்கள் உள்ளடங்கியிருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
    * பெயர்.
    * இருப்பிடம்.
    * அவரால் மேற்கொள்ளப் பெறும் செயற்பாடுகள். (உதாரணம் - விளையாட்டு, வீட்டுப் பணி, தந்தையின் தொழிலுக்கு உதவுதல் மற்றும் பிற).
    * அவருக்குப் பிடித்தமானவையும் பிடித்தமற்றவையும்.
    * அவரது நாளாந்தப் பழக்கவழக்கங்கள்.
* மாணவரது விளக்கத்தை அடிப்படையாக வைத்துப் பின்வரும் வினாக்களை வினவுங்கள்.
    1. நீங்கள் ஒவ்வொருவரும் ஒரேமாதிரியானவரா?
    2. நீங்கள் ஒவ்வொருவரும் செய்கின்ற செயல்கள் ஒரே தன்மையானவையா?
    3. நீங்கள் ஒரேமாதிரியான பழக்கவழக்கங்களைக் கொண்டுள்ளீர்களா?
    4. உங்களது விருப்பு வெறுப்புக்கள் ஒரேமாதிரியானவையா?
* மாணவரது பதில்களை அடிப்படையாகக் கொண்டு பின்வரும் விடயங்களை எழுதுங்கள்.

1. ஒவ்வொரு மனிதரும் தனித்தன்மையுள்ளவர்.
2. ஒவ்வொருவருடைய இயல்புகளும் வேறுபட்டவை.
3. முன்னைய அலகில் கற்ற மேற்படி விடயங்களை நினைவுபடுத்துங்கள்.

* பின்வரும் அட்டவணையைத் தனித்தனியே பூர்த்தி செய்யுமாறு கேளுங்கள். அவர்கள் இருக்கும் இடத்தைப் பொறுத்து, வகிக்கக்கூடிய வகிபாகங்களையும் அவ்வகி பாகங்களுக்கேற்ப அணியக்கூடிய ஆடை என்பவற்றையும் குறிப்பிடுமாறு தெளிவு படுத்துங்கள்.

| இடம் | வகிபாகம் | அணியும் உடை | பேச்சுப் பாணி |
|---|---|---|---|
| வீட்டில் | | | |
| கோயிலில் | | | |
| விளையாட்டு மைதானத்தில் | | | |
| வைத்தியசாலையில் | | | |
| பாடசாலையில் | | | |
| திருமண நிகழ்வில் | | | |

* எழுமாறாகச் சில பட்டியல்களை வாசிக்குமாறு கேளுங்கள். ஒருவர் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் வேறுபட்ட பாகத்தை வகிப்பதையும் அச்சந்தர்ப்பங்களில் அவர்களின் உடைகள் வேறுபடுவதையும் பேசுகின்ற முறைமை வித்தியாசமாக அமைவதையும் சுட்டிக் காட்டுங்கள்.
* அவ்வாறே நடிகன் ஒரு பாத்திரத்தைத் தாங்கி நின்று சித்திரிக்கும் போது அப்பாத்திரத்தின் வேறுபட்ட வகிபாகங்களையும் சித்திரிக்க வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
* ஒரு மனிதனுக்குப் பல்வேறு பண்புகள் காணப்பெறுகின்றன. ஒவ்வொருவரும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தில் வேறுவேறு முகங்களை வெளிப்படுத்துகின்றனர். இவ்வாறு பாத்திரமொன்றில் உள்ளடங்கியிருக்கும் பல்வேறு முகங்களே வகிபாகம் என்பதை விளக்குங்கள்.
* இவ்வாறு வகிபாகங்கள் பலவாகக் காணப்பட்ட போதிலும் பாத்திரத்தின் அடிப்படையான சில பண்புகளை அதன் எல்லா வகிபாகங்களிலும் காணமுடியும். அதே சமயத்தில் அந்தந்த வகிபாகங்களுக்கேயுரிய தனிச் சிறப்பான பண்புகளும் உள்ளன என்பது பற்றிக் கலந்துரையாடல் வழியாக விளக்குங்கள்.
* கீழ்க்காணும் பாத்திரங்களை மாணவர் முன்னிலையில் காட்சிப்படுத்துங்கள். ஒவ்வொருவரும் அப்பாத்திரங்களில் ஒன்றைத் தெரிவு செய்து அதற்குள் இருக்கக்கூடிய வெவ்வேறு வகிபாகங்கள் கொண்ட வரைபை வரைந்து காட்டுமாறு கேளுங்கள்.
    - விவசாயி.
    - வங்கி முகாமையாளர்.
    - அரசியல்வாதி.
    - மதகுரு.
    - பொலிஸ் அதிகாரி.
* அவ் வரைபு அமைய வேண்டிய விதத்தைச் சுட்டிக் காட்டுங்கள்.




* பாத்திரத்திற்கு ஒருவரைத் தாம் தயாரித்தவற்றை முன்வைக்கக் கேளுங்கள். அவற்றின் குறை நிறைகளைக் கலந்துரையாடுங்கள்.
* தாமாக முன்வரும் ஒரு மாணவரை முன்னழையுங்கள். தமது பாத்திரத்திற்குரிய வகிபாகங்களைச் சித்திரித்துக் காட்டச் செய்யுங்கள். அதிலிருந்து கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
* ஒவ்வொரு பாத்திர வகிபாகத்திற்கும் பொருத்தமான மெய்நிலைகள் காணப்படும். வகிபாகத்தின் உடல் உளரீதியில் மாற்றங்கள் நிகழும். உதாரணமாக, பக்தர் என்ற நிலையில் உடலில் ஒரு தளர்நிலை இருக்கும். அவா் ஒரு பொலிஸ் அதிகாரியாயின் உடலில் விறைப்புத் தன்மை ஏற்படும். பக்தராய் இருக்கும் போது உள்ளத்தில் பக்தி உணர்வும் பொலிஸ் அதிகாரியாய் நிற்கும் போது அதிகாரத் தன்மையும் ஏற்படும்.
* வகிபாகங்கள் மாறும்போது அவற்றின் பேச்சுப் பாணியும் வேறுபடும்.
* வகிபாகங்களுக்கு ஏற்ப அவை அணியும் உடைகளும் அணிகலன்களும் வேறுபட்டுக் காணப்பெறும்.
* இதுவரை கற்றவற்றை மீள வலியுறுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- நடிபங்கு.
- பேச்சுப் பாணி.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- பாத்திரமேற்றலுக்கு உதவக்கூடிய சாதனங்கள்.
- துணி, தடி, மாலைகள், பூக்கள்.
- டிமைன் தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாத்திர வகிபாகம் என்பதற்கு விளக்கமளிப்பார்.
- பாத்திரமொன்றின் பல்வேறு வகிபாகங்களை வரைந்து காட்டுவார்.
- பாத்திர வகிபாகங்களுக்கிடையில் பண்புகள் வேறுபடுவதை உணர்ந்துரைப்பார்.
- வகிபாகம் ஏற்று நடிப்பதில் விருப்பத்தை வெளிப்படுத்துவார்.
- தம்மைப் பற்றிய சுயவிளக்கத்தை முன்வைப்பார்.

**உசாத்துணை :**

- ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி,
  நாடகமும் அரங்கியலும், தரம் 9 (2010)- தேசிய கல்வி நிறுவகம்.

**தேர்ச்சி 2.0** : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.3** : வழங்கப்பெற்ற ஈழத்து வரலாற்றுக் கதைக்கு அமைவாக ஆக்கம் புரிவார்.

**செயற்பாடு 2.3** : "வரலாற்று நாடக எழுத்துருவை ஆக்குவோம்"

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள் :**

* நாடகமாக்கக்கூடிய வரலாற்றுக் கதை ஒன்றைத் தெரிந்தெடுத்திருப்பார்.
* எழுத்துருவிற்குரிய மூலக்கூறுகளைப் பயன்படுத்தி வரலாறுசார் நாடகத்தினை எழுதுவார்.
* தம் நாடக எழுத்துருவாக்கம் தொடர்பில் நம்பிக்கை பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

* மாணவர்கள் நாடக எழுத்துருவை ஆக்குவதற்கான தயார்நிலையை ஏற்படுத்துங்கள்.
* மாணவர்கள் ஒவ்வொருவருக்கும் வெடியரசன் கதை, யாழ்பாடிக் கதை, பண்டாரவன்னியன், கைலாய வன்னியன், உலக நாச்சியார், குளக்கோட்டன் போன்ற வரலாற்றுக் கதைகளை வழங்குங்கள்.
* வழங்கப் பெற்ற கதைகளில் ஒரு கதையைத் தெரிவு செய்வதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* அக்கதையை நாடகமாக எழுதுவதற்கு அறிவுறுத்தல்கள் வழங்குங்கள்.
* நாடக எழுத்துரு ஒன்றினை ஆக்குவதற்குப் பின்வரும் விடயங்களைத் தெரிந்து அன்றேல் விளங்கிக் கொள்வதன் ஊடாக நல்ல நாடகம் ஒன்றினை ஆக்கிக் கொள்ள முடியும் என்பதை நினைவுபடுத்துங்கள்.
* நாடகம் ஆக்குவதற்கான வரலாற்றுக் கதையில் வரும் சம்பவங்கள், மோதுகைகள், பாத்திரங்கள், அவற்றின் உரையாடல்கள், அதன் மொழி அச்சம்பவங்களுக்குப் பொருத்தமான மேடைக் குறிப்புகள், பாத்திரங்கள் பயன்படுத்தும் கைப்பொருள்கள், காட்சிப் பின்னணிகள் போன்றவற்றை நினைவுபடுத்தி, நாடகம் ஆக்குவதற்கு வழிப்படுத்துங்கள். நாடகம் மோதுகைகள் ஊடாகக் கூறவரும் கருவை விளங்கிக் கொள்வதுடன் பார்ப்போரது கவனிப்பையும், ஆர்வத்தையும் கணந்தோறும் பற்றிப் பிடித்திருக்கும் உயிர்த்துடிப்பான பாத்திரங்களைப் படைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
* எழுத்துரு ஆக்கப்பெறும் முறையில் அவை பல்வேறு கருத்துக்களையும் சிந்தனைகளையும் கற்பனையையும் கொண்டதாக அமைவதுடன் வரலாற்றுக் கதைகளின் அடிநாதமாக உள்ள சிந்தனையை மாற்றாது, நுட்பங்களைப் பயன்படுத்தி எழுத்துரு ஆக்குவதற்கு வழிப்படுத்துங்கள்.
* வரலாற்றுக் கதைகளில் தாம் தெரிவு செய்த கதை எக்காலத்திற்குரியது என்பதைத் தெரிந்து கொள்வதுடன் அக்காலத்தில் அரச பாத்திரங்கள் எவ்வாறு நடந்து

கொண்டிருக்கும் என்பதையும் அவற்றின் மொழி எவ்வாறு அமைந்திருக்கும் என்பதையும் தெளிவுபடுத்திய பின்னர், தொடர்ந்து எழுதுவதற்கு வழிப்படுத்துங்கள்.

* வரலாற்றுக் கதைகளில் காட்சிகள், களங்கள் மாறுபடும் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.
* நாடக எழுத்துருவை எழுதுவதற்கு நேர அவகாசம் வழங்குங்கள்.
* எழுதப்பெற்ற நாடக எழுத்துருவைப் பற்றிய கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
* எழுத்துரு முழுமை பெறுவதற்கான பின்னூட்டலை வழங்குங்கள்.

### தரவிருத்தி உள்ளீடு :

- A4தாள்
- கதை அட்டை

### முதன்மைப் பதங்கள் :

- எழுத்துரு
- உரையாடல்
- பாத்திரம்
- களம்
- மோதுகை
- சம்பவங்கள்

### கணிப்பீடும் மதிப்பிடும் :

- ஈழத்து வரலாற்றுக் கதைகளைத் தெரிந்திருப்பார்.
- வரலாற்றுக் கதைகளை வாசிப்பார்.
- வரலாற்றுக் கதையை நாடகமாக்குவார்.
- வரலாற்றுக் கதைகளில் வரும் பாத்திரங்களைக் கூறுவார்.
- ஈழத்து வரலாற்றுக் கதைகளின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.

### உசாத்துணைகள் :

1. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்
2. சங்கிலி - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை

## வெடியரசன்

அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் வடபுலத்தினை ஆண்ட சிற்றரசர்களில் ‘‘கடலரசன்’’ என அழைக்கப்பட்டவன் ‘‘குகன்’’ எனும் இயற்பெயர் கொண்ட வெடியரசன்ஆவான். வெடியரசனுக்கு வீரநாராயணன், விளங்குதேவன், போர்வீர கண்டன், ஏரிழங்குமரன் என்னும் நான்கு சகோதரர்கள் இருந்தனர். இவர்களும் சிற்றரசர்களாக யாழ்ப்பாணத்தின் பல பகுதிகளை ஆண்டு வந்தனர். இவர்கள் கடலில் வரும் கப்பல்களை மறித்துச் சூறையாடுவதிலும் கடற்சமர் புரிவதிலும் வல்லவர்களாகத் திகழ்ந்தனர். வெடியரசன் நெடுந்தீவினைத் தலைமை நிலமாகக் கொண்டு தீவுப்பகுதிகளை ஆண்டு வந்தான். அவனால் அமைக்கப்பட்ட கோட்டை இன்றும் நெடுந்தீவில் காணப்படுகின்றது.

ஒரு சமயம் சோழநாட்டில் இருந்து தெய்வப் பெண்ணாகிய கண்ணகிக்குக் காற்சிலம்பு செய்வதற்கு நாகரத்தினங்களைப் பெற்றுச் செல்வதற்காக மாநாயக்கரின் ஆணைப்படி மீகாமன் இலங்கைக்குப் படை கொண்டு வந்தான். இதை அறிந்த வெடியரசன் படைதிரட்டிச் சென்று கடலில் மீகாமனின் படைகளைச் சுற்றி வளைத்தான். கடற்சமர் ஆரம்பமாகியது. வெடியரசனின் போர்த்திறனுக்கு ஈடுகொடுக்க முடியாத மீகாமன் பின்வாங்கி, கண்ணகியை வணங்கி அருள் பெற்று மீண்டும் போரிட்டு, தெய்வபலத்தினால் வெடியரசனைத் தோற்கடித்துக் கைது செய்தான். இதனையறிந்த வெடியரசனின் சகோதரன் வீரநாராயணன் படை திரட்டி மீகாமனுக்கு எதிராகப் போர் தொடுத்தான். அவனின் போர்த்திறனை அறிந்த மீகாமன் சமாதானமாவதற்கு விரும்பினான். அதை ஏற்றுக் கொள்ளாத வீரநாராயணன் வீரமாகப் போரிட்டான். அவனது போர்த்திறனுக்கு ஈடுகொடுக்க முடியாத மீகாமன் மீண்டும் கண்ணகியை வணங்கி, வரம் பெற்றுப் போரிட்டு வீரநாராயணனைக் கொன்றொழித்தான். தன்னைக் காக்க வந்த சகோதரன் இறந்த செய்தி கேட்டு வெடியரசன் கடுந்துன்பமடைந்தான்.

வீரநாராயணன் இறந்த செய்தியைக் கேள்விப்பட்ட மற்றைய சகோதரனான ஏரிழங்குமரன் சினத்துடன் மீகாமனுக்கெதிராகப் போர் தொடுத்தான். ஏரிழங்குமரனின் சீற்றத்தைக் கண்டு அஞ்சிய மீகாமன் வெடியரசனிடம் தான் வந்த காரணத்தினை எடுத்துக்கூறிக் கண்ணகி என்ற தெய்வப் பெண்ணுக்காகச் சிலம்பு தயாரிக்கும் புனிதப் பணிக்கு உதவும்படியும் சமாதானமாகுமாறும் கோர, இது தெய்வ காரியம் என்றுணர்ந்த வெடியரசன் சமாதானமாகி ஏரிழங்குமரனையும் தடுத்து மீகாமன் விரும்பி வந்த நாகரத்தினங்களையும் வழங்கி, மீகாமனைச் சமாதானமாக அனுப்பி வைத்தான். அவனின் பெருந்தன்மைக்கு நன்றி கூறி மீகாமன் சோழநாடு திரும்பினான். இதனால் வெடியரசனின் புகழ் சோழநாட்டிலும் பரவியது.

**குறிப்பு :**

வெடியரசன் தொடர்பான வேறு பொருத்தமான சம்பவங்களை இணைத்துக் கொள்ளலாம்.

## யாழ்ப்பாணன் / யாழ்பாடி

ஒரு காலத்தில் இலங்கையின் வடதிசையை (செங்கடக நகர்) உக்கிரசிங்கனின் மகன் ''வாலசிங்கன்'' அரசாண்டு கொண்டிருந்தான். கொடைச்சிறப்பு மிக்க அவனைப் பலரும் நாடி வந்து பொருள் வேண்டிச் சென்றனர். பல்வேறு புலவர்களும் அவனைப் புகழ்ந்து பாடிப் பரிசில் பெற்றுச் சென்றனர். அவனது புகழைக் கேள்வியுற்ற பலரும் சோழநாடு முதலாக இருந்து வருகை தந்தனர்.

அக்காலத்தில் இரண்டு கண்களும் குருடான புலவர் ஒருவர் சோழநாட்டிலிருந்து மிகுந்த சிரமத்துடன் செங்கடக நகர் வந்து வாலசிங்கனைக் காண முயன்றார். அவர் அந்தகனாக இருந்த படியினால் மன்னனைக் காண்பதற்கு வாயிற்காவலர் விடவில்லை. இதனால் வருத்தமுற்ற புலவர் மாளிகையின் வெளியே நின்றவாறு தன்நிலையை எண்ணி வருந்தி, யாழ் இசைத்துப் பாடினார். அரண்மனையில் உலாவிக்கொண்டிருந்த மன்னனுக்கு அவ் ஏழைப் புலவனின் குரல் கேட்டது. இரக்கமுற்ற மன்னன் அவரை உடனே அழைத்து வரக் கட்டளை இட்டான். அந்தகனான அவருக்கு எல்லா உபசாரமும் செய்து மகிழ்வித்தான்.

மகிழ்வடைந்த அந்தப் புலவன் மன்னன் வாலசிங்கனைப் புகழ்ந்து பிரபந்தம் ஒன்றினை இயற்றியது மட்டுமன்றித் தானே யாழ் இசைத்து அப்பிரபந்தத்தினைப் பாடினார். அவரது பாடலில் பெரிதும் மகிழ்வுற்ற மன்னன் அப்புலவனுக்கு வடதிசையில் இருந்த மணற்றிடைப் பிரதேசமொன்றினைப் பரிசாக வழங்கினான். அப்பிரதேசம் அன்று முதல் யாழ்ப்பாணம் என்றும் அப்புலவன் யாழ்ப்பாணன் என்றும் அழைக்கப்படலாயினர்.

**தேர்ச்சி** 2.0 : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.4 : நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

**செயற்பாடு** 2.4.1: "காட்சி விதானிப்பு மாதிரியை இரு பரிமாணத்தில் உருவாக்குவோம்."

**பாடவேளைகள்** : 03

**கற்றற் பேறுகள் :**

- காட்சியமைப்பினை உருவாக்கும் திறனைப் பெற்றிருப்பார்.
- எழுத்துருவிற்கு அமைவாகக் காட்சியமைப்புக்களைத் திட்டமிட்டிருப்பார்.
- வரலாற்று நாடக எழுத்துருவிற்கு ஏற்பக் காட்சிகளை விதானிக்கும் ஏற்பாடுகளைச் செய்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- கிடைக்கத்தக்க காட்சி விதானிப்புத் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்துங்கள். அன்றேல் வரையப் பெற்ற காட்சியமைப்புத் தொடர்பான படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றை உற்று நோக்கி அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- அவதானிப்பின் மூலம் காட்சியமைப்புத் தொடர்பான கருதுகோளைப் பெற்றுக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
- வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான காட்சி விதானிப்பினைத் திட்டமிடும் போது, நாம் பின்வரும் விடயங்களைக் கவனத்தில் கொள்ள வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- வரலாற்று நாடகத்தின் காலம், இடம், சூழல், சம்பவங்கள் அவற்றின் சமூகப் பொருளாதார நிலை, மோடி என்பவற்றைத் தெளிவாக்கிக் காட்சிப் பின்னணியைத் திட்டமிட வழிப்படுத்துங்கள்.
- காட்சிகளைத் திட்டமிடும் போது மேடை வெளியை வரையறை செய்யுங்கள்.
- காட்சிகளின் அளவு, அவற்றின் இடத்திற்கு இடம் மாற்றும் தன்மையின் இலகு தன்மை, காட்சிப் பின்னணியின் வர்ணம், அவை பாத்திரச் செயல்களுக்கு மெருகூட்டும் விதம் போன்றவற்றை மனதில் பதியுங்கள்.
- வரலாற்று நாடகங்களில் பெரும்பாலும் அரண்மனை, போர்க் காட்சிகள், இவற்றிற்கான காட்சிகளை அமைக்க அன்றேல் அவர்களால் எழுதப் பெற்ற வரலாற்று நாடகத்தின் ஒரு காட்சியைத் தெரிந்தெடுத்து அதற்குரிய காட்சிப் பின்னணியின் மாதிரியை உருவாக்க வழிப்படுத்துங்கள்.
- அம் மாதிரியை உருவாக்குவதற்கு ஸ்ரைரோ போம் (ரெஜிபோம்), பலகைச் சட்டகம், பைண்டர் கம், பேப்பர் கத்தி போன்ற தேவையான பொருள்களைச் சேகரித்து அக்காட்சிப் பின்னணியை உருவாக்க ஊக்கப்படுத்துங்கள்.

* இக்காட்சிப் பின்னணியை மாணவர்களின் தன்மையைக் கொண்டு குழுவாகவோ அன்றேல் தனியாகவோ உருவாக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* காட்சிப் பின்னணிகளைத் தமக்கு விரும்பிய பரிமாணங்களில் உருவாக்குவதற்கு உற்சாகப்படுத்துங்கள்.
* உருவாக்கிய காட்சிப் பின்னணியைக் காட்சிப்படுத்தி அவை பற்றிக் கலந்துரையாட வழிப்படுத்துங்கள்.
* வரலாற்று நாடகத்திற்கான காட்சிப் பின்னணி மாதிரியைப் போன்று நாடக ஆற்றுகையில் அவற்றை உண்மையாகப் படைக்கலாம் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்

.

**தரவிருத்தி உள்ளீடு :**

- குண்டுப்பின்
- பலகைச் சட்டகம்.
- கத்தரிக்கோல்.
- பைண்டர் கம்.
- ஸ்ரைரோபோம் (ரெஜிபோம்).
- வானிஸ் பேப்பர்.
- கோல்ட் பேப்பர்.
- பேப்பர் கத்தி.
- A4 நிறத்தாள்.

**கணிப்பீடும் மததிப்பீடும் :**

- வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான காட்சிகளை இனங்காணுவார்.
- தாம் உருவாக்கிய நாடகத்தின் காட்சிப் பின்னணிகளைத் தெரிந்தெடுப்பார்.
- காட்சிப் பின்னணியை உருவாக்குவதற்குத் தேவையான பொருள்களைப் பட்டியலிடுவார்.
- காட்சிப் பின்னணி மாதிரி ஒன்றை உருவாக்கியிருப்பார்.
- காட்சிப் பின்னணிகளின் பயன்பாட்டை அறிக்கைப்படுத்துவார்.

**தேர்ச்சி** 2.0 : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.4 : நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

**செயற்பாடு** 2.4.2: "வரலாற்று நாடகத்திற்கான கைப்பொருள்களை வரைந்து நிறந் தீட்டுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ வரலாற்று நாடகத்தில் இடம்பெறக் கூடிய கைப்பொருள்களைப் பட்டியலிடுவார்.
- ✶ கைப்பொருள்களில் சிலவற்றை வரைவார்.
- ✶ கைப்பொருள்களுக்குப் பொருத்தமான வர்ணங்களைப் பிரயோகிப்பார்.
- ✶ நாடகத்திற்கான கைப்பொருள்கள் தொடர்பான தகவல்களை அறிந்திருப்பார்.

**பாடத்தை திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- ✶ மாணவர்கள் அனைவரும் டிமைன் தாளில் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பாடல் வரிகளைப் பாடுவதற்கு வழிப்படுத்துங்கள்.

  "சங்கரன் கொடுத்த வாளும் வேலும்
  தண்டும் என்கையில் பாராய்
  இங்கெனை வெல்வதற்கு
  இகத்திலே எவருமில்லை"

  (இராவணேசன்)

- ✶ இப்பாடலைப் பாடி முடித்த பின்னர், இப்பாடலின் ஊடாக வெளித்தெரியும் கைப்பொருள்களைக் கூறுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
- ✶ தாம் பார்த்த நாடகங்களில் பயன்படுத்தப் பெற்ற அன்றேல் வரலாற்று நாடக ஒளிப்படங்கள் அன்றேல் கையடக்கத் தொலைபேசி மூலம், வரலாற்று நாடகங்களில் பயன்படுத்தப்பெற்ற கைப்பொருள்களைப் பார்த்துப் பட்டியற்படுத்தச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ✶ அக்கைப்பொருள்களின் உருவ அமைப்பினையும் அதில் பயன்படுத்தப்பெற்ற வர்ணங்களையும் நினைவுபடுத்துவதற்குச் சந்தர்ப்பமளியுங்கள்.
- ✶ மாணவர்களால் எழுதப்பெற்ற வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான கைப்பொருள்களை இனங்காண ஒவ்வொரு மாணவரையும் வழிப்படுத்துங்கள்.
- ✶ தமக்கு விருப்பமான கைப்பொருள் ஒன்றினை வரைவதற்கு இடமளியுங்கள்.
- ✶ அவர்கள் ஒவ்வொருவருக்கும் A4தாள், கலர்சோக், கலர் பென்சில், அடிமட்டம் போன்றவற்றை வழங்குங்கள். அன்றேல் அவர்களுக்கு ஏற்கெனவே அறிவித்து அவற்றைக் கொண்டு வருமாறு வழிப்படுத்துங்கள்.
- ✶ ஒவ்வொரு மாணவரும் வரலாற்று நாடகத்தில் பாத்திரங்கள் பயன்படுத்தும் கைப்பொருள் பற்றிக் கலந்துரையாடி, அதில் ஒன்றை வரைந்து நிறம் தீட்டுவதற்கு ஊக்கமளியுங்கள்.

* அக்கைப்பொருள் தொடர்பாகவும் வரையப்பட்டு நிறந்தீட்டப்பெற்ற விதம் தொடர்பாகவும் கலந்துரையாடுங்கள்.
* வரையப்பெற்ற கைப்பொருள்களை அனைவரும் பார்வையிடுவதற்காக அவற்றைக் காட்சிப்படுத்துங்கள்.

### தரவிருத்தி உள்ளீடு :

- A4 தாள்.
- கலர் சோக்.
- கலர் பென்சில்.
- அடிமட்டம்.
- கோவை மட்டை.

### முதன்மைப் பதங்கள் :

- வர்ணம்.
- கைப்பொருள்.
- வாள்.
- தண்டு.

### கணிப்பீடும் மதிப்பீடும் :

- வரலாற்று நாடகத்திற்கான கைப்பொருள்களை இனங்கண்டு கூறுவார்.
- கைப்பொருள்களை வரைந்து நிறந்தீட்டுவார்.
- நாடகத்தில் கைப்பொருள்களின் பயன்பாட்டை எடுத்துக் கூறுவார்.
- கைப்பொருள்களில் ஒரு பொருள் வெவ்வேறு வடிவமைப்பில் காணப்பெறும் என்பதை வரைதல் மூலம் வெளிக்காட்டுவார்.
- வரையப்பெற்ற கைப்பொருள்களுக்குப் பொருத்தமான நிறங்களைப் பிரயோகிப்பார்.

**தேர்ச்சி** **2.0** : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** **2.4** : நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

**செயற்பாடு** **2.4.3:** “மேடைப் பொருள் மாதிரிகையை (Sample) உருவாக்குவோம்.”

**பாடவேளைகள்** **:** 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ வரலாற்று நாடகத்திற்கான மேடைப் பொருள்களை உருவாக்கி வைத்திருப்பார்.
- ✶ மேடைப் பொருள் தயாரிப்பிற்குச் சூழலில் கிடைக்கக்கூடிய வளங்களைச் சேகரித்திருப்பார்.
- ✶ வரலாற்று நாடகமொன்றில் இடம்பெறக்கூடிய மேடைப் பொருள்களின் பட்டியலொன்றை வைத்திருப்பார்.
- ✶ சூழலில் கிடைப்பனவற்றைக் கொண்டு மேடைப் பொருள்களை உருவாக்கும் வல்லமையைப் பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- ✶ அரங்க விளையாட்டு ஒன்றினை விளையாடி மாணவர்களைக் குழுக்களாகப் பிரியுங்கள்.
- ✶ குழுக்களில் உள்ளவர்களை விரைவாகச் சூழலில் கிடைக்கும் 5 பொருள்களைக் கொண்டு வரச் செய்யுங்கள்.
- ✶ ஆசிரியரால் கொண்டு வரப்பட்ட பொருள்கள் ஓரிடத்தில் வைக்கப்பட்டிருப்பதை அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- ✶ தாம் உருவாக்கிய வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமானவாறு மேடைப் பொருள்களை உருவாக்குவதற்குத் தேவையான பொருள்களை இனங்காண்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- ✶ அப்பொருள்களைக் கொண்டு மேடைப் பொருள் தயாரிப்பில் ஈடுபடுத்துங்கள் அன்றேல் ஆசிரியரால் உருவாக்கப்பெற்ற மாதிரி மேடைப் பொருள்களைக் காட்சிப்படுத்தி அவற்றை மாணவர்கள் அவதானிக்க வழிப்படுத்துங்கள்.
- ✶ மாணவர்களால் எழுதப்பெற்ற வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான வேறு பொருள்களைச் செய்வதற்கான பொருள்களைச் சூழலில் இருந்து தேடிக்கொண்டு வர வழிப்படுத்துங்கள்.
- ✶ பெறப்பட்ட பொருள்களைக் கொண்டு மேடைப் பொருள் தயாரிப்பில் ஈடுபடுத்துங்கள்.
- ✶ நாடகத்தின் கதைக்கேற்ப மேடையில் என்னென்ன பொருள்களைப் பாவிக்கலாம். அவை மேடையில் எங்கு வைக்கப் பெற வேண்டும் என்பது தொடர்பான விளக்கத்தினைப் பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடலில் ஈடுபடுத்துங்கள்
- ✶ மேடைப் பொருள்கள் நடிகனுக்குத் துணைபுரியும் விதத்தைத் தெளிவுபடுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- மேடைப் பொருள்.
- சூழல்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- கம் (Gum).
- ரெஜிபோம்.
- பிறிசில் போட்.
- கத்தரிக்கோல்.
- வானிஸ் பேப்பர்.
- ஸ்ரிவ்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான மேடைப் பொருள்களைப் பட்டியலிடுவார்.
- மேடைப் பொருள்களைத் தயாரிப்பார்.
- மேடைப் பொருள் தயாரிப்பதற்குச் சூழலில் கிடைக்கும் பொருத்தமான பொருள்களைத் தேடிக் கொணர்வார்.
- மேடைப் பொருளின் அவசியத்தினை எடுத்துரைப்பார்.
- சூழலில் காணப்படும் கழித்தொதுக்கப்படும் பொருள்கள் அரங்கியற் செயற்பாட்டிற்குப் பயன்படும் விதத்தினை எடுத்துரைப்பார்.

**உசாத்துணை :**

அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு,
திரு. க. திலகநாதன்

**தேர்ச்சி** 2.0 : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம்** 2.4 : நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

**செயற்பாடு** 2.4.4: "வேட உடை மாதிரிகைகளை (Samples) வடிவமைப்போம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* வேட உடை மாதிரிகைக்குப் பொருத்தமான துணிகளைச் சேகரித்துக் கொண்டு வந்திருப்பார்.
* வேட உடைகளைப் பொருத்தமான முறையில் வடிவமைத்திருப்பார்.
* வேட உடை மாதிரிகையை உருவாக்குவதற்கான நுட்பங்களை அறிந்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

* மாணவர்கள் அனைவரையும் காட்சிப்படுத்தப்பட்டிருக்கும் பல்வேறு வேட உடை மாதிரிகைகளைப் பார்வையிட வழிப்படுத்துங்கள்.
* ஏற்கெனவே உருவாக்கப் பெற்ற வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான வேட உடைகள் எவ்வாறு அமையும் என்பது பற்றி அவர்களைச் சிந்திக்க வழிப்படுத்துங்கள்.
* சிந்தனையின் வடிவம் காட்சிப்படுத்தப் பெற்ற வேட உடைகளில் இருப்பின் அவற்றினை நன்றாக அவதானித்து வேட உடை வடிவமைப்பதற்கான தயார் நிலையை ஏற்படுத்துங்கள்.
* ஏற்கெனவே மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்டதன் பிரகாரம் அவர்கள் கொண்டு வந்த துணிகளைத் தமது நாடகப் பாத்திரத்திற்குப் பொருத்தமானவாறு வேட உடை ஆக்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடுத்துங்கள்.
* வேட உடைகளை அமைக்கும் போது பின்வரும் விடயங்களைக் கவனத்தில் எடுப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
* பாத்திரம் ஒன்றின் வயது, பால், அளவு, அந்தஸ்து, தொழில், சமயம் போன்றவற்றுடன் அப்பாத்திரங்களின் செயல்கள் இடம் பெறும் களம், காலம், பாத்திரத்தின் நிலை போன்றவற்றை விளங்கிக் கொள்வதுடன் நடிகனின் மூலகங்களுள் வேட உடை பிரதானமானது என்பதையும் விளங்கிக் கொள்ள வழிப்படுத்துங்கள்.
* மாணவர்கள் தாம் தெரிவுசெய்த பாத்திரத்தின் வேட உடையைத் தயாரிப்பதற்கு, அப் பாத்திரத்தினது வேட உடையின் வர்ணம், இழைமானம் / இழைநயம் (Texture), சாயல் போன்றவற்றைக் கவனத்தில் எடுத்தல் சிறந்தது என்பதையும் அறிவுறுத்துங்கள்.
* வரலாற்றுப் பாத்திரங்களுக்கான வேட உடை மாதிரிகையைத் தயாரிக்கும் போது அவை பகட்டானதாகவும் கண்ணாடி வேலைப்பாடுகள் கொண்டதாகவும் பார்ப்பதற்குக் கவர்ச்சிகரமானதாகவும் அமைய வழிப்படுத்துங்கள்.
* மாணவர்கள் வேட உடையின் மாதிரிகையைத் தயாரித்துக் காட்சிப்படுத்துவதற்கு ஊக்கமளியுங்கள்.

* வேட உடை மாதிரிகைத் தயாரிப்பின் அனுபவம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* வேட உடையின் முக்கியத்துவத்தினை அறிக்கைப்படுத்த வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- வர்ணம்.
- இழைமானம்/ இழைநயம்.
- சாயல்.
- அந்தஸ்து.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வெட்டுத்துணிகள்.
- பைண்டக் கம்.
- A4 தாள்.
- பிறிசில் போட்.
- தையல் ஊசி.
- நூல்.
- வேட உடை தொடர்பான படங்கள், புத்தகங்கள்.
- கத்தரிக்கோல்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- வேட உடை மாதிரிகையைத் தயாரிப்பதற்குத் துணிகளைச் சேகரித்துக் கொணர்வார்.
- துணிகளின் இழைநயம் பற்றி எடுத்துரைப்பார்.
- வேட உடைகளின் வர்ணங்கள் ஏற்படுத்தும் தாக்கத்தினை வெளிப்படுத்துவார்.
- பாத்திரத்திற்குப் பொருத்தமானவாறு வேட உடையினைச் செய்து காட்சிப் படுத்துவார்.
- நாளாந்த வாழ்க்கையில் பயன்படுத்தப் பெறும் உடைக்கும் வரலாற்று நாடகத்தின் வேட உடைக்கும் இடையிலான வேறுபாட்டினை எடுத்துரைப்பார்.

**உசாத்துணைகள்**

1. அரங்கியல் - முனைவர் சக்திப்பெருமாள், முனைவர் வே.சறோஜா.
2. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா.சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்.

**தேர்ச்சி 2.0** : கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4** : நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

**செயற்பாடு 2.4.5**: "வரலாற்று நாடகத்திற்கு அமைவாக அணிகலன்களை வடிவமைப்போம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- வரலாற்று நாடக எழுத்துருவிற்கு அமைவான அணிகலன்களைப் பட்டியற்படுத்தியிருப்பார்.
- அணிகலன்களைத் தயாரிப்பதற்குச் சூழலில் கிடைக்கும் பொருள்களைப் பயன் படுத்தியிருப்பார்.
- கலைத்துவ முறையில் அணிகலன்களைத் தயாரித்திருப்பார்.
- அணிகலன்கள் பாத்திரங்களைச் சிறப்பிப்பன என்பதை விளங்கியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- பல்வேறு வகைப்பட்ட பாத்திரங்களின் படங்களைக் காட்சிப்படுத்துங்கள்.
- அவற்றை மாணவர்கள் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- அதிலும் குறிப்பாகப் பாத்திரங்களின் அணிகலன்கள் தொடர்பான அவதானிப்பை மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.
- அணிகலன்களைத் தயாரிப்பதற்குத் தேவையான பொருள்களைச் சூழலில் தேடிப் பெற்றுவர வழிப்படுத்துங்கள்.
- மாணவர்கள் தாம் தேடிக்கொண்டு வந்த பொருள்களைப் பயன்படுத்தித் தாம் ஏற்கெனவே எழுதியுள்ள வரலாற்று நாடகத்தின் பாத்திரத்திற்குப் பொருத்தமானவாறு அணிகலன்களைத் தயாரிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
- அந் நாடகத்தின் பாத்திரத்திற்குப் பொருத்தமான ஏதாவது ஒரு அணிகலனைச் செய்வதற்கு வழிப்படுத்துவதுடன் அவற்றைத் தயாரிப்பதற்குத் தேவையான மேலதிகமான பொருள்களை ஆசிரியரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.
- மாணவர்களால் ஆக்கப்பெற்ற வரலாற்று நாடகத்தின் ஏதாவது ஒரு பாத்திரத்திற்குப் பொருத்தமானவாறு அணிகலன்கள் அமைய வேண்டும் என்பதை மீண்டும் தெளிவுபடுத்துங்கள்.
- தயாரிக்கப் பெற்ற அணிகலன்களைக் காட்சிப்படுத்துங்கள். அவை தொடர்பான கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள். நாடக ஆற்றுகையின் வெற்றிக்குக் காரணமான அணிகலன்களின் சிறப்பியல்புகளை அறிக்கைப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- அணிகலன்கள்.
- கலைத்துவம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கத்தரிக்கோல்.
- பிறிசில் போட்.
- A4 தாள்.
- பைண்டக் கம்.
- தையல் ஊசி, நூல்.
- தானியங்கள்.
- ரெஜிபோம்.
- மரப்பலகைக் கீலங்கள்.
- வெற்றுப் போத்தல்கள்.
- துணி.
- ரப்பர் பொருள்கள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- அணிகலன்களின் பெயர்களை எடுத்துரைப்பார்.
- சூழலில் கிடைக்கும் கழித்தொதுக்கப்படும் பொருள்களைத் தேடி எடுத்துக் காட்சிப்படுத்துவார்.
- கழித்தொதுக்கப்படும் பொருள்களைக் கொண்டு அணிகலன்களைச் செய்து முடிப்பார்.
- அணிகலன்களின் பயன்பாட்டை எடுத்துரைப்பார்.
- அணிகலன்கள் தயாரிப்பதில் விருப்புடன் ஈடுபடுவார்.

**தேர்ச்சி 2.0 :** கற்பனையை நெறிப்படுத்திச் சுற்றாடல் சார்ந்த அனுபவங்களை அடிப்படையாகக் கொண்டு ஆக்கம் புரிவார்.

**தேர்ச்சி மட்டம் 2.4 :** நாடக எழுத்துருவிற்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைத் திட்டமிட்டு வடிவமைப்பார்.

**செயற்பாடு 2.4.6:** "சூழலில் கிடைக்கத்தக்க ஒளிமுதல்களைக் கண்டறிந்து பயன்படுத்துவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- சூழலில் கிடைக்கக்கூடிய தீப்பந்தம், மெழுகுதிரி, ரோச்லைட், குப்பி விளக்கு போன்ற வற்றைச் சேகரித்திருப்பார்.
- அவற்றை ஒளிவிதானிப்பிற்குப் பயன்படுத்தியிருப்பார்.
- சூழலில் கிடைக்கும் ஒளிமுதல்களை நாடகத்தில் பயன்படுத்தலாம் என்பதை உணர்ந்திருப்பார்.
- சூழலில் இருந்து கிடைக்கும் ஒளிமுதல்களின் விளைவுகளை அனுபவபூர்வமாகக் கண்டிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- கதை சொல்லி இலக்கத்திற்கு ஒன்று சேருதல் எனும் அரங்க விளையாட்டினை விளையாடி மாணவர்களைக் குழுக்கள் ஆக்குங்கள். அக்குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் பின்வரும் வினாக்கள் அடங்கிய செயற்பாட்டுப் பத்திரத்தை வழங்குங்கள்.
    - நாம் வாழும் சூழலில் வெளிச்சம் கிடைக்கும் வழிகளைப் பட்டியற்படுத்துங்கள்.
    - ஆரம்ப காலத்தில் பயன்படுத்திய ஒளிகள் எவை எனப் பட்டியற்படுத்துங்கள்.
    - தற்போது பயன்படுத்தப்படும் ஒளிகள் எவை என முன்னர் பட்டியற்படுத்தியவற்றில் இருந்து தெரிவுசெய்து பட்டியலிடுங்கள்.
- மேற்படி விடயங்களைக் குழுக்கள் ஒவ்வொன்றுக்கும் முன்மொழியச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- மாணவர்கள் கண்டு கொண்ட ஒளிமுதல்கள் எவ்வாறு ஒரு நாடக ஆற்றுகைக்குப் பயன்படும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- ஒளிமுதல்கள் நாடகத்தின் காலம், இடம், மனநிலை, மோடி, சூழல் போன்றவற்றைப் பார்ப்போருக்குத் தெரியப்படுத்தும் ஊடகம் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- மாணவர்களால் ஆக்கப்பெற்ற வரலாற்று நாடகத்திற்குப் பொருத்தமான ஒளிமுதல்களை இனங்கண்டுகொள்ளச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- குழுக்கள் ஒவ்வொன்றிற்கும் வரலாற்று நாடக எழுத்துருவின் பகுதிகளை வழங்கி, அக்காட்சியில் பயன்படுத்தப்படும் ஒளிமுதல்களையும் எச்சந்தர்ப்பத்தில் அவற்றைப் பயன்படுத்தலாம் என்பவை தொடர்பாகவும் அட்டவணையைத் தயார்ப்படுத்த வழிப்படுத்துங்கள்.

* மாணவர்களால் எழுதப்பட்ட வரலாற்று நாடகம் எக்காலத்திற்குரியது என்பதையும் அக்காலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒளிமுதல்களையும் அறிந்து கொள்வதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* தற்காலத்தில் அந்நாடகம் மேடையேற்றப்படும் பட்சத்தில் எவ்வாறான ஒளிமுதல்களைப் பயன்படுத்தலாம் என்பது தொடர்பாகக் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
* ஒளிமுதல்கள் கொண்ட பட்டியல் ஒன்றை அறிக்கைப்படுத்துங்கள்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- மெழுகுதிரி.
- ரோச்லைட்.
- மின்குமிழ்.
- போத்தல்.
- திரி.
- எண்ணெய் (தேங்காய் எண்ணெய், மண்ணெண்ணை).

## முதன்மைப் பதங்கள் :

- ஒளி முதல்கள்.
- மின்குமிழ்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- சூழலில் கிடைக்கும் ஒளிமுதல்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஆரம்ப காலத்தில் பயன்படுத்தப்பெற்ற ஒளிமுதல்களை எடுத்துரைப்பார்.
- தற்காலத்தில் பயன்படுத்தப்படும் ஒளிகள் பற்றி எடுத்துரைப்பார்.
- நமது வாழ்வோட்டத்தில் ஒளிமுதல்களின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.
- நாடக எழுத்துருவிற்கு அமைவாகச் சூழலில் கிடைக்கும் ஒளிமுதல்களைப் பயன்படுத்துவதற்கான திட்டமிடலைச் செய்வார்.

## உசாத்துணைகள் :


1. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்.
2. ஒளியின் வெளி - செ. ரவீந்திரன்.
3. அரங்கியல் - முனைவர் சக்திப்பெருமாள், முனைவர் வே. சறோஜா.

**தேர்ச்சி** 3.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.1 : மாணவர்களால் பாத்திரப் பண்புருவாக்கம் செய்யப்பெற்ற பாத்திரங்களை நால்வகைச் சித்திரிப்புக்களைக் கையாண்டு சித்திரிக்கக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** 3.1.1: "பாத்திர ஒன்றிப்புப் பற்றி அறிந்து கொள்வோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* பாத்திர இயல்புகளை அறிந்து கூறியிருப்பார்.
* பாத்திர இயல்பிற்கேற்பப் பாத்திரங்கள் மாற்றமடையும் என்பதை விளக்கிக் கூறுவார்.
* பாத்திர இயல்புகளைச் சித்திரிப்பிற்குப் பயன்படுத்தியிருப்பார்.
* சித்திரிப்புக்குத் தம்மைத்தாம் தயார்ப்படுத்தியிருப்பார்.
* பாத்திர இயல்பைத் தாமேற்று அதனுடன் இரண்டறக் கலந்த அனுபவத்தை முன்வைத்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

* பாத்திர ஒன்றிப்பு என்பது, பாத்திரத்தை ஏற்று அப்பாத்திரத்தின் முழுமையான இயல்புகளை வெளிக்காட்டுவதாகும். அதாவது பாத்திர இயல்புகளுடன் ஐக்கியமாதல் அன்றேல் இரண்டறக்கலத்தல் அன்றேல் பாத்திரமாக வாழ்தல் எனலாம்.
* பாத்திரத்தின் இயல்புகள் என்பன உடல், குரல், சமூகக் குணம் சார்ந்தவை ஆகும்.
* பாத்திரமொன்றின் இயல்புகள் அகரீதியாகவும் புறரீதியாகவும் அமையும்.
* அகம் சார்ந்தவை உளம் (உணர்வு), குரல், உடலசைவு என்பன.
* புறம் சார்ந்தவை உடற்தோற்றம், ஆடை, அணி, ஒப்பனை என்பன.
* பாத்திர ஒன்றிப்பு என்பதைப் போலச் செய்தல், பாத்திரப் பண்புருவாக்கம் செய்தல், பாத்திரமேற்று நடித்தல் எனவும் கூற இடமுண்டு.

இவ்விடயங்கள் பற்றிக் கலந்துரையாடிய பின்னர் மாணவர்களை மண்டபமொன்றில்

- இயல்பாக நடக்க விடுங்கள்.
- இசைக்கேற்ப நடக்க விடுங்கள்.
- அசைந்தபடியே விரும்பிய பாத்திரம் ஒன்றை ஏற்கும்படி விடுங்கள்.
- அப்பாத்திரத்தின் உடற்தோற்றத்தைக் கற்பனை செய்ய விடுங்கள் (வயது, தோற்றம், நிறம்).
- அப்பாத்திரங்களுக்கேற்ப அசைய விடுங்கள்.
- அப்பாத்திரங்கள் பேசும் முறையை/குரலெழுப்பும் முறையைக் கற்பனை செய்ய விடுங்கள் (முதலில் தங்களுக்குள்ளும் பின்னர் வெளிப்பட்டும்).

- ஒலிக்கப்படுகின்ற ஒலி, சத்தம் என்பவற்றை உணர்வுடன் இணைத்துக் கொள்ளச் செய்யுங்கள்
- பாத்திரத்தின் பல்வேறு இயல்புகளைப் போலச் செய்யுங்கள்.

இவ்விடத்தே நிறுத்தி, தாம் பெற்ற அனுபவங்களைத் தனித்தனியாகக் குறிப்புப் புத்தகத்தில் (Note book) எழுதிக்கொள்ளச் சந்தர்ப்பமளியுங்கள். இப்போது அவ்வப் பாத்திரத்திற்குரிய கற்பனையில் வந்துதித்த, தாம் கண்டபடி வேட உடைகளையும் ஒப்பனைகளையும் குறித்துக் கொள்ளுமாறு வலியுறுத்துங்கள். தாம் இதுவரை ஏற்ற பாத்திர இயல்பிற்கு ஏற்றவாறு வேட உடைகள் அமைந்திருக்கின்றனவா என்பதை அவதானிக்குமாறு கூறுங்கள்.

மாணவர்களால் எந்தளவிற்கு, பாத்திர இயல்புகளை ஏற்க முடிந்ததும் பாத்திரத்துடன் ஐக்கியமாக முடிந்தது என்பதை வினவியறியுங்கள். பாத்திர ஒன்றிப்பிற்குத் தடையாக இருந்தவற்றைக் கண்டறிய முயலுங்கள்.

## முதன்மைப் பதங்கள் :

- பாத்திர ஒன்றிப்பு.
- உடற் தோற்றம்.
- குரலிசைக் குணாம்சம்.
- உணர்விசைக் குணாம்சம்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- பல்வேறு பாத்திரங்கள் கொண்ட அல்பம் (படங்கள்).
- பல்வேறு பாணிகள் கொண்ட நாடகங்கள் (இறுவட்டுக்கள்).
- நாடகங்களின் குறிப்பிட்ட சில பகுதிகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாத்திர ஒன்றிப்பு என்றால் என்ன என்பதை அறிந்து கூறுவார்.
- பாத்திர ஒன்றிப்பின் போது பிரதானமான விடயங்களை விளக்கிக் கூறுவார்.
- பாத்திர இயல்புகள் பாத்திர ஒன்றிப்பிற்குப் பிரதானமாவது பற்றி விளக்குவார்.
- அகரீதியான பாத்திர இயல்புகள், புறரீதியான பாத்திர இயல்புகள் என்பவற்றைப் பட்டியற்படுத்துவார்.
- பாத்திரங்களைச் சித்திரிக்கத் தயாராவார்.

## உசாத்துணைகள் :

1. நாடகமும் அரங்கியலும் - தரம் 09 ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி. (பழைய பாடத்திட்டம் 2010)
2. ஸ்ரனிஸ்லவஸ்கியின் பார்வையில் ஒரு நடிகனின் உருவாக்கம் - கணேசன் மேகநாதன்
3. நாடகக் கலை - மு. ராமசாமி.
4. அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.

**தேர்ச்சி** **3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.1** : மாணவர்களால் பாத்திரப் பண்புருவாக்கம் செய்யப் பெற்ற பாத்திரங்களை நால்வகைச் சித்திரிப்புக்களைக் கையாண்டு சித்திரிக்கக்கூடியவர் ஆவார்.

**செயற்பாடு** **3.1.2:** "பாத்திரச் சித்தரிப்புக்களில் ஈடுபடுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ பாத்திரச் சித்திரிப்பிற்கு நால்வகைச் சித்திரிப்பு அவசியம் என்பதை விளங்கியிருப்பார்.
- ✶ நால்வகைச் சித்திரிப்புக்களையும் வெளிப்படுத்தும் திறன் பெற்றிருப்பார்.
- ✶ நால்வகைச் சித்திரிப்புக்களையும் பாத்திரச் சித்திரிப்புக்குப் பயன்படுத்துவார்.
- ✶ நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்தி நாடகங்களை மேடையிடுவார்.
- ✶ நாடகங்களைப் பார்த்து நால்வகைச் சித்திரிப்புக்களையும் விளங்கிக் கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

வகுப்பில் உள்ள மாணவர்களை மண்டபம் அன்றேல் திறந்தவெளி ஒன்றிற்கு அழைத்துச் சென்று, ஒரு வட்டத்தில் நடக்க விடுங்கள். இசையை உருவாக்குங்கள். அதற்கேற்ப நடக்க விடுங்கள். விரும்பிய பாத்திரம் ஒன்றைக் கற்பனை செய்ய விடுங்கள். அப்பாத்திரத்தின் உடலியல், உளவியல், சமூகவியல் அம்சங்களை மனதிற் கொண்டு அசைய விடுங்கள். தொடர்ச்சியாக ஐந்து நிமிடங்கள் அவரவர் விரும்பியவாறு உரையாடலின்றி அப்பாத்திரங்களைச் சித்திரிக்க விடுங்கள். பின்னர் அவர்களுடன் அப்பாத்திரங்கள் பற்றிக் கலந்துரையாடுங்கள். பாத்திரச் சித்திரிப்பின் போது உடல் மற்றும் உடலசைவுகளைப் பயன்படுத்தி நடிக்கப் பெறுவது உடல்வழிச் சித்திரிப்பு எனவும்

குரல் கொண்டு வாய் மொழி மூலமான பேச்சு, உரையாடல், பாடல், சத்தங்கள் கொண்டு சித்திரிக்கப் பெறுவது குரல்வழிச் சித்திரிப்பு எனவும்

பாத்திரங்களின் முகபாவத்தினூடாக உணர்ச்சிகளைக் காட்டி நடித்தல் உணர்ச்சி வழிச் சித்திரிப்பு எனவும்

வேட உடை, ஒப்பனை என்பவற்றினூடாக நடிகர் வெளிப்படுத்துவது காண்பிய வழிச் சித்திரிப்பு எனவும்

அதேவேளை நடிகரல்லாது ஒளி விதானிப்பு, காட்சிப் பொருள்கள், காட்சி விதானிப்பு என்பவையும் காண்பியவழிச் சித்திரிப்பில் உள்ளடங்கும் என்பதையும் கலந்துரையாடுங்கள்.

மாணவர்களை ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள். ஒரு குழுவை (A) ஏதாவது ஒரு பாத்திரத்தைச் சித்திரிக்குமாறு கூறுங்கள். குழுவில் ஒருவர் ஏதாவது ஒரு பாத்திரத்தை உரையாடலின்றி நடிக்கச் சந்தர்ப்பமளியுங்கள். அவர் நடித்த பாத்திரம் என்ன என்பதை ஏனையோரிடம் வினவுங்கள் (உடல்வழிச் சித்திரிப்பு).

- ✶ ஏனைய குழுக்களையும் தயார்ப்படுத்துங்கள்.

* பாத்திரம் எதுவெனக் கண்டு பிடிக்காத சந்தர்ப்பத்தில் மீண்டும் அவர் நடித்துக் காட்ட வேண்டும்.
* இரண்டாவது குழு (B) பாத்திரத்தை உரையாடல் மாத்திரம் கொண்டு சித்திரிக்குமாறு கூறுங்கள். (குரல்வழிச் சித்திரிப்பு)
* மூன்றாவது குழு (C) முகபாவங்கள் மூலம் பாத்திரத்தைச் சித்திரிக்குமாறு கூறுங்கள். (உணர்ச்சிவழிச் சித்திரிப்பு)
* நான்காவது குழு (D) ஆடை, அணிகள், ஒப்பனை மற்றும் பொருள்களைப் பயன்படுத்தி அப்பாத்திரத்தைச் சித்திரிக்குமாறு கூறுங்கள். (காண்பியவழி)
* ஐந்தாவது குழு (E) ஆடை, அணிகள், ஒப்பனை, உரையாடல், முகபாவனை, உடல் அனைத்தையும் பயன்படுத்திச் சித்திரித்துக் காட்டுமாறு கூறுங்கள்.
* தனித்தனிச் சித்திரிப்பிற்கும் ஒட்டு மொத்த சித்திரிப்பிற்கும் இடையிலான வேறுபாட்டைக் கலந்துரையாடுங்கள்.
* அனைத்துக் குழுக்களும் இணைந்து கலந்துரையாடல் செய்ய வழிப்படுத்துங்கள்.
* மாணவர்க்கு நேரம் இருப்பின், மேலும் சில பாத்திரங்களை ஆசிரியர் வழங்கலாம்.
    - வயோதிபர்.
    - வைத்தியர்.
    - சமயவாதி.
    - குறி சொல்பவர்.

### முதன்மைப் பதங்கள் :

- முகபாவம்.
- உடல் நிலை.
- காண்பியம்.

### தரவிருத்தி உள்ளீடுகள் :

- பல்வேறு வகையான நாடகங்கள் கொண்ட இறுவட்டுக்கள்.
- நாடக ஒளிப்படங்கள்
- நாடகப் பிரதிகள்

### கணிப்பீடும் மதிப்பீடும் :

- பாத்திரச் சித்திரிப்பு என்றால் என்ன என்பதை விளக்கிக் கூறுவார்.
- பாத்திரச் சித்திரிப்பின் போது நால்வகைச் சித்திரிப்புக்களும் பயன்படும் முறையை எடுத்துரைப்பார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் வெளிப்படுத்துவார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் பாத்திரச் சித்திரிப்புக்குப் பயன்படுத்துவார்.
- நால்வகைச் சித்திரிப்புக்களையும் பயன்படுத்தி நாடகங்களை மேடையிடுவார்.

**தேர்ச்சி 3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.2** : தாம் கற்றுக் கொண்ட பாத்திர வகிபாகங்களை ஆக்க பூர்வமாகச் சித்திரித்துக் காட்டுவார்.

**செயற்பாடு 3.2** : "பாத்திர வகிபாகங்கள் சிலவற்றைச் சித்திரித்து மகிழ்வோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* தாம் கற்றுக் கொண்ட பாத்திர வகிபாகங்களுக்குரிய குணாம்சங்களை ஆய்வு செய்திருப்பார்.
* வகிபாகக் குணாம்சங்களை நடைமுறை வாழ்வுடன் ஒப்பிட்டு நோக்கியிருப்பார்.
* ஒவ்வொருவரும் பல்வேறு வகிபாகங்களை ஏற்றுச் சித்திரித்திருப்பார்.
* வகிபாகச் சித்திரிப்பின் மூலம் பாத்திர வகிபாகங்களுக்கு இடையேயான வேறுபாடுகளைப் புரிந்து கொண்டிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

பாத்திரமொன்று தன்னுள் கொண்டிருக்கக்கூடிய பலவிதமான முகங்கள், நடிபங்குகள் குறித்து ஏற்கெனவே கற்ற விடயங்களை நினைவு கூர்ந்து அவற்றைச் சித்திரித்துப் பார்ப்பதன் வழியாக வகிபாகச் சித்திரிப்பை விளங்கிக் கொள்வது இங்கு எதிர்பார்க்கப் பெறுகின்றது.

**செயலொழுங்கு 1 :**

* மாணவர்களை வசதியான காற்றோட்டமுள்ள இடத்தில் ஐதாக இருக்கச் செய்யுங்கள். அவர்களுக்கு முன்பாக மெழுகுதிரியொன்றை ஏற்றுங்கள். அதன் சுடரைப் பார்த்தவாறு இருக்கச் செய்யுங்கள். வெளிச்சிந்தனைகள் ஏதுமின்றி மனதைஅமைதியாக வைத்திருக்கக் கூறுங்கள். இதற்கு 2 நிமிடங்கள் வழங்குங்கள்.
* அந்நேர நிறைவில் கண்களை மூடச் செய்யுங்கள். வாழ்வில் தாம் காண்கின்ற எவராவது ஒருவரின் மூன்று வெவ்வேறு வகிபாகங்கள் குறித்துக் கற்பனை செய்ய அறிவுறுத்துங்கள். அவ்வகிபாகங்களது மெய்நிலை, பேச்சுப்பாணி, மெய்யசைவுகள், நடத்தைப் பாணி, அணிந்திருக்கும் ஆடை அணிகலன்கள், உணர்ச்சி வெளிப்பாடுகள் என்பவற்றைப் பற்றிச் சிந்திக்குமாறு கூறுங்கள்.
* கண்களைத் திறக்கச் செய்து எழுமாற்றாகச் சில மாணவர்களை அழைத்து, அவர்கள் கற்பனை செய்த வகிபாகங்களின் தோற்றப் பொலிவு பற்றி வினவுங்கள். அது குறித்துக் கலந்துரையாடி வகிபாகச் சித்திரிப்புத் தொடர்பில் தேவையான வலியுறுத்தல்களைச் செய்யுங்கள்.
* ஒருவருடைய வாழ்க்கை பலவிதமான வகிபாகங்களால் ஆனது. அவரது வகிபாகங்களுக்குரிய நடத்தைகளைத் தீர்மானிப்பதில் சமூகப் பின்னணி செல்வாக்குச் செலுத்தும். கல்வி, பொருளாதாரம், பரம்பரை, சூழல், சமயம் என்பவை இத்தகைய சமூகப் பின்னணியிற் சிலவாகும். இவை சார்ந்து ஒருவர் தமது வாழ்க்கைக்

கடமைகளை ஆற்றுகிறார். சமகாலத்தில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு நிலைமைகளில் வெவ்வேறு சமூகப் பொறுப்புக்கள் சார்ந்து தமது கடமையை ஆற்றும் போது அவையவற்றிற்கே உரித்தான மெய்நிலை, மெய்யசைவு, உணர்ச்சி வெளிப்பாடு, பேச்சுப்பாணி, ஆடை அணிகலப் பயன்பாடு, சிந்தனைப் போக்கு மற்றும் நடத்தைப் பாணிகள் என்பவற்றைப் பின்பற்ற வேண்டும்.

* தாம் கற்பனை செய்த வகிபாகங்களைச் சித்திரித்துக் காட்டுமாறு கேளுங்கள். ஒருவர் வெவ்வேறு வகிபாகங்களைச் சித்திரிக்கும் போது, சித்திரிப்பில் ஏற்படும் மாற்றங்களை அவதானிக்குமாறு அறிவுறுத்துங்கள்.
* சித்திரிப்பின் போது ஏற்பட்ட வலிவு நலிவுகள் குறித்துக் கலந்துரையாடுங்கள். ஒருவருடைய பல்வேறு வகிபாகங்களை ஏற்றுச் சித்திரிக்க முற்படும் நடிகன், பாத்திரத்தின் பொதுவான பண்புகளுடன் குறித்த வகிபாகங்களுக்கே உரித்தான தனித்துவமான பண்புகளையும் ஆராய வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள். பாத்திரத்தின் உடலியற் பண்புகள் யாவும் அதன் பொதுப்பண்புகளாக அமையும்.
* அதிபராகப் பாகமாடும் ஒருவர் உடலை நேராகவும் விறைப்பாகவும் வைத்திருப்பார். ஆசிரியர், மாணவர், பெற்றோர், சிற்றூழியர் போன்றோரின் கண்களைப் பார்த்துப் பேசுவார். பேச்சில் அழுத்தமும் அதிகாரத்தன்மையும் கண்டிப்பும் இருக்கும். அவர் தன் மேனிலை அதிகாரியான வலயக் கல்விப்பணிப்பாளருக்கு முன்னாற் செல்லும் போது மெய்நிலையிலும் மெய்யசைவுகளிலும் மாற்றத்தைச் செய்வார். அவரது உடலில் விறைப்பு நீங்கித் தளர்நிலை வந்திருக்கும். அவரது உடல் சற்று வளைந்திருக்கும். பேச்சில் குழைவும் மென்மையும் வேண்டுகைப் பாணியும் வந்தமரும். முகத்தில் கண்டிப்பு மறைந்து மெல்லிய சிரிப்பும் பயமும் கலந்த உணர்வு நிலவும். அதே நபர், தனது குழந்தையுடன் ஊடாடுகையில் மெய்நிலையில் கூடுதலான தளர்ச்சி, பேச்சில் இதம், பேச்சுப் பாணியில் ஓர் ஓசை நயம் என்பன வெளிப்படும்.
* ஆடை அணிகலன்களைப் பொறுத்த வரையில் அதிபர் ஆணாயின் அவர் நீளக்காற்சட்டை, முழு நீளக்கை வைத்த சட்டை, கழுத்துப்பட்டி, சப்பாத்து எனபவற்றுடன் இருப்பார். அதுவும் பாடசாலையின் தரத்தைப் பொறுத்து, சிறிய மாற்றத்திற்கு உள்ளாகும். அவர் வீட்டில் சாறம் அணிந்து இருப்பார். பெண் அதிபராயின் கண்களை உறுத்தாத நிறத்தில் சேலை அணிந்து, கொண்டையிட்டு, அளவான நகைகள் பூண்டு மிடுக்கான தோற்றத்தை வெளிப்படுத்துவார். வீட்டில் சோட்டி அணிந்திருப்பார்.
* மேற்குறித்த விவரங்களை மனங்கொண்டு இதே போன்றே ஏனைய பாத்திரங்களும் நோக்கப் பெறவேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.

## செயலொழுங்கு 2

* 'கந்தையா அண்ணை சொல்கிறார்' என்ற அரங்க விளையாட்டை விளையாடி, மாணவரை இருவரிருவராய்ச் சோடி சேரச் செய்யுங்கள். கீழே தரப்பெற்றுள்ள பாத்திரச் சோடிகளை அன்றேல் நீங்களே ஆயத்தப்படுத்திய பாத்திரச் சோடிகளைத் திருவுளச் சீட்டு மூலம் வழங்குங்கள்.
* தத்தம் வகிபாகங்கள் குறித்துத் தனித்தும் சோடியாகவும் ஆயத்தம் செய்யச் சிறிது நேரத்தை வழங்குங்கள்.
* ஒவ்வொரு பாத்திரச் சோடியையும் தத்தமது வகிபாகங்களைச் சித்திரிக்க வசதி செய்யுங்கள். அச்சித்திரிப்பின் போது வகிபாகங்களுக்குப் பொருத்தமான வேட உடை,

அணிகலன்கள், தட்டு முட்டுக்கள், கைப்பொருள்கள் போன்றவற்றைப் பயன்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்துங்கள்.

- கடன் கொடுத்தவரும் பெற்றவரும்.
- விபத்தை ஏற்படுத்தியவரும் பாதிப்புற்றவரும்.
- வங்கி அதிகாரியும் வாடிக்கையாளரும்.
- வைத்தியரும் நோயாளியும்.
- அதிபரும் மாணவரும்.
- அதிபரும் வலயக் கல்விப்பணிப்பாளரும்.
- சோதிடரும் சோதிடம் கேட்பவரும்.
- அப்பாவும் / அம்மாவும், பிள்ளையும்.
- அடாவடிப் பேர்வழியும் சாதாரண பொதுமகனும்.
- உணவு பரிமாறுபவரும் உண்பவரும்.

✶ சித்திரிப்பின் வலிவு நலிவுகள் குறித்துக் கலந்துரையாடி வகிபாகச் சித்திரிப்புத் தொடர்பில் புரிதலை ஏற்படுத்துங்கள்.

## முதன்மைப் பதங்கள் :

- நடிபங்கு.
- பேச்சுப் பாணி.
- மெய்யசைவு.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

✶ வகிபாகம் குறித்த திருவுளச் சீட்டுக்கள்.
✶ வகிபாகங்களை வெளிப்படுத்தும் ஒளிப்படங்கள்.
✶ மெழுகுதிரி.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

✶ விதந்துரைக்கப் பெற்ற வகிபாகங்களைச் சித்திரிப்பார்.
✶ வகிபாகங்களுக்குரிய பண்புகளை முன்வைப்பார்.
✶ வகிபாகங்களுக்கும் சமூகத்திற்கும் உள்ள தொடர்பைக் கண்டறிந்து கூறுவார்.
✶ வகிபாகச் சித்திரிப்பால் மகிழ்வுறுவார்.
✶ கூட்டாகச் செயற்பட்டு வகிபாகங்களைச் சித்திரிப்பார்.

## உசாத்துணை

1. ஆசிரியர் அறிவுரைப்பு வழிகாட்டி - தேசிய கல்வி நிறுவகம்
   நாடகமும் அரங்கியலும் தரம் 09
   (பழைய பாடத்திட்டம்).

**தேர்ச்சி** 3.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.3 : மாணவர்களால் ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருவின் மோடிக்கு அமைவாகத் துணைக் கலைகளைப் பிரயோகிப்பார்.

**செயற்பாடு** 3.3 : ''மோடிக்கு அமைவாகத் துணைக் கலைகளைப் பிரயோகிப்போம்.''

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* நாடக எழுத்துருவின் மோடியை விளங்கியிருப்பார்.
* மோடிக்கேற்பத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுவார்.
* மோடிக்கமைவாகத் துணைக்கலைகளைப் பிரயோகிப்பார்.
* வரலாற்று நாடகங்களுக்குத் துணைக்கலைகளை அமைப்பதிலுள்ள வித்தியாசத்தை உணர்ந்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

* வெவ்வேறு வகைப்பட்ட மோடிகளைப் பிரதிபலிக்கும் நாடகங்களின் படங்களையும் அப்படங்களைச் சுட்டும் மோடிகள் எழுதப் பெற்ற சொல்லட்டைகளையும் சேகரித்து ஒழுங்கின்றிக் காட்சிப்படுத்துங்கள்.
* அவற்றை மாணவர்கள் பார்வையிடச் சந்தர்ப்பமளிப்பதுடன் காட்சிப்படுத்தப் பெற்ற நாடகப் படங்களையும் அவற்றிற்கேயுரிய மோடிகளைக் குறிக்கும் சொல்லட்டைகளையும் பொருந்தக் கூடிய வகையில் ஒழுங்குபடுத்த வாய்ப்பளியுங்கள்.
* மாணவர்கள் ஒழுங்குபடுத்தியதனை அடிப்படையாகக் கொண்டு, பின்வரும் வகையில் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
* நடிகனது நடிப்புக்குத் துணைபுரிகின்ற கலைகள் துணைக்கலைகள் ஆகும்.

  **உதாரணமாக;**

  - காட்சி விதானிப்பு.
  - வேட உடை.
  - ஒப்பனை.
  - மேடைப்பொருள்.
  - கைப்பொருள்.
  - இசை.
  - ஒளி.

  என்பன.

* நாடக மோடியின் தன்மைக்கேற்ப அதில் பயன்படுத்தப் பெறும் துணைக்கலைகளின் தன்மையும் வேறுபடும்.

**உதாரணமாக;**

- யதார்த்தப் பாங்கான நாடகத்தில் பயன்படுத்தப் பெறுகின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் வாழ்க்கையை ஒத்ததாகவும் இயல்புப் பாங்கானதாகவும் அமைந்திருக்கும்.
- யதார்த்த விரோதப் பாங்கான நாடகத்தில் பயன்படுத்தப்பெறும் துணைக்கலைகள் ஒவ்வொன்றுமே வாழ்க்கையை ஒத்ததாகவோ இயல்பானதாகவோ அல்லாது அதிலிருந்து சற்று வேறுபட்டதாக, மோடிமைப் பண்புடன் கூடியதாகக் காணப்படும்.
- வரலாற்று நாடகத்தைப் பொறுத்த வரையில் அதில் பயன்படுத்தப்பெறும் துணைக்கலைகள் நாடகக் கதை விவரிக்கும் வரலாற்றுக் காலத்தைப் பிரதிபலிப்பனவாகக் காணப்பெறும். அதாவது, நாடகக் கதை குறிப்பிடும் வரலாற்றுக் காலத்தில் பயன்படுத்திய வேட உடைகள், தலை அலங்காரங்கள், தளபாடங்கள், கட்டட அமைப்புக்கள் போன்றவற்றினைப் பிரதிபலிக்கத் தக்கதாகத் துணைக்கலைகள் வடிவமைக்கப் பெற வேண்டும்.

(வசதி வாய்ப்பிருப்பின் மாணவர்களின் மேலதிக விளக்கத்திற்காக வெவ்வேறு வகைப்பட்ட மோடிகளையுடைய நாடகப் படக்காட்சிகளைக் காண்பிப்பதன் மூலமும் நாடக மோடிகளில் துணைக்கலைகளின் பிரயோகம் குறித்து விளக்கமளிக்கலாம்).

* நாடக எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு துணைக்கலைகளைத் தீர்மானிப்பதில் செல்வாக்குச் செலுத்துகின்ற அம்சங்களாக
  - நாடக மோடி
  - கதைக்காலம்
  - கரு
  - பாத்திரங்கள்
  - பாத்திரப்பண்புகள்

  என்பன அமைகின்றன.
* எழுத்துருவை அடிப்படையாகக் கொண்டு அதில் துணைக்கலைகளின் பயன்பாட்டை நாம் இனங்கண்டறிவதற்கும் பின்வரும் அம்சங்கள் உதவுகின்றன.
  - மேடைக்குறிப்பு.
  - சொல்லாடல்.
  - பாத்திரச் செயலியக்கம்.
* மாணவர்களை ஆறு குழுக்களாக்குங்கள்.
* மாணவர்களால் ஏற்கெனவே ஆக்கப்பெற்ற எழுத்துருக்களை அனைத்துக் குழுக்களுக்கும் வழங்குங்கள்.
* துணைக்கலைகள் எழுதப் பெற்ற சொல்லட்டைகளைத் திருவுளச்சீட்டு மூலம் ஒவ்வொரு குழுவுக்கும் பகிர்ந்தளியுங்கள்.
* ஒவ்வொரு குழுவும் தேர்ந்தெடுத்த தலைப்புக்கமைவாக வரலாற்று நாடகத்திற்கான துணைக்கலையைத் திட்டமிட வழிப்படுத்துங்கள்.
* ஒவ்வொரு குழுவும் திட்டமிட்டவாறு துணைக்கலைகளைப் பிரயோகித்துப் பார்க்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

* மேற்படி குழுநிலையில் மாணவர்கள் முன்வைத்த செயற்பாட்டை அடிப்படையாகக் கொண்டு நாடகமோடிக்கமைவான துணைக்கலைகளின் பிரயோகம் பற்றிக் கருத்துக்களைப் பரிமாறச் சந்தர்ப்பமளியுங்கள்.

  பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
* நாடகத்தில் பிரயோகிக்கப் பெறுகின்ற துணைக்கலைகள் நாடக மோடிக்குப் பொருந்தக்கூடியவாறு இருக்க வேண்டும்.
* நாடகத்தில் பிரயோகிக்கப் பெறுகின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவானதாகக் காணப்பட வேண்டும்.
* நாடகத்தில் துணைக்கலைகளைப் பிரயோகிக்கின்ற போது ஒன்றிலிருந்து ஒன்று மேலோங்கியிருக்காதவாறு கவனஞ் செலுத்த வேண்டும்.

  **உதாரணமாக;**

  - ஒரு நாடகத்திற்கென இயல்பாகப் பெற்ற ஒப்பனையைக் காட்டிலும் வேட உடை மோடிமைப் பாங்கானதாக இருத்தல் ஆகாது. மாறாக, வேட உடை இயல்புத்தன்மையாய் இருக்க ஒப்பனை மோடிப்படுத்தப் பெற்றதாக இருத்தலாகாது.
  - ஆனால், விதிவிலக்காகச் சில நாடகங்களின் தேவை கருதி மேற்படி வேட உடை ஒப்பனை அமையலாம்.
* நாடகத்தில் பிரயோகிக்கின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் ஒன்றுடன் ஒன்று ஒத்திசைவானதாகவும் சமநிலைத் தன்மையுடையதாகவும் காணப்பட வேண்டும்.
* அதாவது இசை, காட்சி விதானிப்பு, வேட உடை, ஒப்பனை, ஒளி, மேடைப்பொருள் என்பன நாடகத்தின் மோடிக்கமைய ஒன்றுடன் ஒன்று பொருந்தி இணைந்து இருப்பதுடன் இவற்றிற்கிடையே ஒரு சமநிலைத்தன்மையும் பேணப்பட வேண்டும்.
* நாடகத்தில் துணைக்கலைகளின் பிரயோகமானது நடிகனது நடிப்புக்குத் துணை புரிவதாக இருக்க வேண்டுமே தவிர இடையூறாக இருக்கக் கூடாது.
* நாடகத்தில் பயன்படுத்தப்பெறுகின்ற துணைக்கலைகள் ஒவ்வொன்றும் இன்ன மோடிக்குரிய நாடகம் என்பதனை இனங்காட்டத்தக்க வகையில் துணைக்கலைகள் திட்டமிடப் பெறவேண்டும்.
* நாடகம் பேசவிளையும் கருப்பொருளுடன் நெருங்கிய தொடர்புடையதாகத் துணைக்கலைகள் பயன்படுத்தப்பெற வேண்டும்.

## முதன்மைப் பதங்கள் :

- துணைக்கலைகள்.
- நாடக மோடி.
- ஒத்திசைவு.
- சமநிலை.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- மாணவர்களால் எழுதப் பெற்ற எழுத்துருப் பிரதிகள் சில.
- வெவ்வேறு நாடக மோடிகளைக் கொண்ட காணொளி இறுவட்டு (VCD).
- வெவ்வேறு நாடக மோடிகளின் படங்கள்.

- சொல்லட்டை.
- டிமைன் தாள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- நாடக எழுத்துருவின் மோடியை அறிந்திருப்பார்.
- மோடிக்கேற்பத் துணைக்கலை அம்சங்களைத் திட்டமிடுவார்.
- மோடிக்கமைவாகத் துணைக்கலைகளைப் பிரயோகிப்பார்.
- வேறுபட்ட நாடக மோடிகளின் துணைக்கலைப் பிரயோகத்தை ஒப்பு நோக்குவார்.
- நாடகத்தில் துணைக்கலைகளைப் பிரயோகிப்பதில் ஆர்வம் காட்டுவார்.

**உசாத்துணைகள் :**


1. அரங்கியல் - முனைவர் வே.சறோஜா, முனைவர் சக்திப்பெருமாள்.
2. அரங்கின் பரிமாணங்கள் - விபவி வெளியீடு.
3. தமிழ் அரங்கியல் மரபும் மாற்றமும் - தொகுப்பு - மதுசூதனன்.

**தேர்ச்சி** 3.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கோட்பாடுகளை அனுசரித்துச் செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.4 : கூட்டாக அரங்க விளையாட்டுக்களில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** 3.4 : "கூட்டாகச் சேர்ந்து அரங்க விளையாட்டுக்களை விளையாடுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ விளையாடப் பெறுகின்ற அரங்க விளையாட்டுக்களை விளையாடும் முறையை விவரிப்பார்.
- ✶ கூட்டாக விளையாடும் பண்பை வெளிப்படுத்தியிருப்பார்.
- ✶ கூட்டாகச் சேர்ந்து விளையாடும் அரங்க விளையாட்டுக்களைப் பட்டியற்படுத்தி வைத்திருப்பார்.
- ✶ விதிமுறைகளைப் பின்பற்றி விளையாடும் பண்பை வெளிப்படுத்துவார்.
- ✶ கூட்டாக விளையாடுவதனால் பெறும் மகிழ்வினையும் இடர்பாடுகளையும் வெளிப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

மாணவர்களைத் திறந்த வெளி ஒன்றிற்கு அழைத்துச் சென்று, அவர்களது எண்ணிக்கைக்கு ஏற்ப ஐந்து குழுக்களாகப் பிரியுங்கள். ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு அரங்க விளையாட்டைக் கொடுத்து விளையாட அனுமதியுங்கள். மாணவர் எண்ணிக்கை குறைவாயின் விளையாட்டுக்களை ஒரு குழுவாகவும் ஒன்றன்பின் மற்றொன்றாகவும் ஆடச் செய்யுங்கள்.

- ஆடும் வீடும்.
- பழக்கலவை.
- நண்டு, இறால், மீன்.
- கோழி கோட்டான்.
- கரடியும் கிராம மக்களும்.
- காகம் உயிர் பெறல்.

மாணவர்கள் குழுக்களாக விளையாடும் போது அவர்கள் விளையாடும் விதம் பற்றி அவதானித்து, விதிமுறைகள் மீறப் பெற்ற சந்தர்ப்பங்களை இனங்கண்டு முன்வையுங்கள். விதிமுறைகளை அனுசரித்து விளையாடுவதன் அவசியத்தைத் தெரியப்படுத்துங்கள்.

ஒவ்வொரு குழுவும் விளையாடிய அரங்க விளையாட்டுக்கள் மூலம் பெற்ற மகிழ்வினையும் இடர்பாடுகளையும் குழுக்குழுவாக எடுத்துரைக்கச் செய்யுங்கள். இதன் போது, கூட்டாக ஒன்று சேர்ந்து விளையாடுவதன் மூலம் ஏற்படும் மாற்றங்கள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- புரிந்துணர்வு.
- விட்டுக்கொடுப்பு.
- ஒருவரை ஒருவர் அறிதல்.
- உறவு நிலை.
- சினேகபூர்வமான நிலை.
- ஒற்றுமை.
- தலைமைத்துவம்.
- உதவி செய்யும் மனப்பாங்கு.
- போட்டியில் ஆர்வம்.
- ஏனையோரது கருத்துக்களை மதித்தல்.
- கற்பனை விருத்தி.

மாணவர்கள் கூட்டாக இணைந்து விளையாடும் அரங்க விளையாட்டுக்கள் மூலம் பெற்ற அனுபவங்களை, பயன்களை அட்டைகள், கடதாசிகளில் எழுதி வகுப்பறையில் காட்சிப்படுத்த வழிப்படுத்துங்கள்.

கூட்டாக விளையாடும் அரங்க விளையாட்டுக்கள் நடிகனது நடிப்பாற்றலுக்குத் துணை நிற்கின்ற முறை பற்றியும் கலந்துரையாடுங்கள்.

- சித்திரிப்புப் பணியை இலகுவாக்கலாம்.
- கற்பனையினை விருத்தி செய்யலாம்.
- உடல், உள, குரல் ஒருமைப்பாட்டினைப் பேணலாம்.
- நினைவாற்றலை விருத்தி செய்துகொள்ளலாம்.
- சபைக்கூச்சம் நீங்கப் பெறலாம்.
- பரஸ்பர ஒத்துழைப்பைப் பெறலாம்.

## முதன்மைப் பதங்கள் :

- நினைவாற்றல்.
- விதிமுறை.
- அனுசரித்தல்.

## தரவிருத்தி உள்ளீடு :

- அரங்க விளையாட்டுக்கள்.
- வாத்தியங்கள்.
- கடதாசி.
- பிறிஸ்ரல் போட்.
- மாக்கர்.
- எழுதிய அட்டைகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கூட்டாக விளையாடும் அரங்க விளையாட்டுக்களைப் பட்டியற்படுத்துவார்.
- விதிமுறைகளை அனுசரித்து விளையாடுவார்.
- கூட்டாக விளையாடும் பண்பை வெளிப்படுத்துவார்.
- கூட்டாக விளையாடுவதன் ஊடாகச் சித்திரிப்புப் பணியை இலகுவாக்குவார்.
- விளையாட்டில் ஏற்படும் உணர்வு நிலையைப் பகிர்வார்.

**உசாத்துணைகள் :**

1. மகிழ்வுடன் வாழ்தல் - GTZ , தேசிய கல்வி நிறுவகம்.
2. செயற்பட்டு மகிழ்வோம் - கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.
3. வீடியோ காட்சி.

**தேர்ச்சி** **3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.5** : நால்வகைச் சித்தரிப்புக்களுக்கான அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** **3.5.1**: "பாத்திர மெய்நிலைகளைப் படைப்போம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- உடலைத் தளர் நிலையில் வைத்திருப்பார்.
- வெவ்வேறு மெய்நிலைகள் குறிமுறையாக ஒரு செய்தியை வெளிப்படுத்தும் என்பதனை விளங்கியிருப்பார்.
- வெவ்வேறு மெய்நிலைகளைப் படைப்பதற்கான நுட்பத்தினைப் பெற்றிருப்பார்.
- பொருத்தமான மெய்நிலைகளைப் படைப்பதற்கு உடலைக் கையாளப் பழகியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- உடற் தளர்வுப் பயிற்சிக்குப் பொருத்தமான இடத்தைத் தெரிந்தெடுத்து மாணவர்களைச் சுயாதீனமாக நடக்க வாய்ப்பளியுங்கள்.
- வெவ்வேறு தோற்கருவிகளினதும் வேறுபட்ட கதிகளைக் கொண்டமைந்ததுமான இசை இறுவட்டினை ஒலிக்கச் செய்து அதற்கேற்ப மாணவர் தமது உடலை விரும்பியவாறு அசைக்க வழிப்படுத்துங்கள்.
- இறுவட்டில் இசை ஒலிக்கவிடப்படும் சந்தர்ப்பத்தில் இடையிடையே சில அறிவுறுத்தல்கள், செயற்பாட்டுக் குறிப்புக்களை வழங்கி, அதற்குப் பொருத்தமான நிலைகளை உடல் மூலம் வெளிப்படுத்தியவாறு மாணவர்களை உறை நிலையில் நிற்கச் சந்தர்ப்பமளியுங்கள்.
- உதாரணமாகப் பின்வரும் வகைகளில் கட்டளைகளைப் பிறப்பிக்கலாம்.
  - வணக்கம் செலுத்துதல்.
  - கயிறிழுத்தல்.
  - பயப்படுதல்.
  - வயோதிபர்.
  - யானை.

இது போன்று ஆசிரியர் தனது கற்பனைக்கேற்ப வெவ்வேறு மெய்நிலை சார்ந்த கட்டளைகளைப் பிறப்பிக்கலாம். மேற்படி மாணவர்களது மெய்நிலைகளை அடிப்படையாகக் கொண்டு கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.

✶ மெய்நிலை என்பது ஒரு பாத்திரம் வெளிப்படுத்தி நிற்கும் உடற்தோற்றப்பாடு ஆகும். பாத்திர மெய்நிலைகள் ஒவ்வொன்றும் தனக்கேயுரிய தனித்துவமான கருத்தினைக் குறிப்பாகச் சுட்டி நிற்கும்.

**உதாரணமாக;**

- பாத்திரத்தை அடையாளப்படுத்தும்.
- பாத்திரச் செயலை விளக்கும்.
- பாத்திர உணர்வுகளை வெளிப்படுத்தும்.

✶ மெய்நிலைகளைத் தீர்மானிப்பதில் பின்வரும் அம்சங்கள் தாக்கம் செலுத்தும்.

- களம்.
- சந்தர்ப்பம்.
- பாத்திரம்.
- செயல்.
- உணர்வு.
- பாத்திர உணர்வு நிலை.

என்பன.

✶ மெய்நிலையைத் தனியாகவோ கூட்டாகவோ சித்திரித்துக் காட்டலாம்.

✶ மாணவர்களை ஆறு குழுக்களாக்குங்கள்.

குழு-1 பாத்திரங்களின் பெயர்கள்

(மான், பாம்பு, பத்திரகாளி, இயேசு, கண்ணகி, அரசன், மற்றும் பிற).

குழு-2 உணர்வுகள்

(கோபம், பயம், வெட்கம், ஆச்சரியம், மற்றும் பிற).

குழு-3 செயல்கள்

(பாடம் படித்தல், மாவிடித்தல், அம்மியில் அரைத்தல், வயலின் வாசித்தல், மற்றும் பிற).

குழு-4 களங்கள்

(அரச சபை, பாடசாலை, ஆலயம், மற்றும் பிற).

மேற்படி தலைப்புக்கள் அடங்கிய அன்றேல் இது போன்று வேறு தலைப்புக்கள் அடங்கிய சொல்லட்டைகளை ஒவ்வொரு குழுக்களுக்கும் வழங்குங்கள்.

✶ ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப் பெற்ற விடயத்தினைத் தயார்ப்படுத்தி நிகழ்த்திக் காட்டும் போது, ஏனைய குழுக்கள் அவர்கள் நிகழ்த்திக் காட்டும் விடயங்கள் என்னவென்பதனை அடையாளப்படுத்திக் கூறச் செய்யுங்கள்.

பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு விடயத்தைத் தெளிவுபடுத்துங்கள்.

✶ பாத்திர மெய்நிலைகள் ஒவ்வொன்றும் பாத்திரத்தின் தன்மை, உணர்வு நிலை, சந்தர்ப்பம், களம், செயல், மட்டம் என்பவற்றிற்கேற்ப வேறுபடும்.

**உதாரணமாக;**

- அரச பாத்திரத்திற்கான மெய்நிலைக்கும் வயோதிப பாத்திரத்திற்கான மெய்நிலைக்கும் வேறுபாடுண்டு.
- கோபப்படும் போதும் ஆச்சரியப்படும் போதும் மெய்நிலை வேறுபடும்.
- மழை பெய்தல், இடி இடித்தல் ஆகிய வேறு சந்தர்ப்பங்களிலும் பாத்திரங்களின் மெய்நிலை வேறுபடும்.
- ஆலயம், வீடு ஆகிய இரு வேறு களங்களிலும் பாத்திர மெய்நிலை வேறுபடும்.
- அருவி வெட்டுதல், சாப்பிடுதல் ஆகிய இரு வேறு செயல்களிற்குமான பாத்திர மெய்நிலை வேறுபடும்.
- வயோதிப பாத்திரம் ஒன்று இருப்பதற்கும், நிற்பதற்கும், நித்திரை கொள்வதற்கும் ஆன மெய்நிலைகள் மட்டம் (Level) சார்ந்து வேறுபடும்.

* பாத்திரங்களுக்கு இடையேயான தொடர்பாடலின் அடிப்படையில் மெய்நிலை ஒத்த தன்மை கொண்டதாகவோ வேறுபட்ட தன்மை கொண்டதாகவோ அமையும்.

  **உதாரணமாக;**

  - இரு பாத்திரங்கள் ஒருவருக்கொருவர் வணக்கம் செலுத்தும் போது, இரு பாத்திரங்களுக்கு இடையேயான மெய்நிலைகளும் ஒத்ததன்மை வாய்ந்ததாக அமையும். ஒரு பாத்திரம் அடிப்பது போன்றும் மற்றைய பாத்திரம் அதனைத் தடுப்பது போலவும் அமைவது, வேறுபட்ட மெய்நிலைகளை இரு பாத்திரத் தொடர்பு நிலையிலும் உருவாக்கும்.

* மெய்நிலைகள் ஒவ்வொன்றும் சரியான முறையில் சித்திரிக்கப் பெறாதுவிடின் அவை பிறிதொரு அர்த்தத்தினைத் தவறாக வழங்கும்.
* மெய்நிலைகளின் முறையான வெளிப்பாட்டிற்கு நடிகனுக்கு உடற்தளர்வுப் பயிற்சி அவசியம்.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- இசை இறுவட்டு.
- காணொளிப் பேழை.
- சொல்லட்டை.

## முதன்மைப் பதங்கள் :

- மெய்நிலை.
- மட்டம்.
- உடற்தளர்வு.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- மெய்நிலை என்றால் என்ன என்பதனை அறிந்திருப்பார்.
- மெய்நிலைகள் ஒவ்வொன்றும் தமக்குரிய செய்தியை வெளிப்படுத்தும் என்பதனை விளங்கியிருப்பார்.
- வேறுபட்ட மெய்நிலைகளைப் படைத்துக் காட்டுவார்.
- மெய்நிலைகளுக்குப் பொருத்தமான வகையில் உடலைக் கையாள்வார்.

- சமூகத்தில் வேறுபட்ட பாத்திர மெய்நிலைகளை ஒப்பு நோக்குவார்.

**உசாத்துணைகள் :**

1. உடல் அசைவும் உடல் மொழியும் - கலாநிதி என். சிறிதரன்.
2. நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.

**தேர்ச்சி** 3.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.5 : நால்வகைச் சித்திரிப்புக்களுக்கான அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** 3.5.2: "பாத்திர வகிபாகத்திற்குரிய பாவங்களைச் சித்திரிப்போம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- பாவ வெளிப்பாட்டுக்கு முகம் பிரதானம் என்பதை விளங்கியிருப்பார்.
- முகத்தின் தசை நார்களை உணர்ச்சி பாவத்திற்கேற்பப் பயன்படுத்தும் திறன் பெற்றிருப்பார்.
- பாவ வேறுபாட்டிற்கேற்ப முகத் தோற்ற வேறுபாடுகளை ஒப்பு நோக்கியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

**செயற்பாடு 1 :**

- வகுப்பில் உள்ள மாணவர்களில் ஒன்பது மாணவர்களை அழைத்து, நவரசங்கள் எழுதிய அட்டையை ஆளுக்கு ஒன்று வீதம் வழங்குங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் தமக்கு வழங்கப்பெற்ற நவரசங்களை முகபாவத்தினூடாக உறைநிலையில் வெளிப்படுத்தி நிற்க வழிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு மாணவரும் வெளிப்படுத்தி நிற்கும் 'ரஸம்' யாதென்பதை மாணவர்களிடம் கேட்டறிந்து அதுபற்றிக் கலந்துரையாடுங்கள்.
    - பாவம் என்பது உணர்ச்சி வெளிப்பாடு ஆகும்.
    - பாவத்தினை (Bhava) பரதர் 'ரஸம்' என்றும் தொல்காப்பியர் 'மெய்ப்பாடு' எனவும் குறிப்பிடுகின்றார்.
    - பாவ வெளிப்பாட்டிற்கு 'முகம்' பிரதான ஊடகமாகும்.
    - பாவ வேறுபாட்டிற்கேற்ப முகத்தின் தோற்றப்பாடு வேறுபடும்.
    - பாத்திரப் பண்புக்கேற்ப பாவம் வேறுபடும்.
- மாணவர்களைக் குழுக்களாக்கி, ஒவ்வொரு குழுவிற்கும் ஒவ்வொரு உணர்வு வெளிப்பாட்டைச் சித்திரிக்கும் படத்தை வழங்குங்கள்.

* ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப் பெற்ற படம் குறிக்கும் உணர்வு வெளிப்பாட்டை முகபாவங்களினூடாகச் சித்திரித்துக் காட்டச் சந்தர்ப்பம் வழங்குங்கள். ஒவ்வொரு உணர்வு குறித்தும் குறைந்தது ஐந்து வேறுபட்ட சந்தர்ப்பங்களைக் கவனத்தில் கொண்டு சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

**உதாரணமாக;**

"சிரிப்பு" எனும் உணர்வின் வேறுபட்ட சந்தர்ப்பங்கள்

- மனமுவந்து சிரித்தல்.
- விருப்பமின்றிச் சிரித்தல்.
- வரவேற்கும் போது சிரித்தல்.
- தந்திரமாகச் சிரித்தல்.
- குறும்புத்தனமாகச் சிரித்தல்.

இது போன்று ஒவ்வொரு குழுவும் தமக்கு வழங்கப் பெற்ற உணர்வின் வேறுபட்ட சந்தர்ப்பங்களை முகபாவத்தினூடாகச் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

மேற்படி, உணர்வு நிலை சார்ந்த வேறுபட்ட சந்தர்ப்பத்தைக் குழுநிலையில் தமது விருப்பத்திற்கேற்பச் சித்திரித்துக் காட்டலாம். அன்றேல் ஆசிரியரால் வழங்கப்பெற்ற குறித்த உணர்வின் வேறுபட்ட சந்தர்ப்பங்களைச் சித்திரித்துக் காட்டலாம்.

## செயற்பாடு 2 :

* பாவ வெளிப்பாட்டில் பல்வேறு அம்சங்கள் தாக்கம் செலுத்தும் என்பதனை மாணவர்கள் விளங்கிக் கொள்ளும் வகையில் பின்வரும் சந்தர்ப்பங்களைப் பயிற்சியாக வழங்குங்கள்.
* வெவ்வேறு வகைப்பட்ட பாத்திரங்களை வழங்கி, அப்பாத்திரத்திற்கேயுரிய முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்டவழிப்படுத்துங்கள்.

  உதாரணம்; வைத்தியர், நோயாளி.
* வெவ்வேறு வகைப்பட்ட செயலியக்கங்களை, அச்செயலியக்கங்களிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். உதாரணம்; அடித்தல், அரவணைத்தல்.
* வெவ்வேறு வகைப்பட்ட சொற்களை வழங்கி அச்சொற்களிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். உதாரணம்; 'மூடா' , 'நாதா'
* வெவ்வேறு வகைப்பட்ட இசைக்கருவிகளினால் இசைக்கப்படும் இசையைக் காணொளிப் பேழையில் ஒலிக்கச் செய்வதன் மூலம் அவ்விசைக்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள். உதாரணம்; புல்லாங்குழல் இசை, வயலின் இசை.
* இருவகைப்பட்ட பாத்திரங்களின் பெயர்களைக் கூறி, அப்பாத்திர உறவுநிலைக் கிடையேயான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

  **உதாரணம்;**

  - நண்பர்கள் இருவருக்கான பாத்திர உறவு நிலை.
  - ஆசிரியர் மாணவனுக்கான பாத்திர உறவு நிலை.
  - அரசன் குடிமகனுக்கான பாத்திர உறவு நிலை.

* வெவ்வேறு வகையான நிறுத்தற் குறிகளை வழங்கி, அவற்றிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

**உதாரணம்;**

- முற்றுப்புள்ளி (.)
- கேள்விக்குறி (?)
- ஆச்சரியக் குறி (!)

* வெவ்வேறு ஒலிவிளைவுகளை வழங்கி, அவற்றிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

**உதாரணம்;**

- இடி முழக்கம்.
- பறவைகளின் ஒலி.

* வெவ்வேறு வகைப்பட்ட சந்தர்ப்பங்களை வழங்கி, அவற்றிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

**உதாரணம்;**

- போட்டியில் வெற்றியீட்டும் சந்தர்ப்பம்.
- போட்டியில் தோல்வியைத் தழுவும் சந்தர்ப்பம்.

* வேறுபட்ட சூழமைவுகளை வழங்கி, அவற்றிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

**உதாரணம்;**

- விபத்து.
- பிறந்தநாள் வைபவம்.

* வேறுபட்ட களங்களை வழங்கி, அவற்றிற்குப் பொருத்தமான முகபாவங்களை மாணவர்கள் சித்திரித்துக் காட்ட வழிப்படுத்துங்கள்.

**உதாரணம்;**

- காடு.
- பூந்தோட்டம்.

* பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
  - சொல்லாடல் நடிகனுக்கு எவ்வளவு முக்கியமோ அதுபோல் முகபாவமும் நடிகனுக்கு முக்கியம்.
  - கருத்துப் பரிமாற்றத்துக்கு முகபாவம் இன்றியமையாததாகும்.
  - முகபாவத்தை முழுமையாக வெளிப்படுத்த முகத்தில் காணப்படும் நெற்றி, புருவம், கண், கன்னம், உதடு போன்ற உறுப்புக்கள் உதவுகின்றன.
  - பாவ வெளிப்பாட்டில் பாத்திரம், செயலியக்கம், சொல், இசை, பாத்திர உறவுநிலை, நிறுத்தற் குறி, ஒலிவிளைவு, சந்தர்ப்பம், சூழமைவு, களம் என்பன தாக்கம் செலுத்தும்

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- நவரசங்களின் படங்கள்.
- பல்வகைப்பட்ட பாத்திரங்களின் படங்கள்.
  (வேறுபட்ட உணர்வை வெளிப்படுத்தக்கூடிய)

**முதன்மைப் பதங்கள் :**

- பாவம்.
- ரஸம்.
- மெய்ப்பாடு.
- உணர்வு.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாவம் என்றால் என்ன என்பதை அறிந்திருப்பார்.
- பாவ வெளிப்பாட்டிற்கு முகம் பிரதானம் என்பதனை விளங்கியிருப்பார்.
- வேறுபட்ட பாவங்களை முகத்தினூடாக வெளிப்படுத்தக் கூடியவராவார்.
- பாவ வேறுபாட்டிற்கேற்ப முகத்தின் மாற்ற வேறுபாடுகளை ஒப்பு நோக்குவார்.

**உசாத்துணைகள் :**


1. நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்.
2. நடிப்புக்கலை - மு. மகேந்திரன்.

3. ஒரு நடிகனின் உருவாக்கம் ஸ்ரனிஸ்லவெஸ்சியின் பார்வையில் - கணேசன் மேகநாதன்.

**தேர்ச்சி** **3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.5** : நால்வகைச் சித்தரிப்புக்களுக்கான அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** **3.5.3:** “சித்திரிப்பின் போது கண் தொடர்பைப் பேணுவோம்.”

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ முகத்திலுள்ள உறுப்புக்களில் உணர்ச்சிச் செறிவான உறுப்புக்கள் கண்களே என்பதை விளங்கியிருப்பார்.
- ✶ கண்கள் வழியாக வேறுபட்ட உணர்வு நிலைகளைப் பரிமாற்றுவார்.
- ✶ நடிகனது நடிப்பு வெளிப்பாட்டிற்குக் கண் முக்கியமானது என்பதனை உணர்ந்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

- ✶ பொருத்தமான இடத்தினைத் தேர்ந்தெடுத்து, இதமான இசை இறுவட்டினைக் காணொளிப் பேழையில் ஒலிக்க விடுங்கள்.
- ✶ மாணவர்களை இருவர் இருவராகச் சோடி சேரச் செய்து, ஒருவரது கண்ணை மற்றவர் பார்த்தவாறு நிற்கச் செய்து, கண்ணாடிப் பயிற்சி மூலமோ அன்றேல் அது போன்ற வேறு பயிற்சியின் மூலமோ பின்வரும் விடயங்களைப் பரிமாற வழிப்படுத்துங்கள்.
    - கண்சார்ந்த அசைவுகள்.
    - கண்களினூடான செய்திப் பரிமாற்றம்.
    - கண்களினூடான வெவ்வேறு உணர்வுப் பரிமாற்றம் என்பன.
- ✶ மேற்படி செயற்பாடுகளின் போது எந்தச் சந்தர்ப்பத்திலும் இருவருக்கிடையிலான கண் தொடர்புநிலை விடுபடாத வகையில் இருக்க வழிப்படுத்துங்கள்.
- ✶ பின்வரும் விடயங்கள் குறித்து மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- உணர்வு வெளிப்பாட்டில் முகத்திலுள்ள உறுப்புக்களில் கண் பிரதானமானது.
- சொற்களால் மட்டுமன்றிக் கண்களுக்கூடாகவும் கருத்துகள் பரிமாறப்படுகின்றன.
- நடிகனது நடிப்பு வெளிப்பாட்டில் கண் முக்கியமானது.
- கண்களுக்கூடாகப் பாத்திர உணர்வு சிறப்பாகச் சித்திரிக்கப்படுகின்றது.
- பாத்திரச் சித்திரிப்பில் பார்ப்போருடனான தொடர்பாடலில் கண் முக்கிய பங்கு வகிக்கின்றது.

✶ மாணவர்களை இருவர் கொண்ட குழுக்களாக்குங்கள்.

✶ ஒவ்வொரு குழுவுக்கும் இரு பாத்திரங்களின் பெயர்கள் வீதம் வழங்குங்கள்.

**உதாரணமாக;**

- தாய் - மகள்/ மகன்.
- வைத்தியர் - நோயாளி.
- நண்பன் - நண்பி.
- உல்லாசப் பயணி - கிராமத்தவர்.
- கடவுள் - பக்தன்.
- அரசன் - குடிமகன்.
- ஆசிரியர் - மாணவன்.

இவ்வாறு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்பப் பாத்திரங்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

.

## செயற்பாடு 1 :

✶ ஒவ்வொரு குழுவும் வழங்கப் பெற்ற பாத்திரங்களுக்கேற்ப யாதாயினும் விடயப் பொருளை மையப்படுத்தி, அப்பாத்திரங்களிற்கிடையேயான உறவு நிலையைச் சித்திரித்துக்காட்ட வழிப்படுத்துங்கள்.

## செயற்பாடு 2 :

✶ ஒவ்வொரு குழுவிற்கும் வேறுபட்ட உணர்வுகளை வழங்கி, அவ் உணர்வு நிலை நின்று சித்திரிப்பை மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.

**உதாரணமாக;**

- தாய்-மகள் ஆகிய இரு பாத்திரங்களும் கோபப்படும் சந்தர்ப்பத்தில் இரு பாத்திரங்களிற்கும் இடையேயான கண் தொடர்பாடல் குறித்து நிகழ்த்திக் காட்ட வழிப்படுத்துங்கள்.
- இது போன்று வேறுபட்ட உணர்வுகளை வழங்கலாம்.
- பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளுமாறு கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- நடிப்பில் ஈடுபடும் ஒவ்வொரு நடிகரும் சக நடிகர்களுக்கிடையில் கண் தொடர்பாடலைப் பேணுவது அவசியமாகும்.
- நடிகர்கள் ஒவ்வொருவரும் தமக்கிடையே கண் தொடர்பாடலை முறையாகப் பேணும்போது, சொல்லவரும் விடயப் பொருள் பார்ப்போரைச் சரியாகச் சென்றடையும்.
- நடிகர் தமக்கிடையே கண் தொடர்பாடலைப் பேணுவது போன்று பார்ப் போருடனும் கண் தொடர்பாடலைப் பேணுவது அவசியமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- இசை இறுவட்டுக்கள்.
- சொல்லட்டைகள்.

**முதன்மைப் பதங்கள் :**

- உணர்வு நிலை.
- தொடர்பாடல்.
- பாத்திரச்சித்திரிப்பு.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- முக உறுப்புக்களில் கண்ணின் முக்கியத்துவத்தை அறிந்திருப்பார்.
- நடிகனது நடிப்பு வெளிப்பாட்டிற்குக் கண்ணின் முக்கியத்துவத்தை உணர்ந்திருப்பார்.
- கண்கள் வழியாக வெவ்வேறுபட்ட உணர்வுகளை வெளிப்படுத்துவார்.
- பாத்திரச் சித்திரிப்பில் கண் தொடர்பாடலைப் பிரயோகித்துப் பார்ப்பார்.
- நாடகங்களில் பாத்திரங்களது கண்தொடர்பாடல் குறித்து அவதானிப்பதில் ஆர்வம் காட்டுவார்.

**உசாத்துணைகள் :**


1. நாடகப் படைப்பாக்க அடித்தளங்கள் - பேராசிரியர் சே. இராமானுஜம்
2. பரதநாட்டிய சாஸ்திரம் - ஸ்ரீராம தேசிகர்
3. நடிப்புக் கலை - மு.மகேந்திரன்

**தேர்ச்சி** 3.0 : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** 3.5 : நால்வகைச் சித்திரிப்புக்களுக்கான அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** 3.5.4: "நாடக மோடிக்கமைவாகச் சொல்லாடுவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* குரல் வழியான சித்திரிப்பு நுட்பங்களை அறிந்திருப்பார்.
* சொல்லாடல்களின் போது அவற்றைப் பிரயோகித்திருப்பார்.
* நாடகத்தின் தாக்கவன்மைக்குச் சொல்லாடலின் முக்கியத்துவத்தை எடுத்துரைப்பார்.
* நாடக மோடிக்கமைவாகச் சொல்லாடும் முறையில் வேறுபாட்டைக் காட்டியிருப்பார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள் :**

* பொருத்தமான இடத்தில் மாணவர்களை வட்டமாக அமரச் செய்து, ஒவ்வொரு மாணவருக்கும் A4தாள் ஒவ்வொன்றை வழங்குங்கள்.
* வெவ்வேறு வகைப்பட்ட நாடக மோடிகளை உள்ளடக்கிய சொல்லாடற் பகுதிகளைக் காணொளிப் பேழையில் ஒலிக்கச் செய்து மாணவர்களைச் செவிமடுக்க வழிப்படுத்துங்கள்.
* தாம் செவிமடுத்த சொல்லாடற் பகுதிகளிற்கேயுரிய மோடிகள் என்னவென்பதை ஒழுங்குமுறை தவறாது, வழங்கப் பெற்ற A4தாளில் எழுத வழிப்படுத்துங்கள்.
* எழுமாற்றாக ஒரு மாணவரை எழச் செய்து எழுதியதை வாசிக்கச் சந்தர்ப்பமளித்து அதுபற்றிக் கலந்துரையாடுங்கள்.
* சொல்லாடல் என்பது ஒன்றுக்கு மேற்பட்ட பாத்திரங்களின் உரையாடல் என்பதை விளக்குங்கள்.
* நாடக மோடிகளின் பண்புகளிற்கேற்பச் சொல்லாடலின் பண்பும் வேறுபடும் விதத்தை அறியச் செய்யுங்கள்.

<u>உதாரணம் - 1</u>

பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் "நாட்டவன் நகரவாழ்க்கை" எனும் யதார்த்த மோடி நாடகத்தில் இடம் பெறும் சொல்லாடற் பகுதியை நோக்கின்;

**சின்னவி:**

அப்ப, உங்க இடாக்குத்தர் சங்கரப்பிள்ளைக்குக் காட்டிப்பாராதையன். அவரை மெத்தப் பேராய் பேசுகினம்.

**ஆழ்வார்:**

அவரெட்டைப் போக என்னெட்டைக் காசெங்காலை?

**சின்னவி:**

என்ன பேய்க்கதை பேசிறாய், அவருக்கேன் காசு? ஏழை எளியதுகளெட்டை அவர்

காசு கீசு பாக்கிற இல்லை. அதோடை மெத்த ஆதரவும் கவனமும். அவர்தான் உந்த வருத்தத்துக்குச் சரி. அவரெட்டை ஒருக்காக் காட்டிப்பாரன்.

**உதாரணம் - 2**

பேராசிரியர் மௌனகுருவின் ‘சங்காரம்’ எனும் யதார்த்த விரோத நாடகத்தில் இடம் பெறும் சொல்லாடற் பகுதியை நோக்கின்,

**எழுத்துரைஞர்:**

சாதியோடு வர்க்க, நிற, மத பேதமுடை அரக்கர்கள் சமுதாயத்தை வீதியில் நிறுத்தியே சவுக்கெடுத்ததன் மீது வீசினார். வீசும்போது ஆவியே உருகியே, சமுதாயம் ஐயையோ அலறியே துடிதுடித்து மேவியே எனைக்காரும் மக்களே என்றுமே மேதினியைப் பார்த்தழுதாள்.

**சமுதாயம்:**

என்ன செய்வேன் எந்தன் மக்காள் என் தலைவிதி இதுவே. முன்னே என்னைப் பிடித்தோர் தாமும் முட்சவுக்கால் அடிக்கின்றாரே. என்னுடலின் இரத்தம் தன்னை இவர் உறிஞ்சிக் குடிக்கின்றாரே. என்னைக் காக்கும் கரமே இந்த இகத்திற் தானும் இலையோ ஐயா.

மேற்படி இருவகைப்பட்ட சொல்லாடற் பகுதிகளை நோக்கின், யதார்த்த மோடி நாடகத்தின் சொல்லாடற் பகுதி இயல்புத் தன்மை வாய்ந்ததாகவும் யதார்த்த விரோத நாடகத்தின் சொல்லாடற் பகுதி மோடிமைப் பாங்கானதாக, மிகைப்படுத்தப்பட்டதாகவும் காணப்படுகிறது.

- ✶ மோடிகளுக்கேற்பச் சொல்லாடல் வேறுபடும் என்பதற்கான மாணவர்களின் மேலதிக விளக்கம் கருதி, பொருத்தமான சொல்லாடற் பகுதிகளை அவர்களுக்கு வழங்கி விளக்கம் பெறச் செய்யுங்கள்.
- ✶ மாணவர்களைக் குழுக்களாக்கி ஒவ்வொரு குழுவிற்கும் வேறுபட்ட நாடக மோடிகளைக் கொண்ட சொல்லாடற் பகுதிகளை வழங்கி, அவர்களைக் குழுநிலையில் வாசிக்க வாய்ப்பளியுங்கள்.
- ✶ மாணவர்கள் வாசித்த சொல்லாடற் பகுதிகளை மோடிகளுடன் தொடர்புபடுத்தி வினாக்களை வினவுவதுடன் பின்வரும் விடயங்களை மாணவர்கள் விளங்கிக் கொள்ளமாறும் கலந்துரையாடலை மேற்கொள்ளுங்கள்.
- ✶ நாடக மோடிகளுக்கேற்பச் சொல்லாடலின் தன்மைகள் வேறுபடும். அதாவது யதார்த்த நாடகத்தில் சொல்லாடலானது பேச்சு வழக்கிலும் அன்றாட வாழ்வை ஒத்ததாகவும் இயல்பானதாகவும் அமைந்திருக்கும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- ✶ யதார்த்தமல்லாத நாடகத்தில் சொல்லாடலானது இயல்புத் தன்மையற்றதாக, மிகைப்படுத்தப்பட்டதாகக் காணப்படுவதை உணர்த்துங்கள்.
- ✶ நாடக மோடிகளுக்கேற்பச் சொல்லாடல் முறைமை வேறுபடுவதுடன் பாத்திரப் பண்புகளுக்கேற்பவும் சொல்லாடல் வேறுபடுவதைப் பயிற்சிக்குட்படுத்துங்கள்.

**உதாரணமாக;**

- வயோதிபப் பாத்திரம் ஒன்றிற்கான சொல்லாடல் முறைமையும் அரச பாத்திரங்களிற்கான சொல்லாடல் முறைமையும் வேறுபட்டவை. அதாவது, வயோதிபப் பாத்திரம் சொல்லாடுகின்ற போது குரலில் தளர்ச்சி இருக்கும். அரச பாத்திரம் சொல்லாடுகின்ற போது குரலில் கம்பீரத்தன்மையிருக்கும்.

* நாடகாசிரியர் கூறவிளையும் செய்தி, சொல்லாடலுக்கு ஊடாகவே பார்ப்போரை முழுமையாகச் சென்றடைகின்றது.
* சொல்லாடலில் பல்வேறு அரங்கியல் அம்சங்கள் உட்பொதிந்திருக்கும்.

**உதாரணமாக;**

- நடிப்பு
- செயலியக்கம்
- பாத்திரப் பண்பு
- உணர்வு
- கருத்து
- களம்
- காட்சி விதானிப்பு
- வேட உடை
- ஒப்பனை
- மேடைக்குறிப்பு
- கைப்பொருள்
- மேடைப்பொருள்
- இசை
- ஒலி
- ஒளி

போன்றன.

### சொல்லாடலின் போது கவனத்தில் கொள்ள வேண்டிய விடயங்கள் :

- பாத்திரங்கள்.
- பாத்திரப் பண்புகள்.
- தொனி.
- ஏற்ற இறக்கம்.
- அழுத்தம்.
- வீச்சு.
- ஒலிக்குறி.
- மோடி.
- உணர்வு.
- செயலியக்கம்.
- மேடைக்குறிப்பு.
- உச்சரிப்பு.
- மொழி.
- புறத்தெறிகை.

நடிகனது பாத்திரப் பண்பு சார்ந்த முறையான சொல்லாடலுக்குச் சிறந்த குரற் பயிற்சி அவசியம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- காணொளிப் பேழை.
- சொல்லாடற் பகுதிகளைக் கொண்ட இறுவட்டு.
- A4 தாள்.

**முதன்மைப் பதங்கள் :**

- குரல்வழிச் சித்திரிப்பு.
- சொல்லாடல்.
- நாடக மோடி.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- சொல்லாடல் என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- வெவ்வேறு வகைப்பட்ட நாடக மோடிகளை விளக்குவார்.
- வெவ்வேறு வகைப்பட்ட நாடக மோடிகளுக்கான சொல்லாடல்களை இனங்காண்பார்.
- சொல்லாடலின் போது குரல்வழிச் சித்திரிப்பு நுட்பங்களைப் பிரயோகிப்பார்.
- வெவ்வேறு வகைப்பட்ட நாடக மோடிகளின் சொல்லாடற் பண்புகளை ஒப்பு நோக்குவார்.

**உசாத்துணைகள் :**


1. பரதநாட்டிய சாஸ்திரம் - ஸ்ரீராம தேசிகர்.
2. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி, பேராசிரியர் சி. மௌனகுரு, திரு. க. திலகநாதன்.
3. நடிப்புக்கலை - மு.மகேந்திரன்.

**தேர்ச்சி** **3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.5** : நால்வகைச் சித்தரிப்புக்களுக்கான அரங்கப் பயிற்சிகளில் ஈடுபடுவார்.

**செயற்பாடு** **3.5.5**: "நாடகத்தில் கைப்பொருட் பயன்பாட்டை முனைப் புறுத்துவோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* நாடகத்தில் கைப்பொருள்களின் பயன்பாட்டை அறிந்திருப்பார்.
* நாடகத்தில் கைப்பொருள்களைக் கருத்து வெளிப்பாட்டுடன் பிரயோகிப்பார்.
* கைப்பொருள்களைத் தயாரிப்பதில் கூட்டாக ஈடுபடுவார்.

**பாடத்திட்டமிடல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

* மாணவர்களை உடல் உளத்தளர்வுப் பயிற்சியில் 5 நிமிடம் ஈடுபடுத்துங்கள்.
* வகுப்பறையில் அன்றேல் மண்டபத்தில் ஆசிரியரால் அன்றேல் மாணவர்களால் ஏற்கெனவே தயாரிக்கப் பெற்ற வில், அம்பு, கேடயம், ஈட்டி, வாள், கத்தி, சவள், தடி போன்ற பொருள்களைப் பார்வையிட வழிப்படுத்துங்கள்.
* மாணவர்களின் தொகைக்கேற்ப அவர்களை 5 பேர் கொண்ட குழுக்களாகப் பிரியுங்கள்.
* தாம் பார்வையிட்ட பொருள்களில் இருந்து தமது குழுவுக்கு விருப்பமான ஒன்று அன்றேல் இரண்டு பொருள்களைத் தெரிந்தெடுக்கச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
* அக்குழுக்கள் ஒவ்வொன்றும் தாம் தெரிவு செய்த பொருள்களைப் பயன்படுத்தி ஒரு சம்பவத்தினை அன்றேல் ஒரு வாக்கியத்தினை, முன்வைப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
* பொருள்களைப் பயன்படுத்தாமல் முன்னர் செய்த விடயத்தினைச் செய்வதற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்
* அவ்விரு செயற்பாடுகளிலும் காணப்பெற்ற வேறுபாடுகள் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* கலந்துரையாடலின் முடிவில் நடிகர் தனித்து நின்று ஒரு செயலைச் செய்வதற்கும் கைப்பொருள்களைப் பயன்படுத்தி ஒரு செயலை செய்வதற்கும் இடையே வேறுபாடு உண்டு என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* கைப்பொருள்கள் நாடகங்களுக்கேற்ப வேறுபடும் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.
* கைப்பொருள்கள், நாடகம் வெளிப்படுத்த முனையும் கருத்தை நடிகன் சித்திரித்துக் காட்டுவதற்கு உதவும் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்** :

- வாள்.
- கத்தி.
- கேடயம்.

- வில்.
- அம்பு.

**முதன்மைப் பதங்கள் :**

- கைப்பொருள்கள்.
- வில்.
- கேடயம்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- தாம் தயாரித்த நாடகத்தின் கைப்பொருள்களைக் கூறுவார்.
- கைப்பொருள்களை நாடகத்தில் கையாளுவார்.
- கைப்பொருள்களின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்துவார்.
- நாடகத்தில் கைப்பொருள்கள் எவ்வாறான தாக்கத்தைச் செலுத்தும் என்பதைத் தெளிவுபடுத்துவார்.
- எளிமையான கைப்பொருள்களைச் செய்து அவற்றைப் பயன்படுத்துவார்.

**தேர்ச்சி** **3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம்** **3.6** : மரபுவழிக் கூத்து ஒன்றின் பாத்திர வரவினைப் பயில்வார்.

**செயற்பாடு** **3.5.6**: "மரபுவழிக் கூத்து ஒன்றின் பாத்திர வரவுகளை ஆடிப்பாடி மகிழ்வோம்."

**பாடவேளைகள்** : 02

**கற்றற் பேறுகள் :**

* கூத்தின் பாத்திர வரவுப் பாடலைப் பாடிக்காட்டியிருப்பார்.
* பாத்திர வரவு ஆட்டத்தினை ஆடிக்காட்டியிருப்பார்.
* ஆடல் பாடலுக்கூடாகப் பாத்திரமொன்றை நிலைநிறுத்துவார்.
* மரபுவழிக் கூத்துக்களின் ஆடல்களை ஆடுவதிலும் பாடல்களைப் பாடுவதிலும் விருப்பம் காட்டுவார்.
* கூத்துக்களில் பாத்திர வரவுகளின் முக்கியத்துவத்தினை எடுத்துக்கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

**செயலொழுங்கு 1 :**

* மரபுவழிக் கூத்தின் பாத்திர வரவுப்பாடல் ஒன்றினைப் பாடுதல் அன்றேல் வீடியோ ஓடியோ ஊடகங்கள் மூலமாகப் பாடலை மாணவர்கள் செவிமடுக்கச் செய்யுங்கள்.
* கூத்துக்களில் பாத்திர வரவுகள் தொடர்பான பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.
* மரபுவழி நாடகங்களில் குறிப்பாகக் கூத்துக்களில் பாத்திரம் அறிமுகம் செய்யப்படுவது என்பது ஒரு பிரத்தியேகமான நிகழ்ச்சி என்பதை அறிவுறுத்துங்கள்.
* கூத்துக்களில் பாத்திரங்களின் வரவு, ஆடல் பாடல் மூலமாக வெளிப்படுத்தப்படுகின்றது.
* பாத்திரங்களின் வரவானது பின்வரும் மூன்று முறைகளில் அறிமுகம் செய்யப் படுகின்றது.
    1. சபையோரால் அன்றேல் அண்ணாவியாரால் சபை விருத்தம், சபைத் தரு மூலம் அறிமுகம் செய்யப்படுதல்.
    2. கட்டியகாரனால் அறிமுகம் செய்யப்படுதல்.
    3. குறித்த பாத்திரம் தன்னைத்தானே அறிமுகம் செய்தல்.
* சபையோர் அன்றேல் கட்டியகாரன் பாத்திரமொன்றின் வருகையைப் படர்க்கையில் பாடுவார்கள். அதற்கேற்பப் பாத்திர வரவு இடம்பெறும்.
* குறித்த பாத்திரம் தன்னைத்தானே அறிமுகம் செய்து வரும்போது, 'தன்மையில்' அன்றேல் "படர்க்கையில்" அறிமுகம் செய்யும்.

**உதாரணம்;**

"....அவ வாறாவாம் வாறாவாம் முத்துமாரி அம்மன்..." (படர்க்கை).

"…..வந்தேனே கட்டியகாரன் வந்தேனையா…" (தன்மை).

பாத்திர வரவு நிகழ்ச்சியினூடாகப் பாத்திரம் பற்றிய,

- அதன் பூர்வீகம்
- சமூக அந்தஸ்து
- கதையில் அப்பாத்திரத்தின் முக்கியத்துவம்
- பாத்திரத்தின் பண்புகள்
- அப்பாத்திரம் அணியும் வேட உடை, ஒப்பனை, அணிகலன்கள் போன்றதான பல்வேறு விடயங்கள் வெளிப்படுத்தப்படுகின்றன.
- பாத்திர வரவுகளுக்கெனப் பிரத்தியேகமான ஆடல் தருக்கள், தாளக் கட்டுக்கள், பாடல் மெட்டுக்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன.
- கூத்தில் நடிப்பவர்கள் தமது முழுத்திறனையும் வரவு நிகழ்ச்சிகளில் பிரயோகித்துப் பார்ப்போரின் கவனத்தினைப் பெறுவார்கள்.

## செயலொழுங்கு 2 :

- தெரிந்தெடுக்கப் பெற்ற சில பாத்திர வரவுகளுக்குரிய பாடல்களை மாணவர்களைப் பயிலச் செய்யுங்கள்.
- அப்பாடல்களுக்குரிய ஆடல்களையும் ஆடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
- (ஆடல் பாடல்களைப் பயிற்றுவிப்பதற்கு அவ்வப்பிரதேசக் கூத்துக் கலைஞர்களின் உதவியை அதிபரின் அனுமதியுடன் நாட முடியும் ).
- பாத்திரப் பண்புக்கேற்ப நடிப்புடன் அப்பாத்திரம் வெளிப்பட அளிக்கை செய்வதற்கு வழிகாட்டுங்கள்.
- மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, தெரிந்தெடுக்கப்பட்ட பின்வரும் பாடல்களை அன்றேல் அவ்வவ் பிரதேசத்துக்குரிய மரபுக் கூத்துக்களிலுள்ள வரவுப் பாடல்களைக் குழுவுக்கொன்றாக வழங்கி, குழுவாக ஆற்றுகை செய்வதற்குப் பணியுங்கள்.

**உதாரணம்;**

1. **முத்துமாரி அம்மன் வரவு- காத்தவராஜன் கூத்து**

   "அக்காளும் அவ தங்காளுமாம் - அவ
   ஆயிழைமார் அம்மனுக்கு ஏழுபேராம்"

2. **கீர்த்தி சிங்கன் வரவு- கண்டி அரசன் (யாழ்ப்பாணத் தென்மோடி)**

   "அகிலமும் புகழும் ஓங்கார உத்தமன்
   முகிலமும் அடர்கொடையான தத்துவன்"

3. **இந்திரன் வரவு- காமன் கூத்து**

   "தேவலோகம் விட்டுமல்லோ
   தெய்வேந்திரன் வருகிறானே"

4. **கோவலன் வரவு- கோவலன் கூத்து**

   "வணிக சிகாமணி கோவலன்
   சோழன் சபைதனில் வந்தான்"

5. **இராவணன் வரவு- இராவணேசன்**

“இராஜ இராஜ ராஜர் போற்றும்
ராஜ மகா ராஜன் வந்தான்”

* பாடல்களைப் பாடும் போதும் ஆடல்களைப் பயிலும் போதும் பின்வரும் விடயங்களைக் கவனிப்பதற்குத் தூண்டுங்கள்.
  - குறிப்பிட்ட கூத்து மரபின் பாடல் மெட்டுப் பிசகு படாது வகைத் தூய்மையுடன் பாடுதல்.
  - பாடும் போது சுருதி, தாளம் என்பவற்றினை அனுசரித்துப் பாடுதல்.
  - ஆடும் போது பாத்திரங்களின் நிலை, அசைவுகள், கால் போடுதல், ஆடல்களுக்கேற்ற உடல் மொழி வெளிப்பாடு, தாளப் பிசகற்ற ஆட்ட முறைமை போன்றவற்றைக் கவனித்தல்.
  - குறித்த பாத்திரத்தின் பால், வயது, சமூக அந்தஸ்து, சிறப்பான உளவியல் குணாம்சங்கள் போன்ற பாத்திரப் பண்புகளை இயன்றளவில் வெளிப்படுத்த முயற்சித்தல்.
  - அரங்க வெளிக்கேற்ற வகையில் (வட்டக்களரி, படசட்டமேடை) அசைவுகளை நிகழ்த்துவதற்கும் உடல் மொழியைப் பிரயோகிப்பதற்கும் முயலுதல்.
  - அளிக்கைக்கு ஏற்பத் தாளம் மற்றும் தோற்கருவிகளைப் பிரயோகம் செய்து அளிக்கையை முழுமைப்படுத்தலாம்.
* சிறப்பான வெளிப்பாடுகளைக் காட்டிய மாணவர்களை இனங்கண்டு, தனியாக வரவு நிகழ்ச்சியை நிகழ்த்துவதற்குத் தூண்டி, ஏனைய மாணவர்களைப் பிற்பாட்டுப் பாடவும் உற்சாகப்படுத்தவும் பணிக்கலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கூத்து இறுவட்டுக்கள்.
- வரவுப் பாடல்கள்.
- தாளம், மிருதங்கம், டொல்கி.
- பாத்திரங்களுக்குரிய கைப் பொருள்கள் (வாள், கதாயுதம்).
- கணினி/ மடிக்கணினி /கைபேசி.

**முதன்மைப் பதங்கள் :**

- வரவு ஆட்டம்.
- சபையோர்.
- உடல் மொழி.
- மெட்டு.
- தாளக்கட்டு.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கூத்தின் வரவுப் பாடல்களைப் பாடிக் காட்டுவார்.
- பாடலுக்கு ஏற்ப ஆடல்களை நிகழ்த்துவார்.
- பாத்திரப் பண்பு வெளிப்படப் பாத்திர வரவு நிகழ்ச்சியை நிகழ்த்துவார்.
- பாத்திர வரவுப் பாடல்களில் வெளிப்படுத்தப்படும் விடயங்களை எடுத்துரைப்பார்.
- மரபுவழிக் கூத்துப் பாடல்களைப் பாடுவதிலும் ஆடுவதிலும் விருப்பம் காட்டுவார்.

**உசாத்துணை :**


1. காத்தவராஜன் நாடகம் - கலாநிதி இ. பாலசுந்தரம்.
2. கோவலன் நாடகம் - கலாநிதி இரகுநாதன்.
3. இராவணேசன் - பேராசிரியர் சி. மௌனகுரு.

**தேர்ச்சி 3.0** : நாடகமும் அரங்கக் கலைகளும் தொடர்பான கொள்நெறி நிலைப்பட்ட செய்முறைகளில் ஈடுபடுவார்.

**தேர்ச்சி மட்டம் 3.7** : மாணவர்களால் ஆக்கப்பெற்ற நாடக எழுத்துருவின் ஒரு பகுதியைப் புதிதளிப்பார்.

**செயற்பாடு 3.5.7:** "வரலாற்று நாடக எழுத்துருவைப் புதிதளிப்போம்."

**பாடவேளைகள் : 02**

**கற்றற் பேறுகள் :**

- ✶ மாணவரால் எழுதப் பெற்ற வரலாற்று நாடக எழுத்துருவை வாசித்திருப்பார்.
- ✶ பொருத்தமான பாத்திரத் தெரிவை மேற்கொண்டிருப்பார்.
- ✶ வரலாற்று நாடகத்துக்குப் பொருத்தமான துணைக்கலை அம்சங்களைப் பயன்படுத்தியிருப்பார்.
- ✶ வரலாற்று நாடக எழுத்துருவைப் புதிதளிப்பார்.
- ✶ தம் புத்தளித்தற் செயற்பாட்டால் மகிழ்வுற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- ✶ மாணவரால் எழுதப்பெற்ற வரலாற்று நாடக எழுத்துருவைப் பொருத்தமான புதிதளித்தல் நுட்பங்களுடனும் படைப்பாக்கத்துடனும் புத்தளிப்புச் செய்தலே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- ✶ பின்வரும் விடயங்களை மீள வலியுறுத்திக் கலந்துரையாடலைக் கட்டியெழுப்புங்கள்.
  - புதிதளித்தல் என்பது கற்பனை, படைப்பாக்கம், மறுவாசிப்பு என்பவற்றுடன் தொடர்புடையது.
  - அரங்கில் பேசப்படும் வார்த்தைகள்/ சொல்லாடல்கள் ஒருமுறை மட்டுமே கேட்கப்படுவதால், மிகத் தெளிவாகவும் மயக்கமில்லாதும் இருத்தல் அவசியம்.
  - ஒரு குறித்த ஆர்வநிலையிலிருந்து மற்றொரு ஆர்வ நிலைக்குச் சூழமைவுகளை வளர்த்துச் செல்லும் முறைமையானது எழுத்துருவை நாடகப் பண்புடையதாக்கும்.
  - அரங்கத் தொடர்பாடலை மேடைச் செயல்களும் பார்ப்போரின் எதிர்வினைகளும் வலுவுள்ளதாக்கும்.
  - குறியீடுகள் மூலமும் பார்ப்போருக்கு மனப்பதிவை ஏற்படுத்தலாம்.

**செயலொழுங்கு :**

பின்வரும் படிநிலைகளைக் கையாண்டோ அன்றேல் பொருத்தமான பிறிதொரு முறைமைகளின் மூலமோ வரலாற்று நாடக எழுத்துருவைப் புதிதளிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.

- ✶ ஏற்கெனவே மாணவர்களுக்கு வழங்கப் பெற்ற வரலாற்றுக் கதைகளான
  1. வெடியரசன்
  2. யாழ்பாடி

3. பண்டாரவன்னியன்
4. உலக நாச்சியார்
5. கைலாய வன்னியன்
6. குளக்கோட்டன்

ஆகியவற்றை மையப்படுத்தி மாணவர்களால் தனித்தனியே எழுதப் பெற்ற வரலாற்று நாடகங்களுள் சிறப்பான ஒரு பிரதியை அனைவரும் சேர்ந்து கலந்துரையாடித் தெரிவு செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

* மாணவர்களால் எழுதப் பெற்றுத் தெரிவுசெய்யப் பெற்ற வரலாற்று நாடக எழுத்துருவை எழுத்துரு வாசிப்பு நுட்பங்களுடன் வாசிப்பதற்கு வழிப்படுத்துங்கள்.
* மாணவரை எண்ணிக்கைக் கேற்பக் குழுக்களாக்குங்கள்.
* தெரிவுசெய்த ஒரு எழுத்துருவின் வெவ்வேறு பகுதிகளை ஒவ்வொரு குழுவுக்கும் வழங்குங்கள்.

  (எழுத்துருவின் முழுமையான பகுதிகளும் அமையுமாறு பகுதிகளைப் பிரித்து வழங்குவது சிறப்பானது).
* பொருத்தமான புதிதளித்தல் முறைகளினூடாகப் பாத்திரத் தெரிவை மேற்கொள்வதற்கு வழிப்படுத்துங்கள்.
* ஒவ்வொரு குழுவுக்கும் பின்வரும் ஒவ்வொரு அறிவுறுத்தலை வழங்கி வழிகாட்டுங்கள்.
  1. உடல் மொழி மற்றும் குரல்வழி என்பவற்றை மட்டும் கையாண்டு தமக்குரிய வரலாற்று நாடக எழுத்துருப் பகுதியைப் புத்தளிப்புச் செய்ய வழிப்படுத்துங்கள்.
     (போலச் செய்தல், பெருங்காட்சி, பொறிகள் அனைத்துக்கும் உடலையும் குரலையும் கருவியாகக் கையாளுதல்).
  2. வரலாற்று நாடக எழுத்துருவுக்குப் பொருத்தமான வேட உடை, ஒப்பனை, காட்சியமைப்பு, இசை, மேடைப்பொருள், கைப்பொருள் என்பவற்றைப் பயன்படுத்தித் தமக்குரிய எழுத்துருப் பகுதியைப் புதிதளிப்புச் செய்ய இடமளியுங்கள்.
  3. சூழலில் கிடைக்கத்தக்க வளங்களைக் கையாண்டு குறியீடாகவோ/ நேரடியாகவோ பொருத்தமான அரங்க உத்திகளைக் கையாண்டு, வழங்கப் பெற்ற பகுதியைப் புதிதளிப்புச் செய்ய இடமளியுங்கள்.
* வரலாற்று நாடகத்தினை ஆற்றுகை செய்யும் போது பின்வரும் விடயங்களின் பால் மேலதிக கவனம் செலுத்துமாறு கூறுங்கள்.
  - பெரும்பாலும் செம்மொழி பயன்படுத்தப்படுவது இயல்பு.
  - வரலாற்றுக் கதைகளைத் தழுவி அமைந்திருக்கும்.
  - பெரும்பாலும் பகட்டு ஆடம்பரம் நிறைந்த வேட உடை, ஒப்பனையைக் கொண்டிருக்கும்.
  - உணர்ச்சி கொப்பளிக்கும் சொல்லாடல்கள் பெரிதும் வீர உணர்வு நிறைந்தவையாயிருக்கும்.
  - மிகைப்படுத்தப் பெற்ற உடலசைவுகள், நடிப்பு முறைகள், பெருங்காட்சிப் பண்பு என்பவற்றைக் கொண்டமைந்திருக்கும்.
  - பெரும்பாலும் அடுக்கு மொழி கொண்ட சொல்லாடல்களால் அமைந்திருக்கும்.
* மேற்படி விடயங்களைக் கருத்திற் கொண்டு தத்தம் எழுத்துருப் பகுதிகளைப் புதிதளிப்புச் செய்ய வழிப்படுத்துங்கள்.

* நிறைவில், அளிக்கை தொடர்பான பலம், பலவீனம் பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* பின்வரும் விடயங்களை மீளவலியுறுத்திக் கருத்துப் பரிமாற்றம் செய்யுங்கள்.
    - புதிதளித்தலில் கற்பனைத் திறனின் அவசியம்.
    - படைப்பாக்கத் திறன் வெளிப்பாடு.
    - துணைக்கலைகளின் பொருத்தப்பாடு.
    - சொல்லாமற் சொல்ல விளையும் விடயங்கள்.
    - படைப்பின் தாக்கவன்மை.

## தரவிருத்தி உள்ளீடுகள் :

- வரலாற்றுக் கதைப்பகுதிகள்.
- வரலாற்று நாடக எழுத்துருக்கள்.
- றபான்/ சல்லாரி/தாளம் போன்ற இசைக் கருவிகள்.

## முதன்மைப் பதங்கள் :

- புதிதளித்தல்.
- குறியீடுகள்.
- உடல் மொழி.
- மறுவாசிப்பு.
- எதிர்வினை.
- அரங்கத் தொடர்பாடல்.
- அரங்க உத்திகள்.

## கணிப்பீடும் மதிப்பீடும் :

- புதிதளித்தல் என்றால் என்ன என்பதைக் கூறுவார்.
- வரலாற்று நாடக எழுத்துருவை எழுத்துரு வாசிப்பு நுட்பங்களுடன் வாசிப்பார்.
- புதிதளித்தல் மூலமான பாத்திரத் தெரிவு முறையைக் கையாள்வார்.
- அரங்க உத்திகளைக் கையாண்டு வரலாற்று நாடக எழுத்துருவைப் புத்தளிப்புச் செய்வார்.
- புத்தளிப்புச் செயற்பாடுகளை நயந்துரைப்பார்.

## உசாத்துணை :

1. நாடக வழக்கு - குழந்தை ம. சண்முகலிங்கம்,தொகுப்பு க. ஸ்ரீகணேசன்
2. அரங்கம் - அரசியல் - அழகியல் - அ. மங்கை.
3. உடல் அசைவும் உடல் மொழியும் - கலாநிதி என். சிறிதரன்.

**தேர்ச்சி 4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.1 :** சுதேச நாடகக் கலை வரலாற்றுடன் தொடர்புடைய அரும்பு நிலைகளைப் பயின்று அவற்றின் அரங்காற்றுகைப் பண்புகளை இனங்காணக்கூடியவராவார்.

**செயற்பாடு 4.1 :** "சுதேச வாழ்வியற் சடங்குகளின் ஆற்றுகைப் பண்புகளை அறிவோம்."

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ வெவ்வேறு வாழ்வியற் சடங்குகளைப் பட்டியற்படுத்துவார்.
- ✶ திருமணச் சடங்கு, மரணச்சடங்கு போன்றவற்றை நிகழ்த்தும் முறையை விவரிப்பார்.
- ✶ திருமணச் சடங்கு, மரணச்சடங்கு நிகழ்த்தும் முறை பிரதேசத்துக்குப் பிரதேசம், பண்பாட்டுக்குப் பண்பாடு வேறுபடும் என்பதனை விளங்கியிருப்பார்.
- ✶ திருமணச் சடங்கு, மரணச்சடங்கு போன்றவற்றில் காணப்படும் நாடக அம்சங்களை எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

**செயலொழுங்கு 1** - திருமணச் சடங்கு பற்றிக் கலந்துரையாடுதல்.

- ✶ எமது சமூகத்தில் காணப்படுகின்ற பல்வேறு சமூகவியற் சடங்குகளில் திருமணச் சடங்கும் ஒன்றாகும். ஒரு புதிய குடும்பம் உருவாவதற்கான சமூகவியல் அங்கீகாரத்துக்கான ஒன்றாகவும் ஆன்மீக நிறைவுக்கான ஒன்றாகவும் இச்சடங்கு காணப்படுகின்றது. அதேவேளை, வெவ்வேறு சமயங்களிலும் சாதி சமூக அமைப்புக்களிலும் இது வெவ்வேறு விதமாக நடத்தப்படுவதனையும் கலந்துரையாடுங்கள்.
- ✶ இச்சடங்குகளின் நிகழ்த்துகை ஒழுங்குகளில் பல்வேறு போலச் செய்தல்கள், மீள நிகழ்த்துதல்கள் போன்றதான நாடகப் பண்புகள் விரவிக்கிடப்பதனைச் சுட்டிக்காட்டுங்கள்.
- ✶ மாணவர்களின் சமய சமூக நிலைகளுக்கேற்பக் குழுக்களாகப் பிரித்து, ஒரு திருமணச் சடங்கின் செயல்வினைப்பாடுகளைப் போலச் செய்யப் பணியுங்கள். (திருமண நிகழ்வு கட்டிளமைப்பருவ மாணவர் மத்தியில் வெவ்வேறு உணர்வலைகளை உண்டாக்க வல்லதாக இருப்பதனால் மணமகன், மணமகள் ஆகியோரை ஒரு பாலாராகவே பாவனை செய்யப் பணியுங்கள்)
- ✶ இந்து சமயம் சார்ந்த திருமணச் சடங்கொன்றினைப் பாவனை செய்யும் போது,
  - கன்னிக்கால் நடுதல்.
  - கும்பம் வைத்தல்.
  - பூசை தொடங்குதல்.

- மணமகன் தோழனால் அழைத்து வரப்படுதல்.
- அவருக்குரிய பூசை.
- மணமகள் அழைத்து வரப்படுதல்.
- இருவருக்குமான சடங்கு (யாக பூசை).
- பெண்ணுக்குரிய சீர்கள் பரிமாறப்படுதல்.
- தாலி, கூறைச்சேலை என்பவற்றுக்கு ஆசி பெறப்படுதல்.
- மணமகன் பெண்ணுக்குரிய சீர் வழங்குதல், கூறைச்சேலை போர்த்தல்.
- தாலி கும்பத்தில் வைத்து பூசை செய்யப்படுதல்.
- மணமகனும் மணமகளும் உடை மாற்றி வருதல்.
- தாலி கட்டும் மந்திரம் ஓதுதல்.
- தாலி கட்டுதல்.
- கும்பத்தினை மூன்று முறை வலம் வருதல் (தீவலம்).
- அம்மி மிதித்து மெட்டி அணிதல்.
- செம்புக்குள் மோதிரம் தேடுதல்.
- பொட்டு, பழம் கொடுத்தல்.
- அருந்ததி பார்த்தல்.
- பெரியவர்கள் அரிசி/ நெல் இட்டு ஆசி வழங்குதல்.
- விருந்து.

எனப் பல்வேறு செயலொழுங்குகள் இருப்பதனை நினைவுபடுத்தி, பாவனை செய்யப் பணியுங்கள்.

- ✶ அவ்வாறே கிறிஸ்தவ திருமணச் சடங்கொன்றினைப் பாவனை செய்யும் போது
  - மணமகன் தோழனால் தேவாலயத்துக்கு அழைத்துவரப்படுதல்.
  - மணமகள் தோழிகளினால் அழைத்துவரப்படுதல்.
  - குருவானவர் மணமக்களை வரவேற்று ஆசி வழங்குதல்.
  - இருவரும் உரிய இடத்தில் வந்து அமர்தல்.
  - திருப்பலி ஆரம்பித்தல்.
  - வேதாகமத்திலுள்ள திருமணம் தொடர்பான நற்செய்தி வாசிக்கப்படுதல்.
  - திருமண வார்த்தைப்பாடு கேட்டல். மணமக்கள் பதிலளித்தல்.
  - தாலி/ மோதிரம் ஆசீர்வதிக்கப்படுதல்.
  - தாலி கட்டுதல். ஒரே நேரத்தில் கோயில் மணிகள் ஒலித்தல், தூய ஆவியின் பாடல் பாடப்படுதல்.
  - மாலை மாற்றுதல்.
  - திருப்பலி தொடர்தல்.
  - காணிக்கை வழங்குதல்.
  - நற்கருணை வழங்குதல்.
  - திருப்பலி நிறைவில் பெரியோர் வாழ்த்துதல்.
  - பெண் வீட்டுக்கு அழைத்து வருதல்.
  - கேக் வெட்டுதல்.
  - கூறைச்சேலை ஆசி வழங்குதல்.

- கூறைச்சேலை மாற்றுதல்.
- விருந்து - வாழ்த்துக்கள்.

என்றவாறாகச் செயலொழுங்குகள் இருப்பதனை நினைவுபடுத்திச் செயல்முறையை ஒழுங்குபடுத்துங்கள்.

* இவ்வாறு இஸ்லாமிய, பிராமணியத் திருமண முறைகள் வேறுபட்டிருக்கும் என்பதனையும் கலந்துரையாடுங்கள்.
* இத்திருமணச் சடங்குகளில் காணப்படுகின்ற நாடகப் பண்புகளை முன்வைப்பதற்குப் பணியுங்கள்.
  - திருமணச்சடங்குகளில் 'மணமகன்' 'மணமகள□ என்ற நிலைக்குரிய இருவருமே கதாபாத்திரங்களைப் போலவே நோக்கப்படுகிறார்கள். அவர்களது சொந்தப் பெயர்கள் தவிர்க்கப்பட்டு 'மாப்பிள்ளை' 'பொம்பிளை' என்ற பாத்திரப் பெயர்களால் அழைக்கப்படுகின்றனர். தோழிகள், தோழன் போன்றவர்களும் பாத்திரங்களாக நோக்கத்தக்கவர்கள்.
  - இச்சடங்குகளின் பின்புலமான கிரியைகளில் பல்வேறு தொன்மக் கதைகள் காணப்படுகின்றன.

**உதாரணமாக :**

1. இந்து சமயத் திருமணச் சடங்குகளுக்கு முருகன், தெய்வானை திருமணம் பற்றிக் கூறும் கந்தபுராணக்கதை அடிப்படையாக இருத்தல்.
2. கிறிஸ்தவ திருமணங்களில் திருவிவியத்திலுள்ள இறைவன் ஆணும் பெண்ணுமாய் மனிதனைப் படைத்து, முதல் திருமணம் நடத்திய சம்பவம் நினைவு கூரப்படுகிறது.
   - மணமகன், மணமகள் ஆகியோருக்கான அலங்காரங்கள், வேட உடைகள் நாடகத்தினை நினைவுபடுத்துவனவாக அணியப்படுகின்றன.
   - சடங்குகளின் செயல் நகர்வில் தொடக்கம் - நடு - முடிவு என்ற நாடக நிலை நகர்வுத்தன்மைகள் காணப்படுகின்றன. உச்சக்கட்டமாகத் தாலி கட்டும் சம்பவம் நடைபெறுகின்றது. அது தவில், நாதஸ்வரம் வாசிக்கப்பட்டுக் கோவில் மணி ஒலிக்கப்பட்டு நடைபெறும் உச்சக்கட்ட உணர்வு நிலையைப் பிரதிபலிக்கின்றது.
   - சடங்கு நடைபெறுவதற்கான மண்டபம், மணவறை அலங்காரங்கள் அனைத்தும் அரங்க வெளியை, அரங்க அலங்காரத்தினை நினைவுபடுத்துகின்றன.
   - திருமணவிழாவிற்கு அணிசேர்க்கின்ற தவில் நாதஸ்வரம் அன்றேல் பாடல்கள் / நலங்குப் பாடல்கள் அரங்கின் இசையை நினைவுபடுத்துகின்றன.
   - உறவினர், நண்பர்களின் இருத்தல்கள், பங்குபற்றுதல்கள், பார்ப்போரின் எதிர்வினைப்பாடுகளை நினைவுபடுத்துகின்றன.
   - கும்பம் முதல் தாலி வரையான பல்வேறு பொருள்கள் அரங்கப் பொருள்கள் கைப்பொருள்களை நினைவுபடுத்துகின்றன.

* அதேவேளை இவ்வரங்கப் பண்புகள் சமய ரீதியாகவும் சமூக ரீதியாகவும் வேறுபடும் வெவ்வேறு திருமண முறைகளிலும் வெவ்வேறு விதமாக விரவி வருவதனை நினைவு படுத்துங்கள். அவ்வாறே திருமணச் சடங்கில் காணப்படுகின்ற 'பாவனைகள்' 'போலச் செய்தல்கள்' 'அபிநயங்கள்' போன்றவற்றினைக் கலந்துரையாடி மாணவரை முன்வைக்கப் பணியுங்கள்.

**செயலொழுங்கு 2** - மரணச் சடங்கு பற்றிக் கலந்துரையாடுதல்.

* திருமணச் சடங்குகளைப் போலவே மரணச் சடங்குகளிலும் பல்வேறு பண்பாட்டு அம்சங்களும் உணர்வு நிலைப்பட்ட செயற்பாடுகளும் அரங்கை நினைவுபடுத்தத்தக்க செயற்பாங்குகளும் காணப்படுவதனைக் கலந்துரையாடுங்கள்.
* மாணவர்களின் சமய சமூக நிலைகளுக்கேற்ப அவர்களைக் குழுக்களாகப் பிரித்து, மரணச்சடங்கு ஒன்றில் காணப்படுகின்ற செயலொழுங்குகளையும் அரங்கவியற் பண்புகளையும் கலந்துரையாடி இனங்கண்டு அறிக்கையாக முன்வைப்பதற்குப் பணியுங்கள்.
* மரணச்சடங்குகளில் இறந்தவர் முக்கியத்துவப்படுத்தப்படுவதும்
    - அவரை நீராட்டுதல்
    - அவரை அலங்கரித்தல்
    - பூசை செய்தல்
    - குழுவாகச் சேர்ந்து அழுதல்
    - கும்பங்கள் வைத்தல்
    - பிள்ளைகள்/ சகோதரர்கள் மொட்டை அடித்து, தர்ப்பை தரித்துப் பூசையில் ஈடுபடுதல்
    - சுண்ணம் இடித்தல்
    - திருப்பொற் சுண்ணம் பாடுதல்
    - ஒப்பாரி பாடுதல்
    - சடலத்திற்கான கிரியைகளின் நிறைவில் உறவினர் ஒப்புச் சொல்லி அழுதல்
    - பெருத்த அழும் ஓசையோடு சடலத்தினைக் கொண்டு செல்லல்
    - ஊர்வலம்
    - தகனஞ் செய்யும் கிரியைகள்

எனத் தொடரும் செயலொழுங்குகளை மாணவர்கள் இனங்காண்கிறார்களா என அவதானிப்பதுடன் கிறிஸ்தவ அன்றேல் இஸ்லாமிய மரணச் சடங்குகளில் பின்பற்றப்படும் செயல்கள், செயலொழுங்குகள் வேறுபட்டிருக்கும் என்பதனையும் கலந்துரையாடுங்கள்.

* மரணச்சடங்குகளில் காணப்படக்கூடிய பல்வேறு நாடகப் பண்புகளையும் இனங்காட்டுங்கள்.
    - மரித்தவர் ஒரு பாத்திரமாகச் 'சவம்' 'சடலம்' 'பிரேதம்' 'பூதவுடல்' போன்ற பெயர்களில் அவரது சொந்தப் பெயரைத் தவிர்த்து அழைக்கப்படுதல்.
    - மரித்தவர் அலங்கரிக்கப்படுதல்.
    - அவருக்குச் செய்யப்படுகின்ற கிரியைகள்.
    - பிள்ளைகள்/ சகோதரர்கள் பாத்திரங்களைப் போல நோக்கப்படுதல்.
    - உணர்ச்சியைத் தூண்டுகின்ற உறவுகளின் கதறல்.
    - ஒப்பாரிப் பாடல்கள்.
    - அழுபவரைப் பார்த்து அழும் எதிர் விளைவுகள்.
    - பறை போன்ற இசைக்கருவிகள்.
    - ஊர்வலம்.

போன்றதான அரங்கப் பண்புகளாக நோக்கத்தக்க செயல்களை இனங்காட்டுங்கள்.

✶ மனித வாழ்வின் இறுதிச்சடங்கு உணர்ச்சி பூர்வமானதாகவும் அரங்கின் எதிர்வினைப் பாடுகளுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகவும் அமைந்து நிற்பதனை வலியுறுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- நலங்குப் பாடல்கள்.
- ஒப்பாரிப் பாடல்கள்.
- திருமண வைபவத்தின் இறுவட்டு.
- திருப்பொற்சுண்ணப் பாடல்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- சடங்கு செய்தல்.
- அம்மி மிதித்தல்.
- சீர் கொடுத்தல்.
- ஒப்பாரி
- நலங்குப் பாடல்.
- அருந்ததி பார்த்தல்.
- வார்த்தைப்பாடு.
- திருப்பொற்சுண்ணம்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- வெவ்வேறு சமயங்களிலும் சமூகங்களிலும் காணப்படுகின்ற வாழ்வியல் சடங்குகளைப் பட்டியலிடுவார்.
- திருமணச் சடங்கு நடைபெறும் செயலொழுங்கினை விவரிப்பார்.
- மரணச் சடங்கின் நிகழொழுங்கை விவரிப்பார்.
- திருமணச் சடங்கில் காணப்படும் நாடகப் பண்புகளை எடுத்துரைப்பார்.
- கிறிஸ்தவ, இந்து திருமணச் சடங்குகளிலுள்ள வேறுபாடுகளை இனங்காண்பார்.
- வாழ்வியற் சடங்குகள் சமூக வாழ்வுக்கு அவசியமானவை என்பதனை உணர்வார்.

**தேர்ச்சி** **4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம்** **4.2:** இலங்கையில் பாரம்பரியக் கூத்துக்கள் பற்றி அறிந்து கொள்வார்

.

**செயற்பாடு** **4.2.1:** "பாரம்பரியக் கூத்துக்கள் பற்றி அறிந்து கொள்வோம்."

**பாடவேளைகள்** **:** 01

**கற்றற் பேறுகள் :**

* கூத்து என்பதற்கு விளக்கம் அளிப்பார்.
* பிரதேசத்துக்குப் பிரதேசம் கூத்துக்கள் வேறுபடும் என்பதனை அறிந்திருப்பார்.
* கூத்தினை ஆடுவது தொடர்பான விருப்பத்தினை வெளிப்படுத்துவார்.
* கூத்துக் கலையின் தொன்மங்களை உணர்ந்து கொள்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :

மரபுவழிக் கலையாகிய கூத்துக்கலை பற்றிய எண்ணக்கருவைக் கட்டியெழுப்பக்கூடிய வகையில் கூத்தின் சில அடிப்படைப் பண்புகளை மாணவர்கள் விளங்கிக்கொள்ளக்கூடிய வகையில் சொல்லட்டைகளாகக் காட்சிப்படுத்திக் கலந்துரையாடல் மூலமாகவோ அன்றேல் O.H.P மூலமோ அன்றேல் ஏற்ற முறைகளை இனங்கண்டு பிரயோகம் செய்து முன்வைக்கலாம்.

* 'கூத்து' என்பது 'குதி' என்ற வினைச்சொல்லின் அடியாகத் தோன்றியது என்பர்.
* நாடகம் என்பதற்கு வழங்கப் பெற்ற பழந்தமிழ்ச் சொல்லே கூத்து ஆகும்.
* கூத்து என்பதனை 'ஆடல்' என்றும் பொருள்படக் கூற முடியும்.
* தமிழில் செயல்வினைப்பாடுகள் அனைத்தையும் ஆடல் என்ற சொற்பதத்தினால் வழங்கி வந்த வழக்கமுள்ளது.

**உதாரணமாக-** சொல்லாடல், போராடல், நீராடல், விளையாடல்.

* அதனால்தான் தமிழர்கள் தமது முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானை 'ஆடல் வல்லான்' என்றும் 'கூத்தன்' என்றும் அழைத்தனர்.
* இவ்வாறு தொன்மை பொருந்திய சொல்லாகிய 'கூத்து' எமது மரபுவழி நாடகங்களுக்கானதாக ஆகி வந்திருக்கின்றது.
* கூத்து என்பது ஆடல் பாடல் எடுத்துரைப்பினூடாகக் கதை சொல்லுகின்ற ஒரு நாடக வடிவமாகும்.
* சங்க காலத்தில் இருந்தே தமிழில் கூத்து ஒரு கலையாக நீட்சி பெற்று வந்திருப்பதனை அறிய முடியும்.

**உதாரணமாக-** குரவைக் கூத்து, துணங்கைக் கூத்து, வரிக்கூத்து, வினோதக் கூத்து, ஆரியக் கூத்து, தமிழ்க் கூத்து, சாந்திக் கூத்து மற்றும் பிற.

* தற்போதும் தமிழ் நாட்டின் தேசிய நாடக வடிவமாகத் தெருக்கூத்து காணப்படுகின்றது.

* கூத்துக்கலையானது வெறும் பாடல், ஆடல் கொண்ட பொழுது போக்குக் கலை அன்று. இதற்குப் பல்வேறு சமூக முக்கியத்துவங்கள் உள்ளன.
* கூத்துக்கள் பரம்பரை பரம்பரையாகவும் குரு சீடத்துவப் பாரம்பரியத்துக்கூடாகவும் எமது சமூகத்தில் பயிலப் பெற்று வருகின்றது.
* கூத்துக்களை நெறிப்படுத்துபவர் 'அண்ணாவி' என அழைக்கப்படுகின்றார்.
* எமது புராண இதிகாசக் கதைகளையும், வரலாற்றுக் கதைகள் மற்றும் கற்பனைக் கதைகளையுமே கூத்துக்கள் அதிகமாகப் பாடுபொருளாக கொண்டுள்ளன.
* கதை தழுவி வருகின்ற கூத்துக்களும், கதை தழுவாத கூத்துக்களும் எமது சமூகத்தில் உள்ளன.
* கூத்தின் பிரதான அம்சங்களாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.
    1. ஆடல்/ அசைவு.
    2. பாடல்.
    3. ஊட்டு வசனங்கள்/ சொற்கள்.
    4. மோடியுற்ற எடுத்துரைக்கும் பாங்கு.
    5. நடிப்பு.
    6. சபையோரால் கூத்து நகர்த்தப்படல்.
* கூத்துக்கள் பெரும்பாலும் சுற்றிவரப் பார்ப்போர் அமரும் பண்பில் வட்டவடிவமான அரங்க வெளிகளிலேயே நிகழ்த்தப்படுகின்றது.
* கூத்துக்கள் மோடியுற்ற அளிக்கைப் பாங்கினைக் கொண்டவையாகக் காணப்படுகின்றன.
* மத்தளம், பறை, உடுக்கு, தப்பு, மிருதங்கம் எனத் தோற்கருவிகளே பிரதான இசைக்கருவிகளாகப் பயன்படுத்தப்படுகின்றன.
* எமது சமூகத்தில் காலனித்துவ ஆட்சிக்காலத்தின் பின்னர், நகர மயமாக்கல் நடந்ததன் பின்னணியில் கிராமங்கள் 'நாட்டுப்புறம்' என்று அழைக்கப் பெற்று அதன் காரணமாகக் கூத்துக்கள் 'நாட்டுக் கூத்துக்கள்' என அழைக்கப் பெறுகின்ற ஒரு மரபும் உருவாகியிருந்தது.

கிடைக்கக்கூடிய கூத்து வடிவம் ஒன்றின் காணொளியின் சில பகுதிகளை மாணவர்கள் பார்வையிடச் செய்யுங்கள். அதன்பின் அது தொடர்பான கலந்துரையாடலில் ஈடுபடலாம்.

### தரவிருத்தி உள்ளீடுகள் :

- கூத்து ஒளிப்படங்கள்.
- கூத்தின் காணொளி.
- சொல்லட்டை அன்றேல் O.H.P.
- தகவற் குறிப்புக்கள்.

### முதன்மைப் பதங்கள் :

- கூத்து.
- அண்ணாவி.
- கூத்தன்.
- ஆடல் வல்லான்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- கூத்து என்றால் என்னவென்று விளக்கம் அளிப்பார்.
- கூத்தின் தொன்மையான மரபுக் கையளிப்பை ஏற்றுக் கொள்வார்.
- கூத்தின் பண்புகளை எடுத்துரைப்பார்.
- கூத்தின் பிரதான அம்சங்களை விவரிப்பார்.
- ஆடல், கூத்தின் பிரதான அவைக்காற்றுகை முறையாக இருப்பதனைக் கண்டு கருத்துக்களை கூறுவார்.

**உசாத்துணைகள் :**


1. நாடகம் நாட்டாரியல் சிந்தனைகள் - பேராசிரியர் சு. வித்தியானந்தன்.
2. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - பேராசிரியர் சி. மௌனகுரு.
3. வட இலங்கை நாட்டார் அரங்கு - கலாநிதி காரை.செ.சுந்தரம்பிள்ளை.
4. பண்டைத் தமிழர் நாடகங்கள் - பா.இரகுவரன்.
5. கட்டியம்
6. கூத்து ஒரு அறிமுகம் - இளைய பத்மநாதன்.

**தேர்ச்சி 4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.2:** இலங்கையில் பாரம்பரியக் கூத்துக்கள் பற்றி அறிந்து கொள்வார்.

**செயற்பாடு 4.2.2:** பாரம்பரியக் கூத்துக்களின் அடிப்படையான அம்சங்களை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

- ✶ பாரம்பரியக் கூத்துக்களில் காணப்பெறும் பொதுவான அம்சங்களைப் பட்டியற்படுத்துவார்.
- ✶ பாரம்பரியக் கூத்துக்களுக்குப் பிரதேச அடிப்படையில் சில தனித்துவங்கள் உள்ளன என்பதனை விளக்கியிருப்பார்.
- ✶ கூத்துக்களின் தனித்துவத்தால் கவரப்பெற்றிருப்பார்.
- ✶ கூத்துக்கள் பற்றித் தேடி அறிவதில் ஆர்வங்காட்டுவார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்.

### செயலொழுங்கு 1

- ✶ சிலவகை மாதிரிக் கூத்துக்களின் சிறிய காட்சித் துண்டங்களைக் காணொளி மூலமாக மாணவர்கள் பார்வையிடுவதற்குச் சந்தர்ப்பம் வழங்குங்கள். அவை வெவ்வேறு பிரதேசம் சார்ந்தவைகளாக இருப்பின் மிகப் பொருத்தமாக இருக்கும். அப்பார்த்தலின் அனுபவங்களை முன்வைத்துப் பின்வரும் விடயங்களைக் கலந்துரையாடுங்கள்.
- ✶ கூத்துக் கலை என இது ஒரு கலை மரபாக அழைக்கப்பெற்றாலும் இதில் பல்வேறு வேறுபாடுகள் காணப்பெறுகின்றன.

**உதாரணமாக :**

| | | |
|---|---|---|
| 1. | கதை தழுவி வரும் கூத்துக்கள்.<br>- தென்மோடிக் கூத்து | கதை தழுவாத கூத்துக்கள்.<br>- பறைமேளக் கூத்து |
| 2. | வரன்முறையான ஆடல்களைக் கொண்ட கூத்துக்கள்.<br>- மட்டக்களப்பு வடமோடி | வரன்முறை ஆடலற்ற கூத்துக்கள்.<br>- காத்தவராஜன் கூத்து |
| 3. | வரையறுக்கப்பட்ட வெளியில் ஆடப்பெறும் கூத்துக்கள்.<br>- தென்மோடி | வரையறுக்கப்படாத வெளியில் ஆடப்பெறும் கூத்துக்கள்.<br>- காமன் கூத்து |
| 4. | இந்து சமயம் சார்ந்த கூத்துக்கள்<br>- காத்தவராஜன் கூத்து | கிறிஸ்தவ சமயம் சார்ந்த கூத்துக்கள்<br>- தென்பாங்கு (மன்னார்) |

* இவற்றினை விடப் பிரதேசத்துக்குப் பிரதேசம் பல்வேறு வகைமைகளாகவும் கூத்துக்கள் காணப்பெறுகின்றன.
* இக்கூத்துக்கள் வெவ்வேறு பிரதேசங்களினதும் பண்பாடு, கலாசாரம் மதப் பேணுகை போன்ற சமூகவியற் பண்புகள் சார்ந்த வகையில் தனித்துவங்களுக்குரியவையாகக் காணப்படுகின்றன.
* அத்தனித்துவங்கள் கூத்துக்களின் பாடுபொருள், மொழிப் பிரயோகம், வெளிப் பயன்பாடு, அளிக்கை முறை போன்ற பலவற்றிலும் செல்வாக்குச் செலுத்துகின்றது.

  ஆயினும், கூத்துக்கள் எல்லாவற்றுக்குமான பொதுவான அம்சங்கள் பலவும் அவைக்குள் உள்நுழைந்து நிற்பதனாலேயே ‘கூத்து’ என்ற பொதுமை வலுப் பெறுகின்றது.

## செயலொழுங்கு 2

* மாணவர்கள் பார்வையிட்ட கூத்தின் காட்சித் துண்டங்களுக்குள் காணப்பட்ட பொதுப்பண்புகள் எவை? என வினாவி அவற்றினை ஒவ்வொருவராகக் கரும்பலகையில் எழுதுவதற்குப் பணியுங்கள்.
* மாணவர்கள் முன்வைத்த கருத்துக்களை ஒழுங்குபடுத்தியும் முக்கிய விடயங்களை வலியுறுத்தியும் கலந்துரையாடுங்கள்.
* கூத்துக்கள் பல்வேறு பிரதேச ரீதியாகவும் சமூகவியற் பண்புகள் சார்ந்தும், கூத்தின் வகைமைகள் சார்ந்தும் வேறுபாடுகளைக் கொண்டதாகக் காணப்பட்டாலும் இக்கூத்து வடிவங்களுக்குள் பல பொதுத்தன்மைகள் காணப்படுகின்றன என்பது வலியுறுத்தப்பட வேண்டும்.

  எடுத்துக்காட்டாக :

  - ஆடல் அன்றேல் அசைவுகள் எல்லாக் கூத்துக்களிலும் காணப்படுகின்றது.
  - பாடல்கள் தொடர்பாடலுக்கான ஊடுபொருளாக எல்லா கூத்துக்களிலும் பயன்படுத்தப்படுகின்றது.
  - சல்லரி (தாளம்), தோற்கருவிகள் அடிப்படையான இசைக்கருவிகளாக எல்லாக் கூத்துக்களிலும் பிரயோகிக்கப்படுகின்றன.
  - கூத்துக்களில் ஐதிகம் சார்ந்த கதைப் பொருள் பின்னணியாக அமைந் திருக்கின்றது.
  - கூத்துக்களில் கதை சொல்லப்படும் முறைமையானது எடுத்துரைக்கும் (Narretive) பாங்கில் அமைந்திருக்கும்.
  - கூத்துக்கள், வாழும் சமூகங்களின் பழக்கவழக்கங்களோடும் சடங்குப் பின்புலங்களோடும் தொடர்புபட்டுக் காணப்படுகின்றது.
  - ‘அண்ணாவியார்’ என அழைக்கப்படுபவராகக் கூத்தின் நெறியாளர் காணப்படுவார்.
  - கூத்துக்களின் அரங்க வெளி பெரும்பாலும் சுற்றிவரப் பார்ப்போர் நின்று, அமர்ந்து பார்க்கின்ற தன்மையில் வட்டமான வெளியாகக் காணப்படுகின்றது. (புறநடையாகப் படச்சட்ட அரங்கப் பாவனையும் உள்ளது)
  - பெரும்பாலான கூத்துக்கள் அனைத்திலும் வேட உடை, ஒப்பனையானது பெரிதுபடுத்தும் தன்மையுடனான மோடிமைப்பாவனையில் காணப்படும்.

- அண்ணாவியார், பிற்பாட்டுப் பாடுவோர் உள்ளிட்ட 'சபையோர்' எனப்படும் குழுவினர் கூத்துக்களை நகர்த்திச் செல்வதில் முக்கிய பங்களிப்பினைச் செய்வார்கள்.
- நடிப்பானது மோடியுற்றதாகவே காணப்படும்.
- 'கட்டியகாரன்' எனப்படும் பாத்திரம் பெரும்பாலான கூத்துக்களில் கதையை அறிமுகம் செய்வான்.

  இவ்வாறான பொதுப்பண்புகளை மாணவர்கள் இனங்கண்டு பட்டியலிட்டுக் கொள்வதற்கு உதவுங்கள்.

* பல்வேறு பிரதேசக் கூத்து மரபுகளையும் தேடிப் பெறுவதற்கும் மாணவர்களைத் தூண்டுங்கள். அதனைச் சுவரேடாகத் தயாரித்து வகுப்பறையில் காட்சிப்படுத்துவதற்குப் பணியுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கூத்து ஒளிப் பேழைகள்.
- ஒளிப்படங்கள்.
- சுவரேடு.

**முதன்மைப் பதங்கள் :**

- வரன்முறை ஆடல்.
- பிரதேச மரபு.
- சமூகவியற் பண்புகள்.
- அண்ணாவி.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- பாரம்பரியக் கூத்துக்களில் காணப்பெறும் பொதுவான பண்புகளை பட்டியற் படுத்துவார்.
- கூத்துக்கள் ஆடப்பெறும் பிரதேசங்களையும் கூத்து வகைகளையும் இனங் காண்பார்.
- கூத்தின் சமூக முக்கியத்துவத்தினை உணர்வார்.
- கூத்துக்களின் பிரதேச தனித்துவங்களை விளங்கிக் கொள்வார்.
- கூத்துக்களைப் பார்ப்பதில் விருப்பம் கொள்வார்.

**தேர்ச்சி 4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.3:** கூத்துக்கள் ஊடாக வெளிப்படும் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை அறிவார்.

**செயற்பாடு 4.3:** கூத்தின் சமூக பண்பாட்டுப் பெறுமானங்களை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் :** 02

**கற்றற் பேறுகள் :**

* கூத்துக்கும் சமூகத்திற்கும் இடையேயுள்ள தொடர்பை விளங்கிக் கொண்டிருப்பார்.
* சமூகத்தை இணைப்பதற்கான ஏற்பாடுகள் கூத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பதை அவதானித்திருப்பார்.
* கூத்தில் இடம் பெற்றுள்ள சமூக பண்பாட்டுப் பெறுமானங்களைப் பட்டியற் படுத்தியிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

* மாணவர்கள் அனைவருக்கும் காணொளியில் அன்றேல் கையடக்கத்தொலைபேசி இணையத்தின் ஊடாகக் கூத்துக்காட்சி ஒன்றினைப் பார்வையிடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
* அன்றேல் கூத்து நடைபெறும் பிரதேசம் ஒன்றிற்கு மாணவர்களை அழைத்துச் சென்று கூத்தினைப் பார்வையிடுவதற்கு வாய்ப்பளியுங்கள்.
* கூத்துக்கள் மகிழ்வூட்டலுக்காகவும் அறிவூட்டலுக்காகவும் சடங்கு சார்ந்த பக்திக்காகவும் ஆடப் பெறுகின்றன என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* கூத்து, நாடும் வாழ்வும் சிறக்கவே ஆடப்பெறுகின்றது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* கூத்து ஆடுதல் என்பது சமூக மட்டத்தில் வாழ்க்கையோடு ஒன்றிணைந்த ஒரு நிகழ்வாகவும் சமூகக் கலையாகவும் உள்ளது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* கூத்துக்கள் பெரும்பாலும் நிலமானிய அமைப்பின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் சமூக ஒருமைப்பாட்டைப் பேணிவந்தது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* ஒரு கிராமத்திற்காக அன்றேல் வெவ்வேறு சமூகக் குழுக்கள் தமக்குத் தமக்கெனக் கூத்துக்களை ஆடுவார்கள் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* கூத்துப் பழகத் தொடங்கி மேடையேற்றும் வரை சமூகத்தினரின் செயற்பாடுகள் பல வகைப்பட்டவையாக உள்ளன என்பதைத் தெளிவுபடுத்துங்கள். எடுத்துக்காட்டாக, கூத்து பழகுவதற்கு, மேடை ஏற்றுவதற்கு நல்ல நாள் பார்த்தல்.
* சமூகத்தினர் தமக்கான பொறுப்புக்களை ஏற்றுச் செயற்படுவதன் மூலம் சமூக ஒருமைப்பாடு பேணப்படுகின்றமை.

**உதாரணம் :**

- களரி அமைப்பவர்கள்.
- களரி அலங்காரம் செய்பவர்கள்.
- உணவு கொடுப்பவர்கள்.
- வேட உடை தயாரிக்க உதவுபவர்கள்
- சேர்ந்து பாடுபவர்கள்.
- ஒளி வகைகளைப் பெற்றுக் கொடுப்பவர்கள்.
- ஊர்களுக்கு அறிவிப்பவர்கள்.
- நடிகர்களை ஏற்பாடு செய்து கொடுப்பவர்கள்.

போன்ற செயற்பாடுகளைச் செய்வதற்கான குழுக்கள் எப்போதும் இயங்கிக் கொண்டிருக்கும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.

- ✶ ஊர்கள் ஒன்று கூடுவதற்காக ஊர்களுக்கு அறிவித்தல், அவர்களுக்குக் கதை சொல்லும் செயற்பாடுகள் நடைபெறும் என்பதையும் தெளிவுபடுத்துங்கள்.
- ✶ கூத்துக்கள் களரியில் நடைபெறுவது மட்டுமன்றி வீட்டுக்கு வீடு ஆடும் முறையும் காணப்படுகின்றது என்பதனையும் அவ்வாறான சந்தர்ப்பங்களில் கூத்துக்களைப் பார்க்க முடியாத நிலையில் உள்ளோருக்கு இது வாய்ப்பளிக்கும் என்பதையும் அவ்வாறான வீடுகளில் குடும்ப சண்டைகளைத் தீர்த்து வைக்கும் செயற்பாடுகள், அவர்கள் அளிக்கும் உணவு, பரிசுப் பொதிகள் போன்றவற்றையும் கூத்தர்கள் பெற்றுத் தமக்கான சமூக ஒருமைப்பாட்டினைப் பெறுவதைக்காண முடியும் என்பதையும் தெளிவு படுத்துங்கள்.
- ✶ வீட்டுக்கு வீடு ஆடுவதால் சமூகத் தேவைகள் பல நிறைவேற்றப்படும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- ✶ கூத்து ஆற்றுகையின் போது, சமூகம் ஒன்று சேர்வது மட்டுமல்லாமல் ஏனைய சமூகங்களும் அதனைப் பார்வையிட்டு அதன் கருத்துக்களைப் பரிமாறிக்கொள்வதுடன் பரிசில்களும் ஊக்குவிப்புக்களும் உற்சாகப்படுத்தல்களும் இடம் பெறும் என்பதையும் தெரியப்படுத்துங்கள்.
- ✶ கூத்து ஆற்றுகைக்காகக் கூட்டுப் பொதுமையான செயற்பாடுகள் இடம் பெறும் என்பதை தெரியப்படுத்துங்கள்.
- ✶ கூத்து ஆற்றுகையின் போது பாத்திரங்கள் வரவிற்குக் கைதட்டுதல், உற்சாகப்படுத்தல், கௌரவிப்புகள் போன்ற செயற்பாடுகளும் இடம் பெறும் என்பதை கூறுங்கள்.
- ✶ ஒட்டு மொத்தமாகக் கூத்து பல்வேறுபட்ட சமூக, பண்பாட்டுப் பெறுமானங்களைத் தன்னுள்ளே கொண்டு செயல்படுகின்றது என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
- ✶ மாணவர்கள் ஒவ்வொருவரும் கூத்தின் சமூக, பண்பாட்டுப் பெறுமானங்களைப் பட்டியற்படுத்தி ஒப்படையாகக் கொண்டுவருமாறு பணியுங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- காணொளிப் பேழை.
- டிமைன் தாள்.
- மாக்கர்.

**முதன்மைப் பதங்கள் :**

- சமூக ஒருமைப்பாடு.
- சட்டம் கொடுத்தல்.
- கூத்து.
- களரி.
- அலங்கரிப்பு.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- தாம் பார்த்த அன்றேல் கேட்ட கூத்துக்களைக் கூறுவார்.
- கூத்துக்களின் அழகியல் பற்றி எடுத்துரைப்பார்.
- கூத்துக்களின் சமூகப் பண்பாட்டுப் பெறுமானங்களைப் பட்டியலிடுவார்.
- கூத்தில் சமூகம் பங்கேற்கும் விதத்தை அறிந்திருப்பார்.
- கூத்துக்களைப் பார்வையிடுவதற்கு விருப்பம் தெரிவிப்பார்.

**உசாத்துணைகள் :**


1. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - பேராசிரியர் சி. மௌனகுரு.
2. மருத நிலா - வடக்கு கிழக்கு மாகாண இலக்கிய விழா மலர்.

**தேர்ச்சி 4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.4:** இலங்கையில் கூத்தரங்கின் வளர்ச்சியில் பங்களிப்புச் செய்த நாடகங்கள் பற்றிப் பயில்வார்.

**செயற்பாடு 4.4:** மரபுவழிக் கூத்துக் கலைஞர்கள் பற்றிப் பயில்வோம்.

**பாடவேளைகள் :** 03

**கற்றற் பேறுகள் :**

* கூத்துக் கலைஞர்களைப் பட்டியற்படுத்துவார்.
* கூத்துக் கலைஞர்களின் பின்னணியை முன்வைப்பார்.
* கூத்தரங்கின் வளர்ச்சிக்குக் கூத்துக் கலைஞர்களின் பங்களிப்புப் பற்றிக் கூறுவார்.
* கூத்துக் கலைஞர்களின் ஆளுமையும் அர்ப்பணிப்பும் மிக்க பணிகளும் கூத்தரங்கின் வளர்ச்சியில் செல்வாக்கு செலுத்தியமையை உணர்வார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்-**

**செயலொழுங்கு 1 :**

* மாணவர்களின் சொந்தப் பிரதேசத்தில் வாழ்ந்த அன்றேல் வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய கூத்துக் கலைஞர்களின் பெயரையும் விவரங்களையும் சேகரித்து வரப் பணியுங்கள்.
* மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்து, சேகரித்து வந்த கூத்துக் கலைஞர்களில் மிகவும் முக்கியத்துவம் மிக்க ஒருவரைத் தெரிவு செய்து, அக்கலைஞரின்
    - பின்னணி
    - அவரது சிறப்பான ஆளுமைகள்
    - கூத்தரங்கின் வளர்ச்சியில் அவரது பங்களிப்பு
    - அவருக்கு இருக்கத்தக்க சமூக முக்கியத்துவம்

    போன்றதான விடயங்களைத் தொகுத்து அவற்றைக் குழுவாக முன்வைப்புச் செய்யப் பணியுங்கள்.
* மாணவர்களின் முன்வைப்புக்களில் இருந்து பின்வரும் விடயங்களைக் கோடிட்டுக் காட்டுங்கள்.
    - ஒவ்வொரு பிரதேசங்களிலும் கூத்துப் பயில்வு தொடர்ச்சியாக இடம் பெறுவதற்கு ஆளுமை மிக்க கலைஞர்கள் வழங்கிய பங்களிப்பு காரணமாக அமைந்துள்ளது.
    - பல கூத்துக் கலைஞர்கள் தம்மை அக்கலைக்காக முழுமையாக அர்ப்பணித்துப் பணியாற்றியதன் காரணமாகவே கூத்துப் பயில்வு தொடர்ச்சியைக் கொண்டதாகக் காணப்பட்டது.
    - கூத்துக் கலைஞன் புத்துயிர்ப்புக்கும், காலத்திற்கேற்ப அக்கலை வளர்ந்து செல்வதற்கும் பல கூத்துக்கலைஞர்களின் முன்னோக்குச் சிந்தனை காரணமாக அமைந்துள்ளது.

- கூத்தினை எழுதிய புலவர்கள், அண்ணாவிமார்கள், கூத்தர்கள் இவ்வாறான பங்களிப்பினை ஆற்றி வந்துள்ளனர்.
- அத்தகைய கலைஞர்களை இனங்காண்பதும் அவர்கள் பற்றிய தகவல்களைச் சேகரிப்பதும் அவர்களது பணிகளை ஆவணமாக்குவதும் அவசியமான கடமைகளாகும்.

## செயலொழுங்கு 2:

* பல்வேறு பிரதேசங்களிலும் கூத்துக் கலையின் வளர்ச்சிக்குப் பங்களிப்புச் செய்த பல கலைஞர்கள் உள்ளார்கள் என்பதனை வலியுறுத்தி, அவர்களில் தெரிவு செய்யப்பட்ட சில கலைஞர்களையும் அவர்கள் பற்றிய குறிப்புக்களையும் வழங்கி, அவற்றைக் குழுவாக ஆராய்ந்து அவர்கள் பற்றிய விவரங்களை முன்வைப்பதற்குப் பணியுங்கள்.
    - பூந்தான் யோசேப்பு.
    - நாகமணிப் போடி.
    - முருகவேள்.
    - குழந்தை செபமாலை.

### 1. பூந்தான் யோசேப்பு

யாழ்ப்பாணம் சுண்டிக்குளியைச் சேர்ந்த அண்ணாவியார் பூந்தான் யோசேப்பு யாழ்ப்பாணத் தென்மோடிக் (கத்தோலிக்க) கூத்து மரபின் வளர்ச்சியில் பெரும் பங்களிப்புச் செய்த கலைஞராவார். சிறிய வயதில் இருந்தே கூத்துக்களில் நடித்து வந்த இவர், சிறந்த சாரீர வளத்தினாலும் தோற்றப் பொலிவினாலும் நடிப்புத்திறனாலும் ''ராஜபாட்'' பாத்திரங்களை மிகச்சிறப்பாக நடிக்கவல்லவராக இருந்ததுடன் அண்ணாவியாராக இருந்து, நூற்றுக்கணக்கான கூத்துக்களை நெறிப்படுத்தி, இக்கூத்துக்களின் இடையறாத வளர்ச்சிக்கு வித்திட்ட ஒருவர் எனலாம்.

சங்கிலியன், கருங்குயில் குன்றத்துக் கொலை, விசய மனோகரன், ஞானசௌந்தரி, எஸ்தாக்கியார், தேவசகாயம்பிள்ளை, மனம் போல் மாங்கல்யம், மரியதாசன், ஊசோன் பாலத்தை போன்ற பல கூத்துக்களில் நடித்தும் நெறிப்படுத்தியும் வந்துள்ளார். யாழ்ப்பாணத் தென்மோடி கூத்துமரபின் வளர்ச்சியில் இவர் ஆற்றிய பணிகள் வருமாறு-

- ''நவரச நாட்டுக்கூத்து கலாமன்றம்'' என்ற ஒன்றினை உருவாக்கி, எல்லாக் கிராமங்களிலும் இருந்த அண்ணாவிமார் கூத்துக் கலைஞர்களை ஒன்றிணைத்துக் கூத்துக் கலை வளர்ச்சியடையக் காரணமானார்.
- கூத்து கலைஞர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு என்பவற்றைப் பேணி இதனைக் கௌரவத்திற்குரியதாக்கினார்.
- பல கிராமங்களுக்கும் சென்று கூத்துக்களை நெறிப்படுத்தியும் அக்கிராம அண்ணாவிமாரை ஊக்குவித்தும் அங்கு கூத்து நிலை பெற உதவினார்.
- இசை நாடகங்களில் ''ஸ்பெஷல் நாடக'' மரபு இருந்தது போல, இக்கூத்து மரபிலும் சிறப்புற்றிருந்த அண்ணாவிமாரை ஒன்றிணைத்துக் கூத்துக்களை நெறிப்படுத்தி, கூத்துமரபின் சிறப்பான ஆற்றுகைகளுக்குக் காரணமாக இருந்தார்.
- கூத்து கலைஞர்களிடையே இருந்த பேதங்களை ஒழித்து ஒன்றுபட்ட சிந்தனையுடன் கூத்து வளர்ச்சியுறக் காரணமானார்.

- கூத்தில் நேரச் சுருக்கம், ஹார்மோனிய இசைக்கருவிப் பயன்பாடு, நடிப்பிற்கு முக்கியத்துவம் அளித்தல், நேர்த்தியுடன் கூத்தினை மேடையேற்றுதல், பெண் பாத்திரங்களைப் பெண்களே ஏற்று நடித்தல் போன்ற முற்போக்கான செயற்பாடுகளினால் கூத்தின் சிறப்புக்கும் கற்றோர் மத்தியிலும் அது மதிப்புப் பெறவும் காரணமானார்.
- முதன் முதலாகப் பாடசாலை மாணவர்களுக்குக் கூத்துக்களைப் பயிற்றுவித்துப் பாடசாலை மட்டத்தில் கூத்து வளர்ச்சியுற ஒரு தொடக்கமாக இருந்தார்.
- கூத்து நூல்களை பதிப்புச் செய்வதற்கு ஆசிரியர் ஆசீர்வாதம் அவர்களைத் தூண்டி எஸ்தாக்கியார், தேவசகாயம்பிள்ளை, விசய மனோகரன், மரியதாசன், மனம் போல் மாங்கல்யம் போன்ற நூல்கள் பதிப்புப் பெற காரணமாக இருந்தார்.
- இலங்கை வானொலியில் தென்மோடிக் கூத்து ஒலிபரப்பப் பெற்று பரவலடைவதற்கும் காரணியாகச் செயற்பட்டார்.

இன்று யாழ்ப்பாணத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் பல அண்ணாவிமார்கள் தமது குருவாக மதிக்கும் அண்ணாவியார், பூந்தான் யோசேப்பு, நாட்டுக் கூத்துக் கலாநிதி என சிறப்பிக்கப்பட்டு போற்றப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

**2. நாகமணிப் போடி**

மட்டக்களப்பு கன்னன் குடாவைப் பிறப்பிடமாகக் கொண்ட அண்ணாவியார் நாகமணிப் போடி, அங்குள்ள கூத்தர்கள் எல்லோராலும் அதிகம் மதிக்கப் பெறும் ஆளுமையுடன் விளங்கியவர். கன்னன் குடாவின் கூத்துப் பாரம்பரியத்துக்கு வித்திட்ட சீனித்தம்பி அண்ணாவியாரிடம் கூத்துப் பயின்ற இவர் வடமோடி, தென்மோடிக் கூத்துக்களின் இலக்கணங்களை நன்கறிந்த கலைஞராவார்.

மட்டக்களப்புக் கூத்துப் பாரம்பரியத்தில் அண்ணாவியாராக இருப்பவர் கூத்திற்குப் பாடல் எழுதவல்லவராகவும் எல்லாப் பாடல் மெட்டுக்களையும் வகைத்தூய்மையுடன் பாடவும் சொல்லிக் கொடுக்கவும் வல்லவராகவும் ஆட்ட மரபுகளை ஆடிப் பயிற்றுவிக்கவும் கூடியவராகவும் மத்தளம் இசைக்கக் கூடியவராகவும் இருக்க வேண்டுமென்பார்கள். இத்தகைய தகுதிகள் அனைத்தையும் கொண்டவராக நாகமணிப்போடி விளங்கினார்.

மாடு பிடி சண்டை என்ற கூத்து இவரால் எழுதப் பெற்று நெறியாள்கை செய்யப் பெற்றது. இதனை விடவும் அல்லி நாடகம், குருகேத்திரன் போர், சாம்பேந்திரன் நாடகம் போன்ற பல கூத்துக்களை நெறியாள்கை செய்துமுள்ளார்.

இவரது முக்கியத்துவங்கள் சில வருமாறு-

- வடமோடி, தென்மோடி ஆகிய இரண்டு வகைமைகளினதும் வேறுபாடுகளைத் துல்லியமாக அறிந்தவராகவும் அதனைச் சந்ததிக்குக் கடத்துகை செய்தவராகவுமுள்ளார்.
- தென்மொடிக் கூத்து மரபில் அதிக பாண்டித்துவத்தினைக் கொண்டவாரகிய இவர் கன்னன் குடாவில் இம்மரபின் இருப்புக்குக் காரணமாக இருந்தார்.
- கூத்தில் ஈடுபட்ட கலைஞர்களின் கூத்துப் பற்றிய சந்தேகத்தினைத் தீர்க்க வல்லவராகவும் எல்லா அண்ணாவிமார்களும் மதிக்கத்தக்க ஆளுமையையும் கொண்டிருந்தார்.
- மட்டக்களப்புப் பண்பாட்டின் கூறுகளை நன்கறிந்தவராக, கூத்தின் கூறுகளை நன்கறிந்தவராக, சடங்குகள் விழாக்கள் போன்றவைகளின் நேர்த்தியான செயலொழுங்குகளை வழங்க வல்லவராக இருந்தார்.
- சிறந்த சாரீர வளமும் நடிப்புத் திறனும் மத்தள வாசிப்புத்திறனும் ஆடல் திறனும் ஒருங்கே அமைந்தவராக இருந்தார்.

### 3. அப்புக்குட்டி முருகவேள்

யாழ்ப்பாணத்தில் வட்டுக்கோட்டை என்னும் கிராமம் வடமோடிக் கூத்துக் கலையை நீண்ட காலமாகப் பேணிவருகின்ற கிராமமாகும். இக்கிராமத்தில் 50களுக்குப் பின்னர் கூத்துக் கலை நிலைப்பதற்கும் தனித்துவத்துடன் பேணப்படுவதற்கும் காரணமாக இருந்தவர் அ.முருகவேள் அண்ணாவியாராவார். சிறிய வயதில் இருந்தே கூத்துக்களில் ஏடுபடிப்பவராகவும் பிற்பாட்டுப்பாடுபவராகவும் பின்னர் நடிகராகவும் அதன் பின்னர் அண்ணாவியாராகவும் பணிகளை மேற்கொண்ட இவர், 1945 அளவில் அக்கிராமத்தில் இருந்து கூத்து மரபு நலிவுற்ற போது அதனை மீளுயிர்ப்புச் செய்து இன்று வரை கூத்து நிலைப்பதற்குக் காரணமாயிருந்துள்ளார். இவரது பணிகளைப் பின்வருமாறு நோக்கலாம்.

- கண்டியில் இவர் ஆசிரியராகக் கடமையாற்றிய போதும் வட்டுக்கோட்டையிலும் பல கூத்துக்களை நெறிப்படுத்தி மேடையேற்றினார்.
- வட்டுக்கோட்டையில் கூத்து மரபினை நலிவுறாது பேண வேண்டுமென்பதற்காக முதலில் பாலர் கலைவளர் சங்கம் என்ற ஒன்றினையும் பின்னர் வட்டுக்கோட்டை அபிவிருத்திக் குழு என்ற அமைப்பையும் உருவாக்கி அதனூடாகக் கூத்துக் கலையும் கிராமியக் கலைகளும் வளர்வதற்குப் பெரும் ஊக்க சக்தியாகத் திகழ்ந்தார்.
- கிராமத்தில் இருந்து வழக்கொழிந்து போன கூத்துக்களின் ஏட்டுப்பிரதிகளைத் தேடி அவற்றினைப் பாடம் பண்ணிப் பேணியதுடன் அவற்றினைச் சுருக்கியும் பகுதிகளாக்கியும் நாடகத்தன்மையுடன் மேடையேற்றப்படுவதற்கு உதவினார்.
- கூத்துக்களை நெறிப்படுத்தியது மட்டுமன்றி, அவற்றின் மரபு கெடாது (பாடல்,ஆடல், வேட ஒப்பனை, இசை, வெளி)கிராமத்தில் அவை பேணப்படுவதற்கும் கண்டிப்பான ஒழுங்குகளைக் கடைப்பிடித்து வந்தார்.
- புலம் பெயர்ந்த நாடுகளிலும் வட்டுக்கோட்டைக் கலைஞர்கள் இக்கூத்துமரபினைப் பேணுவதற்குத் தூண்டுகோலாக இருந்தார்.

தர்மபுத்திரன் நாடகம், விராட நாடகம், குகேந்திரன் நாடகம், கீசகன் வதை, மல்லன் மடையன் போர் போன்ற பல கூத்துக்களை இவர் நெறிப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

### 4. குழந்தை செபமாலை

மன்னாரில் முருங்கனைப் பிறப்பிடமாகக் கொண்ட குழந்தை செபமாலை அவர்கள் நடிகனாக, நாடக ஆசிரியனாக, நெறியாளனாக, அண்ணாவியாக, ஹார்மோனிய இசைக்கலைஞனாகப் பல்வேறு தளங்களில் செயலாற்றியவர். குறிப்பாக, மன்னார் கூத்து மரபின் எழுச்சிக்குக் காரணமாக இருந்தவர்.

மன்னாரில் வடபாங்கு, தென்பாங்கு, வாசாப்பு போன்ற கூத்து வகைகள் காணப்படுகின்றன. முருங்கனில் வடபாங்கு, வாசாப்பு போன்ற வடிவங்கள் செல்வாக்குப் பெற்றுள்ளன. இம்மரபின் வழிவந்த மரியான் சந்தானு என்ற புலவரின் பேரனாகிய குழந்தை செபமாலை சிறிய வயதில் இருந்தே கூத்துக்களில் நடித்து வந்தார். பின்னர் உரை நடை நாடகங்களில் ஆர்வத்துடன் செயல் புரிந்தவர். ஆனால் பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்களின் கூத்துப் புத்தாக்க நடவடிக்கைகள் அண்ணாவி மாநாடு போன்றவற்றால் தூண்டப் பெற்று மீண்டும் கூத்துக்குள் ஆழ இறங்கி கூத்து மரபின் மீள் எழுச்சிக்கு வித்திட்டார்.

- மன்னார் முத்தமிழ் கலாமன்றம் என்ற ஒன்றினை உருவாக்கி அதற்கூடாக நாட்டுக்கூத்துக்களை மேடையேற்றினார்.
- 50 வருடங்களுக்கு மேல் தொடர்ச்சியாக இத்துறையில் ஈடுபட்டு வந்திருக்கின்றார்கள்.

- முப்பதுக்கும் மேற்பட்ட கூத்துக்களை எழுதி நெறிப்படுத்தியது மட்டுமன்றி, அதனை பல மாவட்டங்களிலும் கொண்டு சென்று மேடையேற்றினார்.
- அவர் எழுதிய கூத்துக்களில் கட்டிறுக்கமான கதை சொல்லும் பாங்கினை முனைப்பாக்கி நேர சுருக்கங்களுக்கு ஏற்ற முறையில் கூத்துக்கள் ஆக்கினார்.
- எளிமையானதும் அதேவேளை கவித்துவமானதுமான பாடல்கள் மூலம் சாதாரணர்களுக்கும் கூத்து விளங்கத்தக்க ஒன்றாக மாற்றியுள்ளார்.
- புராண இதிகாசக் கதைகள் மட்டுமே அதிகமாக ஆடப்பட்டு வந்த கூத்துமரபிலே அதன் எல்லை கடந்து எல்லா வகையான கருப்பொருளிலும் கூத்துக்களை ஆக்கி மேடையேற்றியுள்ளார் (விவிலியக் கதை, புராணக் கதை, காப்பியங்கள், கற்பனைக் கதை, வரலாற்றுக் கதை, சமகால அரசியற் கதை, பிரசாரக் கதை).
- கூத்துக்களைத் தனியே மரபுவழி வடிவம் என்பதற்கப்பால் அவற்றினைச் சமூகத்திற்கான செய்தி சொல்லும் கருவியாகப் பயன்படுத்தியுள்ளமை.
- தனக்குப்பின் கூத்துமரபு நீட்சி பெறத்தக்க வகையில் பல சந்ததிகளை உருவாக்கியிருந்தமை.
- பாடசாலைகளில் கூத்துக்களை நெறிப்படுத்தி மாணவர் மத்தியில் அதனை நீட்சி பெறச் செய்தமை.
- இவர் எழுதிய கூத்துக்களில் யார் குழந்தை, வீரனை வென்ற தீரன், விடுதலைப் பயணம், நல்ல சமாரியன், உலகை மீட்ட உத்தமன், பூதத் தம்பி, கைமுனு, எல்லாளன், சாம்ராட் அசோகன் போன்றவை குறிப்பிடத்தக்கவை.
- இவர் எழுதிய கூத்துக்கள் இரண்டு தொகுதி நூல்களாக வெளிவந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. பரிசு பெற்ற நாடகங்கள் (1997), மரபு வழி நாடகங்கள் (1998).

**செயலொழுங்கு 2 :**

- மாணவர்களின் முன்வைப்புக்களுக்கான பின்னூட்டல்களை வழங்குங்கள்.
- அவர்கள் பிரதேசக் கூத்துக் கலைஞர் ஒருவரை நேரடியாகச் சந்திப்பதற்கும் அவரது அனுபவங்களைப் பெற்றுக் கொள்ளவும் தூண்டுங்கள்.
- இவ்வாறு அவர்கள் வதியும் பிரதேசக் கூத்துக் கலைஞர் ஒருவர் பற்றி தகவல் அறிந்து அதனை ஒரு ஒப்படைச் செயற்பாடாகச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- கூத்துக் கலைஞர்களின் ஒளிப்படங்கள்.
- கலைஞர் பற்றிய விவரக் குறிப்புக்கள்.
- கூத்து எழுத்துருக்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- கூத்தரங்கு.
- கூத்துப் பயில்வு.
- பிரதேசக் கலைஞர்.
- முற்போக்கு.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- தமது பிரதேசக் கலைஞர்களை இனங்காண்பார்.
- கூத்தரங்கின் வளர்ச்சியில் கூத்துக் கலைஞர் அளிக்கும் பங்களிப்பினை எடுத்துரைப்பார்.
- தெரிவுசெய்து வழங்கிய கூத்துக் கலைஞர்களின் கலைப் பங்களிப்புக்களை விளங்கிக் கொள்வார்.
- தமது பிரதேசக் கூத்துக் கலைஞர்களின் பெயர்ப்பட்டியலொன்றைத் தயாரிப்பார்.
- கூத்துக் கலைஞர்களைக் கௌரவத்துடன் மதிக்கும் மனப்பாங்கைப் பெறுவார்.

**உசாத்துணைகள்:**

1. வட்டுக்கோட்டைக் கூத்தும் கிராமியக் கலைகளும் - க.நாகப்பு.
2. கலைத்தவசி - குழந்தை செபமாலை பணி நயப்பு மலர்.
3. பூந்தான் யோசேப்புவின் கலையுலக வாழ்க்கை - S. அகஸ்தியர்.

**தேர்ச்சி 4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.5:** சுதேச நாட்டார் ஆற்றுகைக் கலைவடிவங்களைப் பயில்வார்.

**செயற்பாடு 4.5:** வசந்தன் கூத்தைப் பயில்வோம்.

**பாடவேளை** : 05

**கற்றற் பேறுகள் :**

* வசந்தன் கூத்து ஆடப்படும் பிரதேசங்களைக் கூறுவார்.
* வசந்தன் கூத்து நிகழ்த்தப் பெறுவதற்கான பின்னணியை அறிந்திருப்பார்.
* வசந்தன் கூத்தின் ஆடல், பாடல்கள் சிலவற்றைப் பயின்றிருப்பார்.
* வசந்தன் கூத்தினைக் கூட்டமாக ஆற்றுகை செய்வார்.

## பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்:

**செயலொழுங்கு - 1**

* மாணவர்களை வசதியான மண்டபம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லுங்கள். வசந்தன் கூத்துப் பாடலொன்றைப் பாடுங்கள். பின்னர் அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
    - பாடல் மெட்டுக்கள்.
    - அதன் ஓசை நயம்.
    - இரசனைக்குரிய அம்சங்கள்.
    - பாடலில் உள்ளடங்கியுள்ள விடயப் பொருள்.
    - பாடலின் வகை.
* மீண்டும் மாணவர்களை அக்கூத்துப் பாடலைப் பாடி அதன் மீதான விருப்பத்தினையும் இரசனையினையும் தூண்டுவதற்கு வழிப்படுத்துங்கள்.
* பின்னர், தமிழர்களிடையே ஆடப் பெறுகின்ற கூத்துக்களில் வசந்தன் கூத்தும் ஒன்றாகும் என்பதைத் தெளிவுபடுத்துங்கள்.
* வசந்த காலத்தில் ஆடப்பெறுவதனாலும் இன்பத்தைத் தருவது என்ற பொருளை வெளிப்படுத்துவதனாலும் வசந்தன் கூத்து எனப் பெயர் வழங்கப் பெற்றமை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* வசந்தன் கூத்து ஆடப்பெறுவதற்கான காரணங்களைப் பட்டியற்படுத்தக் கேளுங்கள்.
    - மழை வேண்டியும்
    - நோய் தீரவும்
    - நல்ல விளைச்சல் கிடைக்கவும்
    - மகிழ்வு பெறவும்
    - பொழுது போக்கிற்காகவும்
    - நேர்த்திக்காகவும்
    - சமூக ஒற்றுமைக்காகவும்

- அழகியல் திருப்திக்காகவும்
- உடல் புத்தெழுச்சிக்காகவும்

  வசந்தன் கூத்து ஆடப்பெற்றமையை வலியுறுத்துங்கள். இலங்கையில் பல்வேறு பிரதேசங்களில் வசந்தன் கூத்து நிகழ்த்தப் பெறுகின்றது என்பதை முன்வையுங்கள்.
- மட்டக்களப்பு.
- யாழ்ப்பாணம்.
- முல்லைத்தீவு.
- திருகோணமலை.
- அம்பாறை.

## செயலொழுங்கு - 2

* மாணவர்களை வசதியான மண்டபம் ஒன்றிற்கு அழைத்துச் சென்று, வசந்தன் கூத்துப் பாடலொன்றைப் பாடச் செய்யுங்கள்.

  தாந்தனத் தனத்தானா- தன
  தாந்தனத் தனத்தானா

  ‘‘குந்தியிருந்தான் அனுமான்-குதி
  கொண்டான் பாய்ந்தான் அனுமான்
  இந்திர சித்துப் பிடித்த
  இடையைக் கொடுத்தான் அனுமான்
  பத்துத் தலையுள்ள இராவணன் மார்பைக்
  குத்திப் பொருதான் அனுமான்
  சீதையைக் கண்டான் அனுமான்
  திரும்பி வந்தான் அனுமான்’’
* அப்பாடலின் உள்ளடக்கம், பாடல் மெட்டுக்கள், ஓசை நயம் போன்றவை பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* பிரதேசத்துக்குப் பிரதேசம் வசந்தன் பாடல்கள் பாடப் பெறும் முறைகளிலும் நிகழ்த்து முறைகளிலும் வேறுபாடுகள் உள்ளன என்பதையும் எடுத்துக் கூறுங்கள்.
  - தெய்வங்களைப் புகழ்பவை.
  - தனிமனிதர்களை வாழ்த்துபவை.
  - வேடிக்கைத் தன்மையானவை.
  - தொழில் சார்ந்தவை.
* மேற்குறிப்பிட்ட வகையின் அடிப்படையில் வசந்தன் கூத்துக்கள் பெயர் பெறும் விதத்தை அறியச் செய்யுங்கள்.
  - பிள்ளையார் வசந்தன்.
  - அம்மன் பள்ளு வசந்தன்.
  - ஞானவேதியர் வசந்தன்.
  - தம்பாப்பிள்ளை வசந்தன்.
  - உப்பட்டி கட்டு வசந்தன்.
  - வேளாண்மை வசந்தன்.

- முசுற்று வசந்தன்.
- அனுமான் வசந்தன்.
- வீரபத்திரர் வசந்தன்.

✶ வசந்தன் பாடல்கள் சிலவற்றை வகைக்கொன்றாய் பாடச் செய்யுங்கள்.

## செயலொழுங்கு 3

✶ முன்னைய பாடவேளையில் பாடப்பெற்ற வசந்தன் கூத்துப் பாடலை நினைவுபடுத்தி இன்னுமொருவகைப் பாடலைப் பாடுங்கள்.

தனம் தனம் தன தானா - தன
தான தனா தன தானின தானா
தனம் தனம் தன தானா

அண்டம் உலாவிய மாவில் - நானும்
அங்குறு கனிகளை ஆய்ந்திடப் போனேன்
சென்றெதிர் வருகுது முசுறு- என்
சிரசை - ஓஹோ
சிரசை - ஓஹோ
சிரசைத் துறையடி சேயிழையாலே
தனம் தனம் தன…..

✶ பாடப்பெற்ற வசந்தன் பாடல் பற்றிக் கலந்துரையாடல்களை முன்வையுங்கள். வசந்தன் கூத்தில் ஆடலும் பாடலுமே பிரதானம். இக்கூத்துக்கெனத் தனியான கதை அமைப்பு இல்லை. நாடகத்துக்குரிய ஆரம்பம், முரண்பாடு, வளர்ச்சி என்கின்ற கட்டமைப்பும் வசந்தன் கூத்தில் இல்லை. பாடல்களை அவற்றுக்குரிய சந்தர்ப்பங்களில் பாடியபடி கோலடித்து ஆடுவதே இதன் பண்பாகும்.

✶ மட்டக்களப்பில் வேளாண்மைத் தொழில் முடிந்து ஓய்வாக, மகிழ்வாக இருக்கும் காலங்களில் வேளாண்மைத் தொழிலோடு தொடர்பு பெற்ற சில நிகழ்ச்சிகளைப் பாடி ஆடிக் காட்டுகின்றனர். வயல் உழுதல், நெல் விதைத்தல், வேளாண்மை வெட்டுதல், உப்பட்டி கட்டுதல், சூடு வைத்தல், சூடு போடுதல், பொலித்தூத்துதல் போன்றன இவற்றுட் சிலவாகும். இது போன்ற நிகழ்வுகளை நிகழ்த்துவது பற்றி எடுத்துக் கூறுங்கள்.

✶ வசந்தன் கூத்துப் பாடலொன்றைப் பாடி அதனை ஆடுவதற்கு மாணவர்களை வழிப்படுத்துங்கள்.

✶ ஆடுவதற்கு இலகுவான ஆட்டக் கோலத்தினை எடுத்துக் கூறி ஆட வழிப்படுத்துங்கள்.

✶ ஆட்டக் கோலமானது எளிமையான முறையில் தொடங்கி, கடினமான முறையில் செல்லும் வகையில் ஒழுங்குபடுத்துங்கள்.

✶ பின்னர், மீண்டும் குழுநிலையில் வசந்தன் பாடல்களைப் பாடுவதற்கு வசந்தன் கூத்து பிரதிகளை ஒப்படைத்து அடுத்த பாடவேளையில் ஆயத்தம் செய்து வரும் படியும் ஆடுவதற்குத் தடிகள், வேட உடைகளைக் கொண்டு வரும்படியும் எடுத்துக் கூறுங்கள்.

## செயலொழுங்கு 4

* மாணவர்களை வசதியான மண்டபம் அன்றேல் வெளிக்கு அழைத்துச் செல்லுங்கள். முன்னரே பிரிக்கப் பெற்ற மாணவர் குழுக்களை ஒழுங்குபடுத்தி ஆடுவதற்கு வழிப்படுத்துங்கள்.
* அதன் ஆற்றுகை முறைமை பற்றிக் கலந்துரையாடுங்கள். ஆற்றுகையில் அரங்கச் சாதனங்களின் பயன்பாட்டையும் அதன் தன்மையையும் எடுத்துக் கூறுங்கள்.
    - அரங்க அமைப்பு.
    - நடிகர்கள்.
    - வேட உடை.
    - கதை.
    - ஓப்பனை.
    - கைப்பொருள்கள்.
    - இசைக்கருவிகள்.
    - ஒளி, ஒலி.
    - அண்ணாவியார், கட்டியக்காரனின் பங்களிப்பு.
    - எடுத்துச் சொல்லும் முறைமை.
    - பார்ப்போர்.

* மாணவர்கள் மேற்கூறப் பெற்ற விடயங்கள் பற்றி அறிந்து கொள்ள, வசந்தன் கூத்து வீடியோ காட்சிகளை அன்றேல் ஒளிப்படங்கள் மூலம் தெளிவுபடுத்துங்கள். பின்னர் மாணவ குழுக்களிடையே ஒவ்வொரு விடயங்கள் பற்றியும் ஒப்படைத்து அது பற்றி எடுத்துரைக்க வழிப்படுத்துங்கள்.
    - வசந்தன் கூத்து வட்டக்களரியில் ஆடப்படுகின்றது.
    - தலைப்பாகை, காலில் சதங்கை அணிந்து சரிகைச் சேலையினால் நீள் கொடுக்குக் கட்டி ஆடுதல்.
    - சிறிய தடிகளைத் தட்டி ஆடுதல்.
    - சிறுவர்களே அதிகம் ஆடுவர்.
    - 8 பேர் அன்றேல் 12 பேர் ஆடுவர்.
    - மத்தளம், சல்லரி முதன்மையான வாத்தியங்கள்.
    - கட்டியக்காரன், அண்ணாவியாரே கூத்தினை நடத்திச் செல்வர்.
* மேற்குறிப்பிட்ட விடயங்கள் பற்றியும் கலந்துரையாடல்களை முன்வையுங்கள்.

## செயலொழுங்கு 5

* மாணவர்களை மண்டபம் அன்றேல் வெளிக்கு அழைத்துச் சென்று இதுவரையும் வசந்தன் கூத்துப் பற்றி அறிந்தவை பற்றிக் கலந்துரையாடித் தெளிவுபடுத்துங்கள்.
* மாணவர்களைக் குழுக்களாக வகைப்படுத்தி முன்கூட்டியே ஒப்படைக்கப் பெற்ற பணிகளுக்கு அமையக் கூத்தினை அளிக்கை செய்ய வழிப்படுத்துங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- கூத்து.
- வசந்தன்.
- களரி.
- ஆடல்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வீடியோ, ஓடியோ.
- அட்டைப் படங்கள்.
- கணினி.
- காணொளி.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- வசந்தன் கூத்து என்பதற்கு விளக்கம் அளிப்பார்.
- வசந்தன் கூத்து ஆடப் பெறும் பின்னணியை முன்வைப்பார்.
- வசந்தன் கூத்து ஆடப்பெறும் பிரதேசங்களைப் பட்டியற்படுத்துவார்.
- வசந்தன் கூத்தினை ஆடிக்காட்டுவார்.

**உசாத்துணைகள் :**


1. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் - பேராசிரியர் சி. மௌனகுரு.
2. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி. பேராசிரியர் சி. மௌனகுரு. திரு. க. திலகநாதன்.
3. வட இலங்கை நாட்டார் அரங்கு - காரை. செ. சுந்தரம்பிள்ளை.


குறிப்பு :

பாடசாலை தவிர்ந்த வேளைகளிலும் வசந்தன் கூத்தினை மாணவர்களுக்குப் பயிற்றுவித்து விஷேட விழாக்களில் ஆற்றுகை செய்ய வழிப்படுத்துங்கள்

**தேர்ச்சி 4.0:** இலங்கையில் நாடக அரங்கக் கலைகளின் சமூக பண்பாட்டு வரலாற்றுப் பின்னணியை விளக்குவார்.

**தேர்ச்சி மட்டம் 4.6:** இலங்கையின் பிரதேச ரீதியான நவீன நாடக வளர்ச்சி பற்றிக் கற்பார்.

**செயற்பாடு 4.6:** கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகப் பிரதேசங்களின் நவீன நாடக வளர்ச்சியை அறிந்து கொள்வோம்.

**பாடவேளைகள் : 05**

**கற்றற் பேறுகள் :**

* ஈழத்தில் நவீன நாடகம் தோன்றிய முறைமையை எடுத்துரைப்பார்.
* நவீன நாடக வளர்ச்சியானது பிரதேச ரீதியாக முனைப்பு பெற்று வளர்ந்ததைக் கூறுவார்.
* கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் போன்ற இடங்களின் நவீன நாடக வளர்ச்சியைச் சுருக்கமாக முன்வைத்திருப்பார்.
* நவீன நாடக வளர்ச்சி தொடர்பில் பிரதேசங்களுக்கிடையில் வேறுபாடுகள் இருப்பதை உணர்ந்திருப்பார்.
* பிரதேச ரீதியான நாடக ஆளுமையினரையும் அவர்தம் நாடகப் பணிகளையும் அறிந்திருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

* மாணவர்களை வசதியான மண்டபம் ஒன்றிற்கு அழைத்துச் செல்லுங்கள். மாணவர்களிடையே மரபுவழிக்கூத்தின் ஒரு பகுதி, வரலாற்று நாடகங்களின் ஒரு பகுதி, நவீன நாடகங்களின் ஒரு பகுதியினை வீடியோ காட்சி மூலம் தெரியப்படுத்துங்கள். பின்னர், காட்டப் பெற்ற நாடகப் பகுதிகளின் தன்மை, கதை எடுத்துச் செல்லும் பாங்கு போன்றன பற்றிக் கலந்துரையாடி, நவீன நாடகம் எது என வினாவுங்கள். பதிலுக்கான காரணங்களைக் கேட்டு, நவீன நாடகம் பற்றிய தெளிவினை ஏற்படுத்துங்கள்.
* ஐரோப்பியர் வருகையும் அதனால் ஏற்பட்ட ஆங்கிலக் கல்வியும் ஆங்கிலப் பாடசாலைகளும் அவை உருவாக்கிய மத்திய தர வர்க்கமும் காரணமாக தோற்றுவிக்கப்பெற்ற நாடகமரபே இலங்கையின் தமிழ் நவீன நாடக மரபாகும் என்பதைக் கூறுங்கள்.
* இந்நாடக மரபிற்குக் கொழும்பு, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் என்பன கொண்டு வந்து சேர்த்த தனித்துவமான பண்புகளை நோக்குவது முக்கியமானதாகும். இது போன்று ஒவ்வொரு பிரதேசத்திலும் சிறிய விதை போன்று உருவாக்கப்பட்ட நவீன நாடக மரபானது பின்னர் காலத்தின் தேவைக்கு ஏற்ப வேறுபட்ட பரிணாம வளர்ச்சியினைப் பெற்று இருக்கின்றது என்பதனையும் கலந்துரையாடல் மூலம் தெளிவுபடுத்துங்கள்.

## கொழும்பு :

ஈழத்தின் நவீன நாடகத்தின் தந்தையாகக் கருதப்படும் கலையரசு சொர்ணலிங்கத்தின் நாடகங்களும் சினிமாப்பாணியின் செல்வாக்கும் கொழும்பில் நவீன நாடக மரபைத் தோற்றுவித்தன. கட்டிறுக்கமான நாடக எழுத்துருக்கள், இயற்பண்பு வாய்ந்த காட்சியமைப்புக்கள், நடிப்பில் செம்மைப்பாடு போன்றன கலையரசு வழியாகத் தமிழ் நாடக உலகிற்கு அறிமுகமாயின.

கணபதிப்பிள்ளையின் வருகை நவீன நாடக மரபை இயற்பண்பு சார்ந்ததாக மாற்றி அமைந்தது. சமகால சமூகப் பாத்திரங்கள், மண்வாசனையைப் பிதிபலிக்கும் நாடக எழுத்துருக்கள், சமூக முரண்பாடுகளைச் சித்திரித்தல் என்றவாறாக இம்மாற்றங்கள் நிகழ்ந்தன. உடையார் மிடுக்கு நாட்டவன் நகர வாழ்க்கை, கண்ணன் கூத்து, முருகன் திருகுதாளம், பொருளோ பொருள், தவறான எண்ணம் என்பன இவ்வகையில் தயாரிக்கப்பட்ட கணபதிப்பிள்ளையின் நாடகங்களாகும்.

கணபதிப்பிள்ளையைப் போன்று யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு வந்தவர்கள் தங்களது வாழ்க்கை முறையினை மீட்டுப்பார்ப்பதற்கு இந் நாடகங்கள் இடமளித்தன. இலங்கையின் தலைநகரம் கொழும்பு என்பதால் உலகின் பிரசித்தி பெற்ற நாடகக்காரரின் நாடகங்களுடன் பரிச்சயமாதலையும் நாடகப் பயிற்சி பெறுதலையும் இப்பிரதேசம் சாத்தியமாக்கியது. இதன் வெளிப்பாடாகவே நடிகர் ஒன்றியத்தின் தோற்றம் அமைந்திருந்தது. யதார்த்த விரோத மோடிகளின் அறிமுகம், நடிப்பு மற்றும் மேடை உத்திகளின் அறிமுகம், சமூகப் பிரக்ஞை மிக்க நவீன நாடக மரபின் தோற்றத்திற்குக் காலாகியது.

சமூகப் பிரச்சினைகளை நவீன நாடக மரபின் உத்திகளை இணைத்து கொண்டு வெளிப்படுத்துவதில் சிவானந்தனின் விடிவை நோக்கி, காலம் சிவக்கிறது, போன்ற நாடகங்களும் இப்பிரதேச நவீன வளர்ச்சியினை எடுத்துக்காட்டியனவாகும். இலங்கைப் பல்கலைக்கழகத்திலும் நவீன நாடகமரபானது முன்னெடுக்கப்படும் நிலையும் இக்காலத்தில் தோன்றியது. முத்துலிங்கத்தின் சுவர்கள், குடித்தனம், பிரிவுப்பாதை, அ.ந.கந்தசாமியின் மதமாற்றம் போன்றன இவற்றுக்குச் சான்றாகும்.

## யாழ்ப்பாணம் :

யாழ்ப்பாணப் பிரதேச நவீனநாடக மரபானது ஏனைய பிரதேசங்களைப் போன்றல்லாது இடையறாத் தொடர்ச்சியினூடாகப் பல்வேறு பரிணாமங்களைப் பெற்று வளர்ச்சியடைந்து வந்திருப்பதனை அறிய முடிகின்றது. கலையரசு சொர்ணலிங்கத்தினது அரங்கப் பிரவேசத்துடன் தொடங்கப் பெற்று, மேற்கத்தேய அரங்கத் தன்மைகளை உள்வாங்கி, புராண இதிகாசக் கதைகளை முதன்மையாகக் கொண்டு நாடகம் தயாரிக்கும் போக்கு ஆரம்பத்தில் காணப்பட்டது.

பிற்பட்ட காலப்பகுதியில் சமூகப் பிரச்சினைகளை உள்ளடக்கமாக கொண்டு நாடகங்கள் தயாரிக்கப்படலாயின. 1955 இல் கணபதிப்பிள்ளையின் ‘சுந்தரம்’ எங்கே இதற்குச் சான்றாகும். மண்வாசணை, சாதியமைப்பு முறை, சீதனம் போன்ற சமூகப் பிரச்சினைகள் எடுத்துக்கூறப்பட்டன. இதனைத் தொடர்ந்து யாழ்ப்பாணத்தில் தீவிரம் அடைந்த சாதி, வர்க்க வேறுபாடுகளைத் தகர்த்தெறியும் நோக்கில் கந்தன் கருணை, ஏகலைவன், கோபுரவாசல் போன்ற ஆற்றுகைகளை மரபு சார்ந்த வடிவங்களுக்கூடாக நவீன நாடக உத்தி முறைகளை இணைத்துக் கொண்டு தயாரிக்கும் நிலை எழுந்தது.

இக்காலத்தில் நவீன நாடக வளர்ச்சிப் போக்கினை முன்னெடுப்பதில் குழந்தை ம.சண்முகலிங்கத்தினால் ஸ்தாபிக்கப்பட்ட நாடக அரங்கக் கல்லூரியினது செயற்பாடும், பாலேந்திராவினால் தோற்றுவிக்கப்பட்ட அவைக்காற்றுக் கலைக்கழகத்தின் செயற்பாடும்,

முதன்மையானதாக அமைந்தன. சுயநாடக ஆக்கத்தினை முனைப்புறுத்தும் வகையில் சமூக நாடகங்கள், சிறுவர் நாடகங்கள், பாடசாலை நாடகங்கள் போன்றவற்றை நாடக அரங்கக் கல்லூரியினர் தயாரிக்கலாயினர். அத்துடன் நவீன நாடகச் சிந்தனை மரபினை மேம்படுத்த நாடக பயிற்சிப் பட்டறைகளையும் முன்னின்று நடத்தியது. இந்நிலை நாடக ஆர்வலர்களையும், எழுத்தாளர்களையும், புதிய கலைஞர்களையும் உருவாக்கக் காரணமாக அமைந்தது.

அவைக்காற்றுக் கழகமானது தொடர்ந்தேர்ச்சியாகப் பிறநாட்டுப் பண்பாட்டு நாடகங்களை மொழி பெயர்த்து வழங்குவதன் மூலம் மேற்கத்தேய நவீன அரங்கப் பரிச்சயம் ஏற்படும் என்ற பிரதான நோக்கை அடிப்படையாகக் கொண்டு செயற்படத் தொடங்கியது. இப்போக்கானது பிற பண்பாட்டு நாடகங்களையும் அவற்றின் அளிக்கை முறையினையும் அறிகின்ற வாய்ப்பை ஏற்படுத்தியது.

1985 காலப்பகுதியில் மண் சுமர்ந்த மேனியர் ஒற்றுமையினை மையப்படுத்தியும் உயிர்த்த மனிதர் கூத்து, பொய்க்கால் என்பன படிமங்களுக்கூடாக அரசியல், சமூக, பிரச்சினைகளை முன்னெடுக்கும் போக்கிலும் தயாரிக்கப்பட்டன. அதனைத் தொடர்ந்து எந்தையும் தாயும், அன்னை இட்ட தீ என்பன மனித, உளவியல் பிரச்சினைகளை வெளிக் கொணர்வனவாக அமைந்திருந்தன. குறிப்பாக யுத்த வடுக்களினால் பாதிக்கப்பட்ட மக்களது வாழ்க்கை முறையினைப் படம் பிடிப்பனவாக இவை அமைந்தன. இந்நாடகங்கள் அளிக்கை செய்யப்பட்ட முறை, கையாண்ட உத்திகள் நவீன நாடக மரபின் வளர்ச்சியினை இன்னொரு பரிமாணத்துக்கு இட்டுச் சென்றன.

யாழ்ப்பாணத்தில் திருமறைக் கலாமன்றத்தினது செயற்பாடுகளும் நவீன அரங்க அளிக்கை முறைகளை முனைப்புறுத்துவதாக அமைந்தன. இதே போன்று அரங்கச் செயற்பாட்டுக் குழு, க. சிதம்பரநாதனின் தலைமையில் பல புதிய பாணியிலான ஆற்றுகை முறைகளை அறிமுகப்படுத்தியது. தெருவெளி அரங்கின் மூலம் அரசியல் விழிப்பூட்டும் நாடகங்கள் தயாரிக்கப் பெற்றன. இவற்றை விட, நாமிருக்கும் நாடு, நமது செவ்விளக்கு போன்ற நாடகங்களும் சிதம்பரநாதனினால் நெறிப்படுத்தப்பட்டன.

செயல்திறன் அரங்க இயக்கம் பலவகையான நாடகத் தயாரிப்புக்களுக்குக் களம் அமைத்தது. பூச்சிகள் அரிக்கும் கண்ணிமைகள், உயிர் விசை, நெஞ்சுறுத்தும் கானல் போன்ற சமூக சீர்திருத்தப் படைப்புக்களும் சிறுவர்களது உளவியலைப் பிரதிபலிக்கும் சிறுவர் நாடகங்களும் இவர்களால் தயாரிக்கப்பட்டன.

### மட்டக்களப்பு :

மட்டக்களப்புப் பிரதேச நவீன அரங்க மரபு கலையரசு சொர்ணலிங்கம், பேராசிரியர் கணபதிப்பிள்ளை போன்றோரது தாக்கத்திற்கு உட்பட்டதாகவே அமைந்திருந்தது. குடும்பம் ஒரு கோயில், வெற்றித் திருமகள், நீறு பூத்த நெருப்பு என்பன இப்பாணியில் தயாரிக்கப்பட்டனவே. புராண இதிகாசக் கதைகளைக் கருவாகக் கொண்டு நவீன உத்தி முறைகளை உள்வாங்கித் தயாரிக்கப்பட்டன. பின்னர் இயல்பான சமூகக் கதைகளை நாடகமாக்கும் போக்கு முன்னெடுக்கப்பட்டது. மனித வடிவங்கள், சுமைகள், நமது பாதை போன்றன இவற்றுட் சிலவாகும். கிராமங்களை அடிப்படையாகக் கொண்டு எழுந்த மன்றங்கள் இவ்வாறான நாடகங்களை மேடை ஏற்றியன.

இதே காலகட்டத்தில் கிண்டலும், பகிடியும் நிறைந்த வசனங்களைப் பேசி, மக்களைச் சிரிக்க வைப்பதற்கென ஒரு பகுதியினர் நாடகங்களைத் தயாரிக்கலாயினர். நண்டு நவரெத்தினம் இதில் முதன்மையானவராகத் திகழ்ந்தார். இதனைத் தொடர்ந்து சினிமாப் பாணியிலான

நாடக நிகழ்த்துகைகளும், கூத்து அமைப்பிற்குள் நவீன சமூக உள்ளடக்கங்களைப் புகுத்தி உருவாக்கப்பட்ட படைப்புக்களும் எழலாயிற்று.

1990 காலகட்டத்திற்குப் பின்னர் அரங்க வளர்ச்சிப் போக்கானது பல்வேறு தளங்களில் முன்னெடுக்கப்படலாயிறற்று. யாழ்ப்பாணப் பிரதேச நவீன அரங்க வளர்ச்சியானது மட்டக்களப்பிலும் நவீன நாடகச்செயற்பாடுகளை உள்வாங்கி நாடகங்களை தயாரிக்க களம் அமைத்தன. இது போன்று கிழக்குப் பல்கலைக்கழகத்தினதும் சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கை நிறுவனத்தினதும் அரங்கச் செயற்பாடுகள் புதிய முறையிலான நாடக பாணிகளை அறிமுகப்படுத்தியதுடன் அளிக்கை முறையிலும் மாற்றத்தை ஏற்படுத்தியது. பல்கலைக்கழகத்தில் சி. மௌனகுருவியால் தயாரிக்கப்பட்ட புதியதொரு வீடு, இராவணேசன் என்பன நவீன அளிக்கை முறைக்குக் களம் அமைத்துக் கொடுப்பதாய் அமைந்தன. பாலசுகுமாரினால் தயாரிக்கப்பட்ட பாரதி பிடித்த தேர் வடம், புழுவாய் பிறக்கினும், செம்பவளக்காளி, கொங்கைத்தீ போன்றன தெருவெளி அரங்க அறிமுகத்தினையும் மோடியுற்ற நடிப்பு முறையினையும் வெளிப்படுத்துவதாய் அமைந்தன. சூரியா பெண்கள் அமைப்பினால் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் பெண்ணியம் சார்ந்த பிரச்சினைகளை எடுத்துக் கூறுவனவாக அமைந்தன.

சுவாமி விபுலானந்த அழகியற் கற்கை நிறுவகத்தில் மாணவர்களது பரீட்சையினை அடிப்படையாகக் கொண்டு அவர்களால் தயாரிக்கப்பட்ட நாடகங்கள் யதார்த்த, யதார்த்த விரோதப் பண்புகளை வெளிக்காட்டி நிற்பனவாகவும், புதிய உத்திமுறைகளுக்குக் களம் அமைப்பனவாகவும் அமைந்தன. இதே போன்று, அரங்க ஆய்வு கூடத்தினது இராவணேசன், காண்டவதகனம் போன்ற தயாரிப்புக்கள் மரபினை, தொன்மங்களைச் சமகாலத்துடன் இணைத்துக் கூறுவதை முனைப்புறுத்துவதாக அமைந்தது.

## மலையகம்

மலையக நவீன நாடக வளர்ச்சிப் போக்கானது தென்னிந்தியக் கம்பனிகளின் தாக்கத்தினால் அடியிடப்படுகின்றன. கொட்டகை அமைத்து மேற்கத்தேய பாணிகளைப் பின்பற்றி நாடகங்கள் தயாரிக்கப்படலாயின. இதன் தாக்கத்தினால் இந்திய நாடக நடிகர்கள் இங்கு வந்து நாடகங்களில் நடித்ததுடன் நாடகங்களை எழுதும் போக்கினையும் முன்னெடுத்தனர். மலையகம் சார்ந்த சமூகப் பிரச்சினைகள் இதில் முதன்மை வகித்தன. பூகைலாசம், ராஜபாட், இந்திரா காந்தி, இளவரசன் போன்றன இத்தகைய சில தயாரிப்புக்களாகும்.

1950 இற்கு பிற்பாடு திராவிட இயக்கத்தின் தாக்கம் சமூக நாடகங்களை எழுதுவதற்கு வழிவகுத்தது. எம்.ஏ.அப்பாசின் 'கள்ளத்தோணி' இதற்குச் சிறந்த உதாரணமாகும். பின்னர் மலையக மக்களது பிரச்சினைகளைத் தேசிய பிரச்சினையாக எடுத்துக்காட்டும் மரபு இரா.சிவலிங்கம், திருச்செந்தூரன் போன்றோரால் முன்னெடுக்கப்பட்டன. 'சிலைகள்', 'நாணயம்' என்பன இவ்வாறான தன்மையினைக் காட்டுவனவாகும். இதனைத் தொடர்ந்து பல்வேறு நாடக மன்றங்களும். நாடக ஆளுமைகளும் நவீன அரங்க மரபுகளை உள்வாங்கிப் பல்வேறு நாடகங்களைத் தயாரித்து வருகின்றனர்.

## முதன்மைப் பதங்கள் :

- சபா.
- மோடி.
- நவீனம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- வீடியோ, ஓடியோ.
- அட்டைப் படங்கள்.
- கணினி.
- நாடகப் பிரதிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- நவீன அரங்கு என்றால் என்ன என்பதை எடுத்துக் கூறுவார்.
- பிரதேச நவீன அரங்க வளர்ச்சியை எடுத்துரைப்பார்.
- பிரதேச நவீன அரங்க ஆளுமையினரைப் பட்டியற்படுத்திக் காட்டுவார்.
- பிரதேச நவீன அரங்க வளர்ச்சியை முனைப்புறுத்திய நிறுவனங்கள் பற்றி எடுத்துரைப்பார்.

**உசாத்துணைகள் :**

1. அரங்கு ஓர் அறிமுகம் - பேராசிரியர் கா. சிவத்தம்பி. பேராசிரியர் சி. மௌனகுரு. திரு. க. திலகநாதன்.
2. அரங்கியல் - பேராசிரியர் சி. மௌனகுரு.
3. வட இலங்கை நாட்டார் அரங்கு - காரை. செ. சுந்தரம்பிள்ளை.
4. மரபுக்குப் பின் மட்டக்களப்பு நாடகங்கள் - ந. வ. இன்பமோகன்.

**தேர்ச்சி** **5.0:** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானுடநேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** **5.1:** விதந்துரைக்கப்பெற்ற நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு** **5.1.1:** நாடக எழுத்துருவை வாசிப்போம்.

**பாடவேளைகள்** **:** 03

**கற்றற் பேறுகள் :**

- ✶ நாடக எழுத்துருவை அரித்தப்பாங்குடன் வாசித்திருப்பார்.
- ✶ எழுத்துருவை நாடகவியல் அம்சங்களுடன் வாசித்திருப்பார்.
- ✶ எழுத்துருவை வாசித்துச் சொல்லாடும் முறைமை பற்றிக் கலந்துரையாடுவார்.
- ✶ எழுத்துருவை வாசித்து அதன் நாடக வகையை இனங்கண்டிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- ✶ விதந்துரைக்கப்பட்ட நாடக எழுத்துருவான பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை அவர்களின் ‘‘சங்கிலி’’ நாடகத்தை வாசித்து அறிதல் என்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- ✶ பேராசிரியர்.க.கணபதிப்பிள்ளை அவர்களின் படத்தைக் காட்டி அவர் பற்றி விளக்கம் அளியுங்கள்.

கந்தசாமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை (1903-1968)அவர்கள் இலங்கைப் பல்கலைக்கழகக் கல்லூரியில் பயின்று, வெளிநாட்டில் பயிற்சி பெற்று, 1935இல் இருந்து 1965 வரை இலங்கைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த்துறையில் கடமையாற்றினார். விரிவுரையாளர், தமிழ்த்துறைத் தலைவர், தமிழ்த்துறைப் பேராசிரியராகக் கடமையாற்றி 1965 இல் இளைப்பாறினார். பேராசிரியரின் படைப்புத்திறன் வெளிப்பாடுகளில் நாடகம் முக்கியமானதாகும். அவரது நாடகங்கள் சொல்லாடல் நிலைப்பட்டவையாகும். யதார்த்த நிலைப்பட்ட சொல்லாடற் பாங்கைச் சார்ந்தவை. உடையார் மிடுக்கு, முருகன் திருகுதாளம், கண்ணன் கூத்து, நாட்டவன் நகர வாழ்க்கை, பொருளோ பொருள், தவறான எண்ணம், சுந்தரம் எங்கே, சங்கிலி, துரோகிகள் போன்றவை அத்தகைய நாடகங்களாகும்.

- ● சங்கிலி ஒரு வரலாற்று நாடகமாகும்.
- ● யதார்த்த நிலைச் சொல்லாடற் பாங்கில் அமைந்தது.
- ● இலக்கிய நடையும் பேச்சு நடையும் பொருந்தியது.

இலக்கிய நடை - அரசவை உரையாடல்.

பேச்சு நடை - சண்முகம், கந்தையா, உதுமான் உரையாடல்.

- ✶ இந்நாடகம் மூன்று உறுப்புக்களை (முதலாம் உறுப்பில் நான்கு களங்களும் 2ஆம் 3ஆம் உறுப்பில் முறையே ஆறு களங்களும்) கொண்டுள்ளது. இவ்விடயங்களை கருத்திற் கொண்டு வாசிக்க விடுங்கள்.
- ✶ மாணவர்களை விரும்பியவாறு குழுக்களாக்குங்கள். (மாணவரின் எண்ணிக்கைக்கு ஏற்ப) ஒவ்வொரு குழுவையும் அவதானித்து அவர்களுக்கேற்றவாறு மாணவர்கள் தொகையை வரையறை செய்யுங்கள்.

* குழுக்கள் ஒவ்வொன்றும் நாடகத்தின் கதையை அறிந்து கொள்வதற்காக மேலெழுந்த வாரியாக வாசிக்க விடுங்கள்.
* குரலுக்கு அழுத்தம் தரும் வண்ணம் வாசிக்க விடுங்கள்.
* இலக்கிய மொழி, பேச்சு மொழி என்பன வருகின்ற இடங்களில் அதற்கேற்ப வாசிக்க விடுங்கள்.
* பாத்திரங்கள், அரச பாத்திரங்கள் (அரசன், மந்திரி, புலவன், அரசி, தோழி) மற்றும் சமூக பாத்திரங்கள் (ஊரவரும் வியாபாரிகளும்) என்பனவும் இடம் பெறுகின்ற இடங்களில் அந்தந்த பாத்திரங்களுக்கேற்ப வாசிக்க விடுங்கள்.
* நாடகம் ஒன்று வாசிக்கப்படும் போது பாத்திரம் பற்றிய விளக்கம், அப்பாத்திரங்கள் பேசும் முறை, குரலில் ஏற்ற இறக்கம், தொனி என்பவற்றை அவதானித்துக் கவனித்து வாசிக்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்துங்கள்.
* நிறுத்தற் குறிகளை அவதானித்து அவற்றிற்குரிய அர்த்தம் புலப்படுமாறு வாசிக்க விடுங்கள்.
* சாதாரண நிலையில் வாசிக்க விட்டு, பின் நாடக நிலையில் வாசிக்க விடுங்கள்.

### முதன்மைப் பதங்கள் :

- வரலாற்று நாடகம்.
- சொல்லாடற் பாங்கு.
- பேச்சு மொழி.

### தரவிருத்தி உள்ளீடுகள் :

- க. கணபதிப்பிள்ளையின் படம் / இறுவட்டு.
- சங்கிலி - க. கணபதிப்பிள்ளை.
- வாசிப்பு பற்றிய அட்டைகள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடகம் ஒன்றை வாசிக்கும் முறையைக் கூறுவார்.
- க.கணபதிப்பிள்ளை பற்றிக் கூறுவார்.
- வாசிக்கும் போது கவனிக்க வேண்டிய நுட்ப முறைகளை பட்டியற்படுத்துவார்.
- விதந்துரைக்கப் பெற்ற எழுத்துருவை அர்த்தப்பாட்டுடன் வாசிப்பார்.
- தாமாக முன்வந்து பல்வேறு நாடக எழுத்துருக்களை வாசிப்பார்.

### உசாத்துணைகள் :

1. சங்கிலி - க. கணபதிப்பிள்ளை.
2. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நாடகத்திரட்டு - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பதிப்பு கா.சிவத்தம்பி
3. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை - கார்த்திகேசு சிவத்தம்பி.

**தேர்ச்சி** 5.0: நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானிடநேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.1: விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவை நயப்பார்.

**செயற்பாடு** 5.1.2: சங்கிலி நாடகத்தின் கரு, விடயப்பொருள், சொல்லாடற் பாணி, பாத்திரங்கள், மோதுகை என்பவற்றை அறிவோம்.

**பாடவேளைகள்** :

**கற்றற் பேறுகள்** :

- பாத்திரங்களின் இயல்புகளை முன்வைத்திருப்பார்.
- நாடகக் கதையை வாழ்வுடன் தொடர்புபடுத்திக் கருத்துரைத்திருப்பார்
- நாடகம் வெளிப்படுத்தும் செய்தியை விளங்கியிருப்பார்.
- நாடக மோடியை இனங்கண்டிருப்பார்.
- பாத்திரங்கள் குறித்துக் கருத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள்** :

- சங்கிலி நாடக எழுத்துருவின் கரு, விடயப் பொருள், சொல்லாடற் பாணி, பாத்திரங்கள், மோதுகை என்பவற்றை இனங்கண்டு அதன் வழியாக எழுத்துருவை நயத்தலே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- இந் நாடகம் இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்க ஆண்டு விழாவில் அரங்கேற்றுவதற்காகக் க.கணபதிப்பிள்ளை அவர்களால் எழுதப்பட்டது.
- இது இயல்பு மொழி வாத மோடியில் அமைந்த நாடகமாகும்.
- இந் நாடகத்தினை வாசிக்கும் போது, எமக்குப் புலப்படும் கரு 'தேசப்பற்று' எனக் கூறலாம்.
- இந் நாடகத்தின் கதை வரலாறு தழுவியது ஆகும். யாழ்ப்பாணத்தரசன் பரராசசேகரன் மகனாகிய செகராசசேகரன் என்னும் சிங்காசனப் பெயருடன் நாட்டை ஆண்ட முதற் சங்கிலி கி.பி 1514 முதல் கி.பி 1565 வரை ஆட்சி புரிந்தான். அவனது கதையே நாடகமாக்கப்பட்டது. சங்கிலியன் மன்னனுக்கு அரசாட்சி கையளிக்கப்பட்டதன் பின் அவனது வீரம், புகழ், தேசப்பற்றுக் காரணமாக உறுதியாக நாட்டை ஆண்டு வந்தான். ஆயினும், இவனது ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென அவனது அரண்மனையைச் சேர்ந்த அப்பாமுதலியார் சூழ்ச்சிகள் பல செய்து ஆட்சியைக் கவிழ்க்க முற்படுகின்றான். இமையாணன், வீரமாப்பாணன் துணையோடு சங்கிலி அனைத்தையும் எதிர்கொண்டு நாட்டைக் காப்பாற்றுகிறான். பின்னர், தன் காலம் முதல் தன் மகன் புவிராச பண்டாரத்திடம் ஆட்சியை ஒப்படைக்கின்றான்.
- இதன் சொல்லாடற் பாணி யதார்த்த நிலைப்பட்டதாகக் காணப்படுகிறது. அரசனது சொல்லாடலிலும் சரி, பொதுமக்கள் சொல்லாடலிலும் சரி அவ்வாறு காணப்பெறுவதை அவதானிக்கலாம்.
- நீண்ட பட்டியல் கொண்ட பாத்திரங்கள் இடம் பெறுவதைக் காணலாம்.

* பல்வேறு பாத்திரங்கள் இணைந்து கொண்ட போதும் சங்கிலி, அப்பாமுதலி ஆகிய பாத்திரங்களே எதிர்நிலைப் பாத்திரங்களாகத் தென்படுகின்றன. இந் நாடகத்தில் மேலோட்டமாகப் பார்க்கும்போது பறங்கியருடன் நடக்கும் யுத்தம் காணப்பட்ட போதும் சங்கிலிக்கும் அப்பாமுதலிக்கும் இடையிலான முறுகல் நிலைப்பாடே பிரதான மோதுகையாகத் தென்படுகிறது.
* இந் நாடகத்தின் விடயப்பொருளெனக் கருதுமிடத்து, தமிழரசுவாதத்தினை நியாயப்படுத்தும் ஒரு நாடகப் படைப்பாகவே அமைகின்றது. சங்கிலி நாடகத்தில் யாழ்ப்பாண அரசுக்குச் செய்யப்படும் சூழ்ச்சிகளும் அவை பற்றிய மக்கள் நிலைப்பட்ட குறிப்புகளும் அமைந்திருப்பதைக் காணலாம்.
* மேற்படி விடயங்களை மனதிற் கொண்டு கற்றல் கற்பித்தல் முதலியவற்றைக் கீழ்க்கண்டவாறோ அன்றேல் வேறுவிதமாகவோ திட்டமிடுங்கள்.
* சங்கிலி நாடகத்தின் படங்கள் இருந்தால் அவற்றைக் காட்டுங்கள்.
* கதையைச் சுருக்கமாகக் கூறி அவர்களின் உணர்வுகளைக் கேட்டறியுங்கள்.
* நாடகத்தை வாசிக்க விட்டு, அதன் பின்னர் அதன் மோடி பற்றிக் கலந்துரையாடுங்கள்.
* நாடகத்தின் பாத்திரங்கள் மற்றும் அதன் இயல்புகள் பற்றி கலந்துரையாடுங்கள்.
* தங்களுக்கு வசதியாக நான்கு குழுக்களாக பிரித்து,

குழு 1 - நாடகத்தின் கதை

குழு 2 - நாடகத்தின் கரு, விடயப்பொருள்

குழு 3 - நாடகத்தின் பாத்திரங்கள் அத்தியட்சகர்கள்

குழு 4 - நாடகத்தின் மோடி மற்றும் மோதுகை

என்பவற்றை அவர்களுக்கு வழங்கி, தமது குறிப்புப் புத்தகத்தில் எழுதிக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளுங்கள்.

**முதன்மைப் பதங்கள் :**

- சொல்லாடற் பாணி.
- இயற்பண்புவாதம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சங்கிலி நாடக எழுத்துரு.
- A4 தாள்கள், எழுதுகருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- சங்கிலி நாடகத்தில் இடம் பெறும் பாத்திரங்களின் இயல்புகளை முன்வைப்பார்.
- நாடகக் கதையை வாழ்வுடன் தொடர்புபடுத்திக் கருத்துரைப்பார்.
- நாடகம் வெளிப்படுத்தும் செய்தியைக் கூறுவார்.
- நாடக மோடியை இனங்கண்டு கூறுவார்.
- நாடகக் கருவை விளக்குவார்.

**உசாத்துணைகள் :**

1. சங்கிலி - க. கணபதிப்பிள்ளை.
2. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நாடகத்திரட்டு - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பதிப்பு கா. சிவத்தம்பி.
3. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை - கார்த்திகேசு சிவத்தம்பி.

**தேர்ச்சி 5.0:** நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானிட

நேயராகச் சமூக மயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம் 5.2:** விதந்துரைக்கப் பெற்ற நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் நயப்பர்.

**செயற்பாடு 5.2.:** ஆற்றுகை நிலை நயப்பின் போது பாத்திரங்களின் சித்திரிப்பு முறை, மோடி என்பவற்றை அறிந்து கொள்வோம்.

**பாடவேளை :** 04

**கற்றற் பேறுகள் :**

- சங்கிலி நாடக ஆற்றுகையைப் பார்த்துத் தம்மைக் கவர்ந்த விடயங்களை எடுத்துரைப்பார்.
- தமது நயப்பிற்குரிய காரணங்களை எடுத்துரைப்பார்.
- தம்மைக் கவர்ந்த பாத்திரம், எதிர்நிலைப் பாத்திரம் பற்றிக் கருத்துரைப்பார்.
- ஆற்றுகை வெளிப்படுத்தும் முறைக்கூடாக மோடி பற்றிய விளக்கத்தை பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- சங்கிலி நாடக எழுத்துருவானது வாசிக்கப்பட்ட பின்னர் அதனை ஆற்றுகை நிலையில் எவ்வாறு நயப்பது என்பதே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- ஆற்றுகையின் போது நாடகத்தின் கதை, கரு, பாத்திரங்கள், சொல்லாடல் முறைமை, காட்சி, இசை, ஒளி, வேட உடை, ஒப்பனை போன்ற இன்னோரன்ன விடயங்கள் நயப்பிற்குள்ளாகும்.
- எழுத்துரு அடிப்படையில் அமைந்துள்ள பல விடயங்கள் அளிக்கையின் போது சிறப்பாக வெளிப்படும். உதாரணமாக, பாத்திரங்கள் வெளிப்படுத்தும் நடிப்பு முறைமை பார்ப்போரைக் கவரவல்லன.
- சங்கிலி ஒரு பெருந்தலைவன், படைத்தளபதி, போர்வீரன் என்கின்ற விடயங்கள் அவன் கல்யாணிக் குதிரையில் வருகின்ற போது பெருங்காட்சிப் பண்பாக வெளிப்படும்.
- சங்கிலியில் பேச்சுக்கள், உரையாடல்கள், யுத்தம் புரியும் முறைமை என்பனவும் ஏனைய பாத்திரங்களுடன் (தந்தை, தமையன், அரசி, வடிவழகி, வீரமாப்பாணர், இமையாணன், அப்பாமுதலி, அரசகேசரி மற்றும் பிறர்) ஊடாட்டமும் தொடர்ந்து சென்று முடியும்.
- அப்பாமுதலியாக நடிப்பவரும் தமது சூழ்ச்சிகள், பேச்சுக்களால் சரியான முறையில் பார்ப்போரால் கவரப்படுவார்.
- வியாபாரம் செய்ய வந்த பறங்கியரும் ஊர்மக்களும் தொடர்பாடும் முறை வியாபாரிகளைக் கேலி செய்யும் ஊர்மக்கள் தொடர்பான காட்சிகள் சிரிப்பூட்டும்.
- சங்கிலி, அப்பாமுதலி, வீரமாப்பாணர், இமையாணன், இராசமாதேவி வடிவழகி, பறங்கியர், ஊர்மக்கள் போன்றோர் நாடகத்தில் முக்கிய பாத்திரமாவார்.

* காக்கை வன்னியன், தொம்பிலிப்பு, அப்பாமுதலி போன்ற பாத்திரங்கள் கைது செய்யப்படும் போது மக்கள் ஆதரவளிக்கும் போதும் பார்ப்போரும் அதற்கேற்பத் துலங்குவர்.
* சங்கிலியும் அப்பாமுதலியுமே பிரதான எதிர்நிலைப் பாத்திரங்கள் ஆவார்.
* ஆற்றுகையின் போது இயல்பு நெறிவாதம் மேற்கிளம்புவதைக் காணலாம்.
* வரலாற்று நாடகம் என்ற வகையில் பாடல்கள், உரையாடல்கள் என்பன இயல்பாகக் காணப்படுகின்றன.
* இந்நாடகத்தில் யாழ்ப்பாணத்து அரசன் அவைக்களம், அரசன் அவைக்களத்து வாசற்புறம்,அப்பாமுதலி வீட்டுப் பூங்கா, அப்பாமுதலி வீடு, நல்லூர்த் தெரு, பறங்கியர் கோட்டை, நல்லூர்க் கோட்டையின் மேற்கு வாசற்புறம் போன்ற இடங்கள் காட்சி அமைக்கப்பட்டிருக்கும்.
* இக்காட்சிகள் யதார்த்தமாக அமைக்கப்பட்டிருக்கும்.
* காட்சிகள் பகலிலும் மாலையிலும் காட்டப் பெறுகின்றன. (அதற்கேற்ப ஒளி அமைக்கப்படும்.)
* வேட உடைகள், ஒப்பனையும் வரலாற்று ரீதியாகச் செய்யப்பட்டிருக்கும்.

### செயலொழுங்கு 2 :

* இவை போன்ற பல விடயங்களை மாணவர்களுடன் கலந்துரையாடிய பின்னர் ஒவ்வொரு மாணவரும் தனித்தனியே அறிக்கைகளை ஒப்படைகளாகச் செய்வதற்கு வழிப்படுத்துங்கள்.

### முதன்மைப் பதங்கள் :

- எதிர்நிலைப் பாத்திரம்.
- மோடி.

### தரவிருத்தி உள்ளீடுகள்

- சங்கிலி - நாடக எழுத்துரு.
- சங்கிலி தொடர்பான படங்கள்.
- தாள்கள், எழுதுகருவிகள்.

### கணிப்பீடும் மதிப்பீடும் :

- நாடக எழுத்துருவை ஆற்றுகை நிலையில் பார்த்துத் தம்மைக் கவர்ந்த விடயங்களை எடுத்துரைப்பார்.
- நயப்பிற்குரிய காரணங்களைப் பட்டியற்படுத்துவார்.
- தம்மைக் கவர்ந்த பாத்திரங்களைக் குறித்துரைப்பார்.
- நாடகத்தின் மோடியை இனங்காண்பார்.
- நாடக ஆற்றுகையால் மகிழ்வுறுவார்.

### உசாத்துணைகள் :

1. சங்கிலி - க. கணபதிப்பிள்ளை
2. பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நாடகத்திரட்டு - பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை, பதிப்பு கா. சிவத்தம்பி

**தேர்ச்சி** 5.0: நாடகத் தோற்றப்பாடுகளை அழகியல் ரீதியில் நயக்கும் மானிடநேயராகச் சமூகமயமாகும் திறனை வெளிக்காட்டுவார்.

**தேர்ச்சி மட்டம்** 5.3: நாடகப் படைப்பை நயத்தல் நிலையில் நின்று விமர்சிப்பார்.

**செயற்பாடு** 5.3: சங்கிலி நாடகத்தைப் பார்த்து அதுபற்றிப் பகுப்பாய்வு செய்வோம்.

**பாடவேளை** : 02

**கற்றற் பேறுகள் :**

- நாடகம் தொடர்பில் நடுநிலையில் நின்று கருத்தை வெளிப்படுத்துவார்.
- விமர்சன ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்யும் திறனைப் பெற்றிருப்பார்.
- நாடகத்தினைப் பார்க்கும் ஆர்வத்தினைப் பெற்றிருப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவுறுத்தல்கள் :**

- விதிக்கப்பெற்ற நாடக எழுத்துருவான சங்கிலி நாடகத்தை ஆற்றுகை நிலையில் பார்த்து அவை பற்றிய கருத்தை வெளிப்படுத்தலே இங்கு எதிர்பார்க்கப் பெறுவதாகும்.
- ஒரு நாடகத்தைப் பார்த்து அபிப்பிராயம் கூறுதல் என்பதும் கருத்துக் கூறல் என்பதும் ஒன்றுதான். இதனை விமர்சனம் எனக் கூறமுடியாது. ஆகவே கருத்துக்களைக் கூறி அபிப்பிராயங்களை உரைத்து, கலந்துரையாடி, பகுப்பாய்வு செய்தலே விமர்சனம் ஆகும்.
- மதிப்பீடு என்பதும் ஓரளவிற்குப் பொருந்தும். ஆயினும் இங்கு கலைஞர்களும், பார்ப்போரும் கலந்துரையாடுவது ஆகும்.
- நாடக விமர்சனம் என்பது அகவயம் சாராது புறநிலையில் நின்று, தாம் பார்த்த நாடகத்தை அதன் ஆற்றுகை நிலையில் நின்று ஆக்கபூர்வமாக எடுத்துரைத்தல் ஆகும்.
- எடுத்துரைக்கும் போது, நாடகத்தை ஆற்றுகை நிலையில் நின்று பகுப்பாய்வு செய்தல் வேண்டும்.
    - நாடக எழுத்துருவின் கதை.
    - வரலாற்று நாடகத்தின் பண்புகள்.
    - நாடகத்தின் மோடி.
    - நாடகத்தின் கரு, கதை, விடயப் பொருள் வெளிப்பட்ட விதம்.
    - நடிகரும் ஏற்றுக் கொண்ட பாத்திரங்களும் கையாண்டு கொண்ட மொழி.
    - நாடகத்தின் பெருங்காட்சிப் பண்பு.
    - துணைக் கலைஞரின் பங்காற்றுகை.

        வேட உடை ஒப்பனை.

        காட்சி.

ஒளி.

இசை, சத்தங்கள்.

- மேடைப் பொருள்கள், கைப்பொருள்களின் பாவனை
- பார்ப்போரின் துலங்கல்கள்

போன்ற பல விடயங்களை அவதானித்த பின்னரே பகுப்பாய்வு செய்ய வேண்டும்.

* இத்தகைய பகுப்பாய்வு, எதிர்காலத்தில் மேலும் சிறந்த நாடகங்களை மேடையிட வசதிசெய்து கொள்ளும்.
* பகுப்பாய்வின் ஊடாகப் பல்வேறு நாடகங்களை, பார்க்கும் ஆவலைத் தூண்டும்.
* இவ்வாறான விடயங்களைக் கலந்துரையாடிய பின்னர், மாணவர்களை 4 குழுக்களாக்கி அவர்கள் பார்த்த வரலாற்று நாடகங்கள் அன்றேல் சமூக நாடகங்களில் ஏதாவது ஒன்று பற்றி ஒவ்வொரு குழுவும் விமர்சன அறிக்கை ஒன்றை முன்வைப்பார்.
* ஒவ்வொரு குழுவின் முன்வைப்பின் போதும் அவர்களின் விமர்சனப் பாங்கு தொடர்பாக ஆசிரியரும் ஏனைய குழுக்களும் கலந்துரையாடுவது வரவேற்கத்தக்கது. அவ்வாறு ஏற்கெனவே கற்ற வெடியரசன், யாழ்பாடி, பண்டாரவன்னியன் போன்ற வரலாற்று நாடகங்களையும் பகுப்பாய்விற்கு எடுத்துக் கொள்ளலாம்.

குழு 1 - பண்டாரவன்னியன்.

குழு 2 - யாழ்பாடி.

குழு 3 - வெடியரசன்.

குழு 4 - உலக நாச்சியார், குளக் கோட்டன்.

**முதன்மைப் பதங்கள் :**

- அபிப்பிராயம்.
- மதிப்பீடு.
- விமர்சனம்.

**தரவிருத்தி உள்ளீடுகள் :**

- சங்கிலி நாடக ஆற்றுகை.
- வரலாற்று நாடக ஆற்றுகை.
- A4 தாள் மற்றும் எழுது கருவிகள்.

**கணிப்பீடும் மதிப்பீடும் :**

- நாடகம் தொடர்பில் நடுநிலையில் நின்று கருத்துக்களை வெளியிடுவார்.
- நாடக எழுத்துருவைப் பகுப்பாய்வு செய்வார்.
- விமர்சன ஆற்றலை வெளிப்படுத்துவார்.
- நாடகங்களைப் பார்க்கவும் விமர்சிக்கவும் தூண்டப்படுவார்.
- நாடக விமர்சனத் தொகுப்பு ஒன்றை வெளியிடுவா

**உசாத்துணைகள் :**

1. சங்கிலி நாடகம் - க.கணபதிப்பிள்ளை.
2. நாடகம் - பதிப்பும் பார்வையும் - சி. அண்ணாமலை.
3. அரங்கம், அரசியல், அழகியல் - அ. மங்கை.
4. வெளி இதழ் தொகுப்பு - வெளி ரெங்கராஜன்.